# நாலடியார் செய்திகள்


ரா.சீ

# நாலடியார் செய்திகள்

பேராசிரியர்
டாக்டர் ரா. சீனிவாசன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

அணியகம்
சென்னை-30.

முதற்பதிப்பு அக்டோபர் 1994



நூல் தலைப்பு — நாலடியார் செய்திகள்
ஆசிரியர் — ரா. சீனிவாசன்
தாள் — 11.6 மாப்லித்தோ
புள்ளி — 10pt
பக்கம் — 184

விலை ரூ. 20/-

வெளியீடு : அணியகம்,
5, செல்லம்மாள் தெரு,
சென்னை-600 030.

அச்சகம் : அணியகம் அச்சகம்,
16/1 கந்தன் தெரு, சென்னை-600 030.

V.P.P. செலவு இனாம். தனிப் பிரதிகளுக்குக் கடிதம் எழுதலாம்.

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| கம்ப ராமாயணம் | 30-00 |
| மாபாரதம் | 30-00 |
| சீவக சிந்தாமணி | 25-00 |
| திருவிளையாடற்புராணம் | 20-00 |
| கண்ணனின் திருக்கதை | 15-00 |
| நளன் தமயந்தி | 15-00 |
| திவ்விய பிரபந்த சாரம் | 15-00 |
| திருப்பாவை—விளக்கவுரை | 20-00 |
| திருக்குறள் செய்திகள் | 25-00 |
| தமிழ் இலக்கிய வரலாறு | 16-00 |

## நாவல்கள்

| | |
|---|---|
| நவீன தெனாலிராமன் | 10-00 |
| குப்பைமேடு | 25-00 |
| படித்தவள் | 25-00 |

# முன்னுரை

'நாலடியார் செய்திகள்' என்ற தலைப்பு இந்நூலுக்குத் தந்திருக்கிறேன். காரணம் இதற்கு முன் எழுதிய நூல் 'திருக்குறள் செய்திகள்' என்ற தலைப்பைப் பெற்றதே ஆகும்.

நாலடியார் மிகப் பழைய நூல்; சங்க இலக்கியத்தை அடுத்துப் பிற்பட்டு எழுதிய நூல் இது. இது பல புலவர்கள் பாடி வைத்த செய்யுள்களின் தொகுப்பு ஆகும். திருக்குறளை ஒட்டி இந்நூலுக்கு அதிகாரத் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வோர் அதிகாரத்துக்குத் திருக்குறளைப் போலவே பத்துப்பத்துச் செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன; மற்றும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளையும் பெற்றுள்ளது. காமத்துப்பால் செய்தி ஒரே அதிகாரத்தில் மட்டும் கூறப்பட்டுள்ளது.

நாலடியாரின் சிறப்பு அப் பாக்கள் பெற்றுள்ள உவமைகளே என்று கூறலாம். அனுபவம் வாய்ந்த செய்திகளையும், மக்கள் வழங்கி வந்த உவமைகளையும் தக்க இடங்களில் எடுத்து ஆண்டுள்ளமை இந்நூலுக்கு அழகும் சுவையும் தருகின்றது. திருக்குறள் ஈரடி கொண்டது. இது நான்கடி கொண்ட வெண்பாப் பாட்டு.

புலவர்கள் கவிதை அழகில் ஈடுபட விரும்புவர். மூல நூலைக் கற்றுப் பயன் பெறுகின்றனர். கவிதையோ உரைநடையோ இவை வடிவ வேறுபாடுகள்; செய்திகளே நூலின் உயிர்நாடி; அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அறியும் ஆர்வம் இதில் ஈடுபடச் செய்கிறது. அவற்றைப் பிறருக்கு எடுத்துக் கூறவேண்டும் என்ற

ஆர்வம் நூல் எழுதக் காரணம் ஆகியது. செய்யுளுக்கு உரை தரும் நூல்கள் தொடர்ந்து வந்துள்ளன. அவை செய்யுளைப் படித்துப் பொருள் அறியத் துணை செய் கின்றன. தொடர்ந்து படிக்கப் பொறுமையும் இலக்கியப் புலமையும் தேவைப்படுகின்றன. அவை ஒரு சிலரே படிக்க முடியும்.

கற்றோரும், புலமை நிரம்பாதவரும் அறியும் வகையில் இச் செய்திகளைக் கூறினால் அவர்கள் பயன் அடைவர்; நூல் தரும் கருத்துகள் சிந்தனைகளைத் தூண்டவல்லன. ஒரே செய்யுளை வைத்து ஒரு சிறு கதை எழுதமுடியும்; ஏன் தொடர்கதையும் எழுதமுடியும். அருமையான கருத்துகள் இதில் உள்ளன. அவற்றைத் தொடர்ந்து எழுதினாலேயே கதை படிப்பது போன்ற சுவையும் அமைகிறது.

இதை எடுத்துச் சொல்வதற்கு ஆசிரியப் பயிற்சி தேவை; ஆசிரியத் தொழில் என் பழைய தொழில்; அதனை இன்னும் விடவில்லை; எழுதி மற்றவர்களுக்கு வெளியிடு கிறேன். அக் கருத்துகளை இன்றைய வாழ்க்கையோடும் நிகழ்ச்சிகளோடும் தொடர்புபடுத்திக் கூறும்போதே அவை விளக்கம் பெறுகின்றன. அதனால் நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திச் செய்திகள் தரப்பட் டுள்ளன.

அடிப்படையில் நாலடியார் தரும் செய்திகள் ஆழம் மிக்கவை. அனுபவம் மிக்கவை; அறிவுரைகள்; அறவுரை கள். அதனால் கருத்து ஆழம் கொண்டது இந்நூல்; அதற் குத் துணையாக என் உரைநடை புதிய வடிவம் தாங்கி வாசகரைப் படிக்கத் தூண்டும் இயல்பு பெற்றுள்ளது.

என் உரைநடை ஆற்றல் மிக்கது; ஓசை நயமும் கவிச் சுவையும் கொண்டது. வாசகர்களை ஈர்க்கும் இயல்பினது. அதுவே ஓர் இலக்கியம் ஆகிறது. நாலடியார் செய்யுள்கள் 400. அவை அச்சில் இடம் பெற்றால் 60 பக்க அளவில் அடங்கும்; இந்நூல் 184 பக்கம் கொண்டுள்ளது என்றால் உரைநடை விரிவு பெறுவது இயல்பு; மற்றும் விளக்கம் பெறுகிறது. மூல நூல் இன்றிச் செய்திகளை மட்டும் அறிய உதவுகிறது. நூலின் உவமைகளோடு இந்நூல் புதிய உவமைகளையும், சிறு நிகழ்ச்சிச் செய்திகளையும் சிறுகதைகளையும்,பெற்று விரிவு பெற்றுள்ளது. அதனால் இலக்கியத்தரம் பெறுகிறது.

ஒரு நாவல் படிப்பது போன்ற அமைப்பைத் தர முடிந்தது. தலைப்புகள் நூல் பழைய தலைப்புகளோடு புதிய தலைப்புகள் நூலுக்குக் கவர்ச்சியைத் தருகின்றன. 'தூயது அன்மை' என்பது நூல்தலைப்பு. இதற்கு எளிய நடையில் தரப்பட்ட தலைப்பு.'இவளா அழகி?யோசித்துக் கூறு' என்பதாகும். செய்யுள் அடிகளும் வழக்காற்றுச் சொற்களும் தலைப்பாகத் தரப்பட்டுள்ளன.

தொடர்ந்து சில நூல்கள் எழுதிவருகிறேன். கம்ப ராமாயணம், மாபாரதம், சீவக சிந்தாமணி, திருக்குறள் செய்திகள் இவற்றோடு இந்நூல் சேர்கிறது. அரிய எழுத்துப் பணி செய்த மனநிறைவோடு இந்நூலை வெளியிடுகின்றேன்.

இதற்கு அணிந்துரை தருவது என்றால் அவர்கள் இவற்றோடு இதில் உள்ள நயங்களை எடுத்துக்காட்டக் கூடும். அங்கதம் எழுத்துக்குத் துடிப்பைத் தருவது ஆகும். பிறர் மனம் நோகாமல் அதே சமயம் குறைகளைச் சுட்டிக் காட்டுவது அங்கதம் ஆகும்.

இன்றைய டி.வி.யில் நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு வினாக்களைத் தொடுத்துப் பரிசுகள் தரும் பழக்கத்தைப் புகுத்தி உள்ளனர். இதைச் சுட்டிக் காட்டும் வகையில் என் எழுத்திலும் இந்த உத்தியை எடுத்து ஆண்டுள்ளேன். இஃது அங்கதம் ஆகும்.

எதுகை மோனை நயங்கள் தமிழுக்கு உரிய தனி அழகு; அவற்றைத் தக்க வகையில் அமைத்துள்ளேன். சில புதிய சொற்களையும் துணிந்து படைத்துள்ளேன் சுவைக்காக.

தொடர்ந்து படிக்கக் கூடிய வகையில் கருத்துகள் ஆற்று வெள்ளம் போல வருவது இந்நூலின் சிறப்பாகும்.

'திருக்குறள் செய்திகள்' விரிவாக எழுத அந்நூல் இடம் கொடுக்கவில்லை. இதில் விரிவாக எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. என் முழு ஆற்றலையும் இந்நூல் எழுதப் பயன்படுத்தி இருக்கிறேன். விமரிசனம் வாசகர் களுக்கு விட்டு விடுகிறேன்.

ரா. சீனிவாசன்

# நாலடியார் செய்திகள்

## அறத்துப்பால்

### 1. செல்வம் நிலையாது

(செல்வம் நிலையாமை)

அன்பு மனைவி அருகிருந்து ஊட்டுகிறாள்; சுவை ஆறு என்பதை அவன் அறிகிறான்; ''உண்க அடிகள்!'' என்று உணர்த்துகிறாள்; வயிறு நிறைகிறது; மனம் குளிர் கிறது; வாழ்க்கை தளிர்க்கிறது; எதுவும் இனிக்கிறது; இவை அன்று; இன்று செல்வம் அழிந்தது; அஃது அவனை ஒழிக்கிறது; 'வறியவன்' என்று வாழ்வோர் உரைக்கின்ற னர்; கூழுக்காகக் கையேந்தி நிற்கிறான்; பிறர் வீட்டுப் படிக்கட்டு ஏறும்போதுஎல்லாம் அந்த வீட்டு மகள் அவ னுக்குத் தாயாகிறாள்; ''அம்மா தாயே!'' என்று அழைக் கிறான்; அவள் ''ஏன்யா! என்ன தேவை?'' என்கிறாள். முன்பு உணவு சுவைத்தது; இன்று கைவிரல்கள் சுவைக் கின்றன. அவன் குழந்தையாகிக் கைவிரல்களைச் சப்பு கிறான்; காலம் பார்த்தாயா! எப்படி இருந்தவன், எப்படி ஆகிவிட்டான்? செல்வ வாழ்க்கை முன்பு; அல்லல் சேர்க்கை இன்று. செல்வம் நிலைக்கும் என்று செருக்குக் கொள் ளாதே; ஒரு பருக்கைச் சோற்றுக்குத் தெருத் தெருவாக அலையும் காலம் வரும். பணம்! அதனை அடக்கிஆள

வில்லை என்றால், பின்னால் வருந்துவாய்; மதம் கொண்ட யானை! அது இன்று கைவிட்டுச் சென்றுவிட்டது; நிதமும் அறம் செய்து வாழ்ந்திருந்தால், அவன் அழிந்திருக்கமாட்டான்; அறம் அவனை அரவணைத்திருக்கும்; துணை நின்றிருக்கும். அறத்திற்கு இணை வேறு யாதும் இல்லை.

அறம் செய்து வாழ்ந்திருக்க வேண்டும்; நீ செய்த தவறு என்ன? நீயும் உன் மனைவியும்மட்டும் மகிழ்ந்து உண்டீர்; அரிசிச்சோறுதான்; வரிசைப்படுத்திச் சுற்றத் தவரோடு அதனை உண்க; அந்த மகிழ்ச்சி உனக்குப் புகழ்ச்சி; செல்வம் தட்டை அன்று; உருளை; அஃது உருண்டு கொண்டே செல்லும்; வண்டியின் சக்கரமாய் இடம் மாறும்; உள்ளபோது உவந்து உண்க; உறவினரோடு உண்க.

அதோ, அவன் எப்படி வாழ்ந்தான் தெரியுமா? ''பட்டத்து யானைமீது பகட்டாகச் செல்பவன்; சேனைத் தலைவன்'' என்று ஏனையோரை மருட்டினான்; இன்று அவன் பகைவரிடம் சிறைப்பட்டுவிட்டான்; நிறையுடைய அவன் பத்தினி பகைவன் கைப்பட்டுவிட்டாள். கட்டிய வளை இழந்து, ஒட்டிஉறவாட உறவினரும் இன்றி, இன்று ஆடி அசைந்து நாடி தளர்ந்து உலவுகின்றான். யாராவது நம்புவார்களா? இவன் ஒரு காலத்துப் பேரரசன் என்றாவது சொல்வார்களா? அன்று இவன் நாடாண்டான்; இன்றோ அவனை வறுமை ஆள்கிறது; அன்று காலாட்டினான்; இன்றோ காலம் அவனை ஆட்டிவைக்கிறது; காரணம் செல்வம் இழந்தான்.

''நிலைத்தது'' என்று நினைத்தாய்; ''அசைக்க முடியாது'' என்று இசைத்தாய். நின்று நிலைத்தவை எல்லாம் சுன்றி மறைந்துவிட்டன; அவை வரலாற்றுச் செய்திகள் ஆகி வருகின்றன.

அதோ, அவனைப் பார்; கஞ்சப் பயல்! ஓசி கிராக்கி! காசு கொடுத்து எதையும் அவன் வாங்கி உண்ண மாட்டான்; 'எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம்' என்பான்; பில் பணம் கொடுக்கும்போது மெதுவாகக் கை கழுவச் சென்றுவிடுவான். பணம் தருவதிலிருந்து இடம் நழுவி விடுவான்.

''நாலு நல்ல காரியம் செய்ய வா'' என்றால் 'அது நமக்கு ஆகாது' என்பான்; 'ஒத்துக்காது' என்பான். ஒளிதரும் செயல்களைச் செய்யமாட்டான். ''புகழ் அடையச் செயல்படுக; இல்லாவிட்டால் நின் பிறப்பே தேவை இல்லை'' என்று வள்ளுவர் அடித்து அடித்துக் கூறுகிறார் 'புகழ்' அது தேவை இல்லை! என்று இகழ்கிறான். பசிக்கு அலையும் பரதேசிகள்! வசிக்க வழியின்றி வந்து அடையும் விருந்தினர்; சுற்றத்தினர்! அவர் உற்ற துயரைக் களைய மாட்டான்; இவன் மனிதனா? ''மகனே! நீ, ஏன் பிறந்தாய்? இந்த உலகத்துக்கு நீ சுமை'' என்று தாய்மை வினவுகிறது.

உடுத்துகிறானா! ஒன்றையே மாற்றிமாற்றி மடுத்துகிறான்; தோய்த்துத் தோய்த்து அது காவி ஏறிவிட்டது. பளிச்சென்று அவன் வெளிச்சத்துக்கு வருவதில்லை. வெள்ளிக்கிழமை! அன்று விரதம்தான்; ஞாயிற்றுக்கிழமையையும் அவன் வெள்ளிக்கிழமை யாக்கிவிடுகிறான்; அவன் வீடே ரேஷன் கடை ஆகிறது; பிறர் கையேந்தி நிற்கிறார்; கட்டி இருந்த நாய்! அதனை அவிழ்த்துவிட்டு அவர்களை விரட்டி ஓட்டுகிறான்; 'கொடுப்பது என்பது தன்னைக் கெடுப்பது' என்று கருதுகிறான்; சேமிப்பு என்று சேர்த்து வைத்த நிதி இழந்து நிர்க்கதி யாகிறான்; செல்வம் நிலைக்காது. இவன் ஒரு தேனீ; தேடியதை இழப்பான்.

தேனீ என்ன செய்கிறது; உழைத்துச் சேகரிக்கும்; தானும் உண்ணாது; பிறரையும் அண்டவிடாது; காத்

திருந்த பெண்ணை நேற்றுவந்தவன் அடித்துச் சென்று விடுகிறான்; கட்டிக் காத்தும் பயன் இல்லை; அவன் வாழ்க்கை வெற்று வேட்டாகிறது; இப்படித்தான் பலர் தேன்ஈயாக வாழ்கிறார்கள்; ஏன் என்று கேட்டால் அதற்கு விடை இல்லை.

## 2. இளமை நிலையாது
### (இளமை நிலையாமை)

கறுப்பு நிறத்து அழகி; விருப்புற்று அவள்பின் அலை கிறான்; அவனுக்குச் சுருட்டைமயிர்; மருட்ட அதனை வாரி முடிக்கிறான்; 'அழகன்' என்று தான் அவளிடம் சென்று குழைகிறான்; "அட அறிவிலி! இந்த முடி நரைக் கும்; வெளுக்கும்; மற்றவர்களைப் பார்த்துச் சிரிக்கும்.

இளமை உன் சொத்து; அதனைப் பத்திரப்படுத்து; பவித்திரமான செயல்களைச் செய்க; பாபம் பழி இவற்றை நாடி மருளாதே. இளமையிலேயே சுகங்களைத் துறக்கப் பழகு; அது உனக்கு மிகவும் நல்லது. குழவிப் பருவத்தி லிருந்தே பற்றுகளை நீக்குக; துறவு! அதனொடு நீ உறவு கொள்க.

"நீ ஓர் ஆண் அழகன்; செல்வன்; அதனால் உன்னைச் சுற்றிப் பெண்விழிகள் வட்டமிடுகின்றன; நண்பர்கள் சுற்றி வருகின்றனர்; அன்பு காட்டி அகமகிழ்கின்றனர். இந்த வாழ்வு என்றும் நிலைக்குமா? உன் சுருள் முடி திரை இடுகிறது; கறைபடிகிறது; முதுமைக்கு உன்னை இழுத்துச் செல்கிறது; நோய் உனக்கு நெருங்கிய நண்பன்; வைத்தி யன் இடுக்கண் களைய மறுக்கிறான்; கைவிரித்துவிடு கிறான்; வந்தவர், கூடி இருந்தவர், "சீசீ இந்தப் பழம் புளிக்கும்" என்று கூறும் குள்ளநரிகளாகின்றனர்; உன்னை விட்டு விலகுகின்றனர்.

சாவு வெற்றி கொள்கிறது; சங்கு முழங்குகிறது; இது தான் உன் வாழ்வு; இப்பொழுது இளமை வளர்பிறை; பின் தேய்பிறை; முடிவு இருள்நிறை அமாவாசை.

"பள்ளிக்குச்சென்றவன் வருவான், விரைந்து கொள்ளி போட," என்று காத்திருக்கிறார்கள் அவன் சுற்றத்தினர்; வேகாத உடம்போடு ஏகாதே வைத்திருக்கிறார்கள். அவள் அவனுக்குத் தாய்; தாய்க்கு அவன் தலைப்பிள்ளை; அவன் என்ன சொல்கிறான்?

"இவள் எனக்குத் தாய்! இவள் எங்கே சென்றாள், தனக்குத் தாயாகிய ஒருத்தி இருக்கும் இடம் தேடிச் சென்றாள்; அவள் தாய், தன் தாயை நாடிச்சென்றாள், இப்படி தாய் சென்ற இடங்களுக்குத் தாவிச் சென்றுவிட்டனர். அழுது பயன் இல்லை" என்று ஆறுதல் அடைகிறான். நிலையாமை எது என்று அந்த இளமை உணர்கிறது.

வெறிஆடும் களத்திற்குச் செம்மறி ஆட்டை அந்த நெறி கெட்ட பூசாரி, கயிறு கட்டி இழுத்துச் செல்கிறான், கையில் பசுந்தழை காட்டி, அதன்பசியைமூட்டிவிடுகிறான். பூசாரியை ஆடு நம்புகிறது; எதுவும் சிந்தியாமல் அவன் பின் செல்கிறது. வாலிபப் பிள்ளைகள்! இவர்களுக்கு யார் என்ன சொல்ல முடியும்? மயக்கம்! அவர்கள் காட்டுவது இல்லை தயக்கம்; விரும்புகின்றனர் மகளிர் முயக்கம்; அவர்கள் கதை? முடிவு? நாம் ஏன் சொல்வோம் அதனை; மயக்குகிறாள் ஒரு மாது; அழிகிறான் இந்தச் சாது; இது இவன் வாழ்க்கைக்கு ஒவ்வாது.

'வேல் கண்ணள் இவள்' என்று கருதி, அவள்பின் செல்கிறான்; அவள் ஒரு காலத்தில் கோல் கண்ணள் ஆவது உறுதி; கோல் ஊன்றி நடக்கப்போவது இறுதி; இஃது அவனுக்கு மறதி.

இவனும் கிழம்; முதிர்ந்துவிட்ட பழம்.

"ஏன்யா! எப்படி இருக்கிறாய்? பல் என்ன செய்கிறது?"

"பல்லவி பாடுகிறது!"

"சோறா கஞ்சியா ரொட்டியா?"

"வெறும் இட்டலிதான்".

"எழுபதா எண்பதா?" இது வயதைப் பற்றியது.

இப்படிக் கேட்ட காலம் பழைய காலம்; இப்பொழுது சர்க்கரை; கொழுப்பு, இரத்தக் கொதிப்பு இவற்றிற்கு இப்பொழுது எடைகள், அறிவுக் கருவிகள், திசை காட்டுகின்றன.

முதியவர்களைப் பார்த்து மற்றவர்கள் கேட்கும் வினாக்கள் இவை. அவர்களுக்கே பதில் சொல்லிச்சொல்லி அலுத்து விடுகிறது. வேறு என்ன வினவ முடியும்? பிள்ளைகள், பேரன்கள், பேர்த்திகள் என்று கேட்டு அலுத்துவிட்டனர்.

இந்த உடம்பினைத் தவிர்த்து வேறு கேள்விகளில் அவர்கள் தடம் புரள்வதில்லை; அவர்கள்நோக்கம் என்ன? ஏன் இப்படிக் கேட்கிறார்கள்? "அவன் உலகுக்குச் சுமை; ஏன் இப்படி இழுபறியாக இருக்கிறான்?" என்பதுதான்.

இளமை நில்லாது; முதுமை விலை போகாது; யாரும் மதிக்க மாட்டார்கள்; இஃது இயற்கையின் நியதி.

"சரி; வயது ஆகட்டும் காலம் வரும்; பிறகு தருமம் செய்யலாம்; இப்பொழுது வளமாக வாழலாம்" என்று இயம்புகிறான்.

இறுமாப்பு உடைய இளைஞன் அவன்.

'தம்பீ !' காற்றடித்தால் பழம்மட்டும் உதிர்வது இல்லை; செங்காயும் சிதைகிறது; உதிர்கிறது; நீண்ட நாள் வாழ்வது உறுதி இல்லை; அதனால், முடிந்த, வாய்ப்புள்ள நாள்களில் எல்லாம் அறம் செய்க! அதுவே தக்கது.

"ஆள் தேடும் படலத்தில் அந்தக் கறுத்தவன் சுற்றிக் கொண்டே இருக்கிறான்; 'மாதம் இத்தனை வழக்கு' என்று பதிவு செய்ய வேண்டும் என்பது காவல் துறைக் கட்டளை போலும்! சும்மா இருப்பவனையும் "வாடா நிலையத்துக்கு" என்று இழுத்துச் செல்வது பழக்கம்; அது காவல் நிலையம்; இந்தக் கறுத்தவனும் இதனைப்பார்த்துக் கற்றுக்கொள்கிறான். "சின்னப்பையன்தான்; என்றாலும், கள்ள வோட்டுப் போடும் வயது; வா" என்று இழுத்துச் செல்கிறான். அவள் தாய் அலறுகிறாள்! "என்னை அழைத்துப் போகக் கூடாதா! என்று கத்துகிறாள்.

அதனை முன்னால் சொல்லி இருக்கலாமே; அவளுக்கு அந்த யோசனை வரவே இல்லை; பின்புத்தி; இழுத்துச் செல்பவன் காத்து நிற்கிறான்; அதனால், தம்பி ! தருமம் செய்; இஃது உன் வாழ்வின் கருமம்.

## 3. காயமே இது பொய்யடா

### (யாக்கை நிலையாமை)

சாவுக்குப் பேதம் இல்லை; மூத்தவன், இளையவன், அரசன், ஆண்டி என்று பிரித்துப் பார்ப்பது இல்லை; கியூவில் சின்னவர் பெரியவர் எல்லாரும் நிற்கின்றனர்; குடைபிடித்துக்குவலயம் ஆண்டமாநில மன்னர் எல்லாரும் அடைமழைக் காலத்திலும் அடையும் இடம் சுடுகாடு தான்; அங்கேயும் அவர்கள் சுகவாசிதான்;''ஏ.சி. இல்லை'' என்று சொல்வதே இல்லை ; அவர்களே குளிர்ந்து விட்டனர்' பி.சி. யில் வாழ்ந்தவர் பலர்.

பத்திரிகைச் செய்தி தேதி முத்திரை பெற்று வெளிவருகிறது. ''மணமகன் பிணமகனானான்; நேற்று அடித்தது மணமுழவு; இன்று அடிப்பது பிண இழவு; எதிர் பார்க்கவில்லை; கழுத்தில் கயிறு ஏறவில்லை; அதற்குள் இந்த அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது; செத்தவன் செத்தவன்தான். அவன் மனைவிபொட்டு கால் துட்டுதான்; அதனை அவள் அழிக்கவில்லை. எது எப்பொழுது நடக்கும் என்று முன்கூட்டி உரைக்க இயலாது.

மரணம் என்பது ஒன்று உண்டு; இதனை மறந்தே போகின்றனர் ; அறிவிப்பு மணி தேவையாகிறது. செத்தவரை நாளை சாகின்றவர் சுமந்து செல்கின்றனர். நேற்று இருந்தவன்; காற்று வாங்கச் சென்றவன் இன்று காற்றோடு கலந்துவிட்டான். 'யார் காயம் யாருக்கு நிச்சயம்?' என்று தத்துவம் பேசுகின்றான். இவனைப் பற்றியும் மற்றலர் இப்படித்தான் பேசப் போகிறார்கள். பறை அடிப்பவன் வந்து சேர்கிறான்; வந்ததும்

செத்தவனை எடுத்துப் பாடையில் வைக்கும் போது, அடிக்கிறான் ஒருமுறை; தூக்கிச் செல்லும்போது அடிக்கிறான் மறுமுறை; இறக்கி வைக்கும்போது ஒரு முறை. இப்படி மூன்றுமுறை ஏலம்போட்டு இந்தச்சவக் கோலத்தை அறிவிக்கிறான்; என்றாலும், இந்த ஈனஜென் மங்களுக்கு எங்கே ஏறப் போகிறது.; வாழ்வில் நேசம் வைக்கிறான்; பாசம் காட்டுகிறான்; கோடி ஆசைகளை வளர்த்துக் கொண்டு அல்லல்களை விளைவிக்கிறார்கள்.

செத்த பிறகு இந்தப் பித்த மனிதன் சத்தமே செய்வது இல்லை; அவனைப் பற்றிப் பிறர் என்ன பிதற்றுகிறார் கள்? ''நார் தொடுத்துக் கட்டுக'' என்று அறிவிக்கின் றனர்; ''நீர் மொடுத்துக் கொட்டுக'' என்று பேசுகின் றனர்; ''நன்கு ஆய்ந்து அடக்குக'' என்று கூறி அடக்கம் செய்கின்றனர்; அவன்தான் செத்துவிட்டானே; அவனைப் பற்றி ஏன் பழித்துப் பேசுகிறாய்; அவன் செவிகள் மறுத்து விட்டன; எந்தக் கவிகளும் கேட்க அவனுக்கு இயலாது. இப்பொழுது அவன் வெறும்தோற்பை; அதனுள் இருந்த கூத்தன் ஆடி வெளியேறிவிட்டான்; நாடி அடங்கி விட்டது; நாளும் முடிந்துவிட்டது

''செத்தவன் என்ன ஆனான்? வாழ்வு என்பது இவ் வளவுதானா? இல்லை; அடுத்த பிறவி அவனுக்காகக் காத் துக்கிடக்கிறது! நல்லது செய்தால் உயர் பிறவி; அல்லது செய்தால் இழி பிறவி; ஆத்மாவுக்கு அழிவே இல்லை; இந்த உடம்புதான் அழிகிறது; உயிர் அழிவது இல்லை'' இப்படித் தத்துவம் பேசித் தருக்கம் செய்கின்றனர்.

சுருக்கமாய்ச் சொல்வதாயின் வாழ்க்கை மழைநீர் மொக்குள்; 'இதுதான்; மழைநீரில் ஒருமுகிழ்ப்புத் தோன்று

கிறது, வெடிக்கிறது; காற்று வெளியேறுகிறது. நீரோடு நீராய் அந்தக் குமிழி மறைந்துவிடுகிறது. வாழ்வு நீரோட்டம் போன்றது; குமிழிகள் தோன்றி வெடிக்கும். தனி மனிதன் ஒரு நீர்க்குமிழி; அவன் சரித்திரமும் அதனோடு முடிகிறது. குமிழி தோற்றம்; வடிவம், மாறி விடுகிறது; நீர் நிலைத்து நிற்கிறது.

ஒருவன் போனால் இந்த உலகம் குடிமுழுகிப்போவது இல்லை. நேற்று அவன் தன் வீட்டைக் காலிசெய்துவிட்டுச் சென்றான்; இன்று அடுத்த ஆள் அங்கு வந்து புதுக் குடித்தனம் நடத்துகிறான். தடி ஊன்றி நடந்த முதியவர் அடியெடுத்து வைத்து நடந்தவுடன் அங்கே ஒரு புதிய ஆத்திச் சூடி ஆரம்பமாகிறது; ''தாத்தா! நீ கவலைப் படாதே! மற்றொரு ஆத்தாள் காத்திருக்கிறாள் அந்த இடத்தை நிரப்பிக் கொடுக்க''

மலைமீது மேகம் தவழ்கிறது; காற்றில் அசைந்து ஆடுகிறது; பின் மேகம் என்ன ஆயிற்று? கலைந்து விட்டது; படிவது போலத் தோன்றிய மேகம் மடிந்தும் போகிறது. 'மடிந்தது' என்று கூறமுடியாது; காற்றோடு காற்றாய்க் கலந்துவிட்டது. இந்த ஆராய்ச்சி நமக்கு ஏன்? அது மறைந்துவிட்டது; அவ்வளவுதான்.

''நீர்க்குமிழி யாக்கை, மலைமீது ஆடும் மேகம்; இன்னும் தெளிவாகக் கூறினால், ''புல்நுனிமேல் பனிநீர்'' இரவில் புல்நுனிமீது பனித்துளி படிகிறது; உடனே கதிரவன் ஒளிமுன் மறைகிறது. ஒளி உமிழ்ந்த பனித்துளி எங்கே? பசும்புல்லைக் குளிர்வித்த விண்துளி எங்கே! உடலையும் இயக்கித்தானும் உலவி வந்த உயிர் மறைகிறது.

சுற்றத்தவர் கடிதம் போட்டுவிட்டா வருகிறார்கள்? கேட்டுவிட்டா வருகிறார்கள்? அவர்கள் வருவதும் தெரிவது இல்லை; போவதும் தெரிவதில்லை. வந்தபோது கலகலப்பு; செல்லும் போது சலசலப்பு; அங்கு உள்ளபோது மிதமிதப்பு; சென்றபோது பரிதவிப்பு. கேளாதே வந்து சொல்லாதே செல்லும் சுற்றம்; அதுதான் நம் வாழ்வு; யாரைக் கேட்டும் பிறப்பது இல்லை; யார் சொல்லியும் இறப்பது இல்லை. வந்தோம் போனோம்; வந்தவழி பார்த்துக் கொண்டு போவதுதான் புத்திசாலித்தனம்.

## 4. நல்லன செய்க
### (அறன் வலியுறுத்தல்)

''அடுத்த வீட்டு அம்புஜைத்தைப் பார்த்தீர்களா?'' என்று அங்கலாய்க்கிறாள் இந்த வீட்டுப் பங்கஜம்; அதற்கு அவள் அகமுடையான் சொல்கிறான். ''அவள் வீட்டுக் காரர் இரவும் பகலும் உழைக்கிறார்; அதனால் தழைக் கிறார்; பொறாமைப்படாது நாமும் உழைப்போம்; உயர் வோம்'' என்று உறுதி கூறுகிறான். அறமே ஆக்கம் தரும்;

''உழைப்பவர் எப்படியும் முன்னுக்கு வருவர்! இது நியதி; இன்று பெருமையுடன் வாழ்பவர் எல்லாரும் ஒருமையுடன் உழைத்து உயர்ந்தவர்தான். அதனை அறிதல் நலம்'' என்கிறான். அதனைக் கண்டு அழுக்காறு கொள்வதில் விழுக்காடு இல்லை; உழைக்காமல் யாரும் முன்னுக்கு வருதல் இல்லை.

நல்ல தொழில்; அவர் வீடு மிக்க எழில்; அவர் சுற்றித்திரிவது பொழில்; பொழுது கழிவது நறுநிழல்; அவர்மட்டும் உண்டு தின்று மகிழ்கின்றார்; மற்றவர் களைக் கண்டுகொள்வதே இல்லை. என்றைக்குத்தான்

கதவைத் திறக்கப்போகிறான்; காற்று வெளிச்சம் பார்க்கப்போகிறான் ; ஈனக்குரல் அவனைச்சுற்றி எழுந்தும் 'அவர்களுக்கு உதவவேண்டும்,' என்ற ஞானநெறி அவனுக்கு ஏன் தோன்றவில்லை? கடந்த நாள்கள் போய்விட்டன; போவன போகட்டும்; இனிச் சிந்தனை செய்து, நல்லறம் உந்துதல் செய்வானாக நானிலம் செழிக்க! அனைவரும் உழைக்க! உலகம் தழைக்க!

இன்னல்கள் வருகின்றன. இடர்ப்பாடுகள் நேர்கின்றன; இவற்றிற்கு எல்லாம் காரணங்கள் உள்ளன; காரணம் இல்லாமல் காரியம் நிகழ்வது இல்லை; கருக்கொள்ளாமல் எதுவும் உருப்பெறுவது இல்லை; நீ செய்த தீவினை அது; உன்னை இந்நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது ; சிந்தித்துப்பார் ; உன்னை நீ திருத்திக்கொள்; நல்லதே செய்க! நன்மையே விளையும். வினை விதைத்தவன் வினை அறுப்பான்; இதில் இருந்து யாரும் தப்ப முடியாது; அற நூல்கள் 'கருமம்' 'விதி' என்று இவற்றிற்குப் பெயர்கள் தரும்; இவற்றை வெல்ல தருமமே தக்க துணை நெறியாகும்.

வாழ்க்கை அர்த்தமுள்ளது ; இதனையறியாதவர் இதனை வியர்த்தமாக்கிவிட்டு வருத்தம் அடைவர். "ஏன் பிறந்தேன்?" என்று எழுப்பும் வினாவினை ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். பிறந்தாகிவிட்டது; அதனைப் பற்றிய பிரச்சினையை எழுப்ப உனக்கு உரிமை இல்லை; 'நீர்க்குமிழி', இந்தப் பிறப்பு ; அது வெடித்து மண்ணோடு மண்ணாகக் கலந்து விடுகிறது; 'சாறு எடுக்கப்பட்ட கரும்பு ;' 'வெறும் சக்கை'; அதனை எரிக்கும்போது யாரும் வருத்தப்படுவது இல்லை ; மனிதனும் இனிய கரும்புதான்; அதன் சுவை அதற்கு உதவாது. அதனைக் கடித்துச் சுவைப்பார்க்கே

பயன்படும்; பிறர்க்கு அவன் பயன்படுகிறான்; பிறருக்காக உழைக்கிறான்; அவர்களும் இவனை நன்கு பயன்படுத்துகின்றனர்; வாழ்க்கை இனியது; சுவை மிக்கது; சாரம் உடையது; அதன் தன்மை அறிந்து நன்மை அடைக; பிறருக்கு நன்மை சேர்க்க.

பயன்பட வாழும் வாழ்க்கை நயன் உடையதாகும்; சாவதிலும் ஒருபெருமை உண்டு; உன்னால் ஆவது செய்து முடிக்கிறாய்; உன்னை நம்பியவரைத் தூக்கிவிடுகிறாய்; ஆல நன்னிழலாக இருந்து பிறர்க்குக் குளிர்ச்சி தருகிறாய்; உடம்பு பழுது ஆகிறது; முழுதும் அது பயன்பட்டபிறகு நீ அழுது அலமரத் தேவை இல்லை; விழுது பல நீ விட்டுச் செல்கிறாய்; அவை மறுபடியும் பிறருக்குச் சுமை தாங்கியாய் நிற்கும்; கரும்பு பிழிந்த சக்கை; அதுதான் உன் பழுதுபட்ட யாக்கை; அதுபற்றி எரியட்டும்; அஃது உன் ஒளியை உலகுக்குக் காட்டும்; வெந்து சாம்பல் ஆகட்டும்; அதனை மற்றவர் நெற்றியில் இட்டு உன்னை வழிபடுவர்; வழிபடத் தக்க வாழ்வை வாழ்ந்து காட்டு; பழிபடத் தாழ்ந்து அழியாதே.

சாவுக்கு அஞ்சாதே; அஃது இன்றும் வரும் நாளையும் வரும்;என்றாவது வரட்டும்; அதனைப்பற்றி ஏன் கவலைப் படுகிறாய்? ஆனால் ஒன்று அதற்குள் நீ நினைக்கும் நற் செயல்கள் அனைத்தையும் செய்துமுடித்துவிடு; அது உன்னால் செய்ய முடியும்; நீ பெற்ற கல்வி, கற்ற தொழில் திறன், வாய்ப்புகள் பிறர்க்கு வாய்க்கும் என்று கூறமுடியாது; தமிழில் இராமகாதை எழுத ஒரு கம்பனால்தான் முடிந்தது; அற நீதியை வள்ளுவன் ஒருவனால்தான் உணர்த்த முடிந்தது; அவர்கள் அன்று உடம்பு வளைந்து, ஏடு எடுத்து,எழுத்தாணியை அழுத்திப்

பதிக்க வில்லை என்றால், அவற்றை யார் செய்து தந்திருக்க முடியும்? சில காரியங்கள் சிலரால்தான் முடியும். பொதுப் படச்செய்யும்பணிகளை யார் வேண்டுமானாலும் செய்து விடமுடியும்; உனக்கு என்று சில தகுதிகள் இருக்கின்றன; அவை உன்னிடம் மிகுதியாய் இருக்கின்றன; அவற்றைப் பகுதியாகச் செயலாற்று; அதுவே நீ பிறந்ததன் பயனாகும். நல்லதோர் வீணை! அதனை நலம் கெடப் புழுதியில் எறிந்துவிடாதே.

எடை இயந்திரம்! வீட்டு நடைபாதையிலேயே வைத்திருக்கிறான்; கூடிற்றா குறைந்ததா? இதுவே அவன் கவலை; அடுத்தது நாக்குச் சுவை! அதனைக் கட்டுப்படுத்துவதே இல்லை; 'தின்பதில்தான் சுகம் இருக்கிறது' என்று நினைக்கிறான்; சதா தின்பது யாது? எந்தப் புதிய உணவகம் சுவைக்கிறது; எங்கே விருந்து? இதுவே இவன் வாழ்வு நோக்கமாயும் அமைகிறது. இவன் இந்த உடம்பினை வளர்ப்பதிலேயே கவனம் செலுத்துகிறான்; இந்த உடம்பின் நினைவுமட்டும் இருக்கின்றது; தன்னை மறந்து, இவன் எந்த நல்ல காரியமும் செய்வது இல்லை. இவன் கண்ணாடிமுன் நின்று தன் அழகைக் கூட்டுதற்கே தன் திறமையைக் காட்டிக்கொண்டு நிற்பான். பெண்களின் இயல்பும் இதுவே; அவர்களிடம் ஒழுங்கு,சீர்மை எதிர்பார்க்கப்படுகின்றன. பெண்களே தம்மைப்பற்றி விமரிசனம் செய்வர்; அதற்காகவாவது அவர்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்ள வேண்டியுள்ளது; அதுவும் சற்றுக் கூடிவிட்டால் உள்ள அழகினைக் கெடுத்துவிடுகிறது; முகம் திட்டுத்திட்டாய்ப் பட்டை தீட்டிக் காட்டப்படுகிறது; மற்றவர் மகிழ, அவர்கள் தம்மை அணிசெய்து கொள்கின்றனர். இஃது உலகத்து எந்தப் பெண்ணுக்கும் பொருந்தும். இஃது அவள் இயல்பு; வசீகரம் அவளிடம் எதிர்

பார்க்கப்படுகிறது. அவள் கிழமாக இருந்தாலும் ஒரு முழம் பூ வைத்தால்தான் அவளுக்குப் பொலிவு சேர்கிறது.

இளைஞர் சிலர், முகத்துக்கு வண்ணத் துகள் பூசி, வருணனைப் பொருள் ஆக விரும்புவது, சரி என்று படவில்லை. பாரதி சொன்னான், "ஆண் நன்று" என்று; அவன் அழகன் என்பதால் பெருமை இல்லை; நல்லவன் என்பதே அவனிடம் எதிர்பார்க்கப்படுகிறது: தன்னைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டு, சட்டைக் காதினைத் தட்டிவிட்டுக் கொண்டிருப்பதைவிட்டு, கடமைகளில் ஈடுபடுவதே அவனுக்குப் பெருமை சேர்க்கும்; "ஊன் வளர்த்தேன், உடம்பு வளர்த்தேன்" என்பதில் பெருமை இல்லை; "அறிவு வளர்த்தேன்; ஆற்றல் மிகுத்தேன்; செயலாற்றினேன்" என்பதில்தான் பெருமை விளங்குகிறது.

ஒருவன் தூங்கிக் கொண்டிருக்கிறான்; அவனைத் தட்டி எழுப்பினால் சோம்பல் முரித்து எழுகிறான்; அப்புறம் பார்த்தால் "இவன் தானா அவன்?" என்று வியக்க மாறி விடுகிறான்; துளி விஷம் போதும் உயிரைக் கொல்ல; அது போலத் துளி தூண்டுதல்போதும் கடல் ஏழையும்தாண்ட; தொடக்கம்சிறிது எனினும்,அதுவளர்ந்து,விவரம்நிறைந்ததாய் நிறைகிறது; வானை எட்ட விசுவரூபம் எடுக்கிறது.

ஆலம் விதை! சிறிதுதான்; அதில் எந்தக் காக்கை எச்சமிட்டதோ? தெரியாது; பள்ளிக்கூடத்துச் சிறுவர்போல் அது சுறு சுறுப்பாய் வளர்கிறது. ஒரு பெரிய கூடாரமே அமைக்கிறது; அம் மரத்தின் பசுங்கிளைகளில் எத்தனை நிறப் பறவைகள் வந்து கூடு கட்டுகின்றன? அவை 'கிரீச் கிரீச்' என்று கதவு மூடும் சப்தத்தை உண்டாக்கிக்கொண்டு இருக்கின்றன. அதன் நிழலில் யாரோ அமரும் பலகைகள்

அங்கு ஒன்று இங்கு ஒன்றுமாய்ப் போட்டுள்ளனர்; அவை உடைந்துகிடக்கின்றன; அவை உடைந்தாலும் அவற்றில் எத்தனை பேர்வந்து உட்காருகின்றனர்? மாடுகள் சுற்றி வருகின்றன படிக்காத பிள்ளைகளைப் போல; அவற்றின் நிழலில் இளைப்பாறுகின்றன; அந்த இடத்தை விட்டு அகல மறுக்கின்றன; சுண்டல் விற்கும் கிழவி, வியாபாரம் அதிகம் ஆகாவிட்டாலும், அந்த இடத்திலேயே காலம் தள்ளுகிறாள்; மண்டையையும் போடுகிறாள்.

நல்லவர், அல்லவர், சின்னவர், பெரியவர் எல்லாரும் 'வெய்யிலுக்கு ஏற்றநிழல்' என்று அங்கு வந்து சுகம் பெறுகின்றனர். ஆலவிதை சிறிதுதான்; அது வளர்ந்தால் பயன் பெரிதுதான். அறச்செய்கை ஆரம்பத்தில் நெல்லிக்கனி தான்; வளர்ந்துவிட்டால் அது, சாகாவரம் பெற்றுவிடுகிறது; அற நிறுவனங்கள் வளர்க; வளர உதவுக.

மணி அடித்தால் சோறு; மணி அடித்துக்கொண்டு தான் இருக்கிறது; சோறு கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அது, சிறைவாழ்க்கை! நாளும் கிழமையும் அன்றாடம் வந்துகொண்டுதான் இருக்கின்றன; சுவரில் ஒட்டிக்கொண்டிருக்கும் சங்கு மார்க்கு நாளேடுகள் கிழிபட்டுக் கொண்டுதான் இருக்கின்றன; 365 தாள்கள் இருந்தன; இன்று எலும்பு உருக்கி நோயாளிபோல் சிறுத்துக் காணப்படுகிறது; சென்ற நாள்கள் திரும்பி வரப்போவது இல்லை; அழிந்துவிட்டது செழிக்கப் போவது இல்லை; கழித்தல் கூட்டல் ஆகாது. அறத்தைப் பெருக்கு: ஈட்டிய பொருளை வகுத்துக்கொடு; உன் கணக்குச் சரியாகும்; வரவு செலவு கணக்குச் சரிபார்த்து வை; தொல்லையில்லாமல் வாழமுடியும். சிறை வாழ்க்கை

ஒரு வாழ்க்கையாகாது, விடுதலைபெற்று வீறுடன் வாழ்க; அறம் செய்க. இங்கே இவனைப்பற்றி என்ன சொல்வது? அவனவன் கொடுத்துப் புகழ் பெறுகிறான்; இவன் தன்னைக் கெடுத்துக்கொண்டு இகழ்வு பெறுகிறான். மானம் கெட்ட வாழ்வு; வீட்டு முகப்புகளில் அந்த வீட்டுப் பதுமைகள் தரும் அகப்பைச் சோற்றுக்குக் கையேந்தி நிற்கிறான். "உயிர் போகிறது; பிடி சோறு" என்று கேட்கிறான். இந்த உயிரை வைத்துக்கொண்டு இவன் என்ன செய்யப் போகிறான்?

"சோம்பல் மிகவும் கெடுதி; போ உழைத்துப் பிழை; உழைக்க நிமிர்ந்து நில்; பிறர் கையேந்தி நிற்காதே; திட்டமிட்ட வாழ்க்கை அமைத்துக் கொள்க; எதிலும் அளவோடு வாழ்வது என்று உறுதி கொள்க. பிச்சை எடுக்க நேராது பிறர் உழைப்பின்றித் தருவதைக் துச்சமாக மதித்து நட. பிச்சை எடுப்பது பிசகான செயல்; அது மாபெரும் வீழ்ச்சி; மானிடத்துக்கே அது தாழ்ச்சி."

## 5. இவளா அழகி! யோசித்துக் கூறு

### (தூயது அன்மை)

அவள் ஆடை சற்று விலகுகிறது; அவன் அவளைச் சாடைகாட்டி அழைக்கிறான். பெண் வாடை வேண்டாம் என்று ஒதுங்கி வாழ்ந்தவன்தான்; அவள் மேனி அழகு கண்டு தேனீ போலச் சுற்றி வட்டமிடுகிறான்.

''என்னடா உனக்கு?''

''பக்தன் நான்'' என்கிறான்.

''சித்தம் இழந்தேன்'' என்று பித்தம் கொள்கிறான்.

''இங்கே வா! அவள் கையில் ரத்தம்; அதனோடு அழுகல் புண்; இதைத்தானே, 'மாந்தளிர் மேனி' என்று கூறினாய். அவள் கையில் சொரிந்தாள்; அது எரிந்து புண் ஆகிவிட்டது. சும்மா இல்லை; அதைத் தொட்டுத் தொட்டுப் பெரிதாக்கினாள்; கையில் இப்பொழுது கட்டு ஒன்று கட்டி இருக்கிறாள்; ஈ மொய்க்கிறது. பண்டம் அன்று. முண்டம்! அது கண்டம்; ஒரு தண்டம்; இதைப் பார்த்த பின் நீ யோசித்துக் கூறு; இவளா அழகி? அது வெறும் மயக்கம்.''

''அழகு அழகு என்று பித்தம் பிடித்தவன்போல் பேசுகிறாய்; எதை அழகு என்று கூறுகிறாய்? மேல் தோலா வாழைப் பழத்தை உரித்துக் காட்டுகிறேன். உள்ளே வழ வழப்புதான்; அங்கங்கே ஓட்டைகள்; துளைகள்; இந்த உடம்பு அதன் மீது போர்த்த போர்வை; அதைத்தான் நீ அழகு என்று கூறுகிறாய்! நான் சொல்வதை உன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையா? அந்தத் தோலைப் புரட்டிப்பார்; நீ தொடவே அருவருப்பாய். அதற்காக ஒரு பெண்ணை இழுத்து வந்து தோல் உரிக்க வேண்டும் என்பது இல்லை; சொன்னால் நீ புரிந்துகொள்வாய் அவ்வளவு தான். அழகி என்று அழிகிறாயே! எது அழகு? நீ யோசித்துக் கூறு.''

''அவள் வாய் இதழ் சிவந்து இருக்கிறது. அதைக் கண்டு, ''ஆகா பவளம் அது'' என்று பகல் கனவு காண்கிறாய்; அவள் போட்ட வெற்றிலை பாக்கு; அதில் சேர்த்

துக் கொண்ட சுண்ணாம்புச் சரக்கு; தக்கோலம் போட்டு இவள் இந்தப் புதுக்கோலம் பூண்டிருக்கிறாள். வாய் கமழ்க்கிறது. எல்லாம் அந்தப் பாக்கு வெற்றிலைதான்; அதனோடு சேர்த்து வாசனைப் பொடிகள் கமழ்க்கின்றன. நீ 'மகிழ்க்கலாம்' என்று கருதுகிறாய். எல்லாம் வெறும் பூச்சு; தீய காற்று அவள் விடும் மூச்சு. ஆபாசம் அதுதான் அவள் சகவாசம்.

நீ அறச் செயல்களுக்கு முதன்மை இடம் தருக; அஃது உன்னை உயர்த்தும். தோல் அழகைக் கண்டு நீ துவண்டு போகாதே; வாலை இளங்குமரிதான் என்றாலும் அவள் தசைப் பிண்டம்; இதை மறந்துவிடாதே; கொழு கொழு வென்று இருப்பதும், மிருதுவான மென்மையும் அவள் ருதுவான புதுமைகள்; கவர்ச்சி; அவள் மேனி சுருங்கும்; கண்கள் ஒடுங்கும்; கைகால்கள் நடுங்கும்; வாழ்க்கை ஒரு நாள் உணங்கும்.''

என்னை வெறியன் என்கிறாய்; உளறுகிறேன் என்று கருதுகிறாய். ''அவள் கண்கள் நீரில் தோன்றும் குவளை; அங்கே அதன் அயல் பாய்ந்தோடும் கயல் மீன். உன்னைத் தாக்குவதால் 'வேல்' என்று எல்லாம் நீ என்னிடம் அளக்கின்றாய்! அதைக் கவிதை என்று கூறி உன்னையே நீ உயர்த்திப் பேசிக்கொள்கிறாய்!''

'கவிஞரே! என்னுடன் வாரும்; இடுகாட்டில் வந்து பாரும்; அங்கு இருக்கமாட்டார் யாரும்: இதோ! இது மண்டை ஓடு; மயிர் முளைத்து இருந்த ஓடுதான்; இன்று வெறும் கூடு; சுட்டு எரிபட்ட மண்டை; சதை இல்லை; குழி விழுந்து கிடக்கிறது. கண் நோண்டி எடுத்துவிட்டார். களா? இல்லை; அது பற்றி எரிந்து பசையற்று விட்டது

குழிவிழுந்த கண்; பனம் நுங்கு; நுங்கு எடுத்துவிட்ட குழி; பயங்கரமாக இல்லையா! இவளா அழகி? யோசித்துக் கூறு."

"அவள் நகை முல்லை முகை என்பாய்! நீ கூறுவது எல்லாம் வெறும் மிகை; அதோ சிதறிக் கிடக்கிறதே எலும்புத்துண்டு. அது நீ புகழ்ந்து பேசிய அதி அற்புதப் பல்; பல் என்று நீ இப்பொழுது கூறமாட்டாய். அது வெறும் கல். இதனை அறிந்து கொள்."

"நில்! அது வெறும் எலும்புத்துண்டு என்று சொல். நீ ஒரு ஞான சூரியன்; யாரோ சொன்னார்கள். 'தொகு முகை இலங்கு நகை" என்று; பிறர் சொல்லக் கேட்டுப் பேசுகிறாய். அது கவிதை; முல்லை; அது பல் என்று மாற்றிக்கூறி மகிழ்கிறார்கள். 'பல் அழகு' என்றுசொல்லிக் கொண்டிருந்தால் அது பொய்; அது வெறும் எலும்புச்சில்; யாரோ இப்படித் தவறாகச் சொல்லிக் கொடுத்துவிட்டார்கள். பெண்ணை நீ மதிக்கலாம்; வேண்டுமானால் தெய்வம் என்று துதிக்கலாம்; விருப்பம் இல்லை என்றால் வெறுத்து ஒதுக்கலாம். ஆனால் அழகி என்று அளக்காதே."

செத்துவிட்டாள் ஒருவன் காதலி; வண்டி ஏறி அவள் வகைப்பட்டுவிட்டாள்; மனையில் கொண்டு சென்று மருத்துவர் அவள் சாவின் அருத்தத்தை ஆராய்கின்றனர். காதலியைத் தேடிக்கொண்டு அந்தக் காரிருளில் கனவேகத்துடன் 'அறுப்பு மனையில்' நுழைகிறான். கருப்பு அங்கி அவளை மூடி இருந்ததால் அவள் முகத்தை மட்டும் காட்டினர் அஃது அவன் காதலி என்பதை அறிவிக்க. "இது முகம்; அவள் எங்கே?' "அதோ அறுத்துக்கூறுபடுத்தி வேறு வேறாக வைத்திருக்கிறோம், குடல், கொழுப்பு, நரம்பு, எலும்பு, தசை, நார்கள் நன்றாகப் பார்; இவள்தான் உன் காதலி!"

''நீ கூறும் காதலி வேறு எத்திறத்தாள்? கூட்டிக் கழித்துப் பார்; அவள் ஒரு சதைக் கட்டு; குருதிக் கொட்டு.''

''மேனி மாசற்ற பட்டு'' என்று பிதற்றுவாய். அவள் பேரும் பட்டுதான்'. எடு கொஞ்சம் துட்டு. இங்கே அவளைக் கொண்டு வந்த அறுவடைக்காரருக்குக் கூறு போட்டுத் தரவேண்டும்; அப்பொழுதுதான் அவர்கள் அழகாக மூடி அவளைத் திருப்பித் தருவார்; இதை 'மாமூல்' என்பாய்; 'சகஜம்' என்போம்; அவர்கள் சுடுகாட்டில்கூட விடமாட்டார்கள்; கொடுத்தாக வேண்டும்; செத்தவள் உயிர் பிழைத்து வரப்போவது இல்லை. இவளா அழகி? யோசித்துக் கூறு''.

''பட்டுத்துகில் உடுத்திப் பகட்டான தோற்றத்துடன் பட்டம்மாள் காட்சி . அளிக்கிறாள்; சந்தனம் பூசிச் சவ்வாது பொட்டிட்டுக் கமழ்கிறாள். மல்லிகைப்பூ மணக்கும் கூந்தல் அவ்வல்லிக் கொடிக்கு; எல்லாம் மேற்பூச்சு; இவற்றைக் கண்டா அவள் பேரழகி என்று பிதற்றுகிறாய்? ஊறுகாய் டப்பாவுக்கு பிளாஸ்டிக் மூடி போட்டால் அது பளபளக்கத்தான் செய்யும். அலங்காரம் கண்டு அது காரம் உடையது என்று பேரம் பேசுவது அறிவுடைமையாகாது; அழுகலைத்தான் ஊறுகாய் என்கின்றனர். அது புளிக்கத்தான் செய்யும். அஃதைத் தின்று நீ களிக்க நினைக்கிறாய். உள்ளே இருக்கும் பண்டம் எது என்று அறியாத முண்டங்கள் சிலர் ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று எதையும் மேற்போக்காகப் பார்த்து அதுதான் மெய்ம்மை என்று கருதுவர். சேலையும் பூவும் அழகுடையவைதாம்; அவற்றைக் கண்டா அவள் அழகி என்கிறாய்? ஊறுகாய் டப்பா; அஃது உடம்புக்கு ஆகாது.''

கர்வம் பிடித்தது இந்த மண்டை ஓடு; குழிந்து ஆழ்ந்து கண்டார் அஞ்ச அது சிதைந்து கிடக்கிறது. அப்பொழுதும் அது சிரிப்பதுபோல் அதன் பற்கள் விரிந்து கிடக்கின்றன. ''ஏய்! நான்தான் நீ காதலித்த கண்ணம்மா; என்னைக் கடித்துத் தின்னத் துடித்துக் கிடந்தாய்; படித்துவைத்த பழங்கவிதை; அன்று மடித்து வைத்த புகையிலை. காரம் மணம் இன்று செத்துவிட்டன. என்னைக் கண்டுதான் நீ கற்கண்டு என்றாய்; சுவைத்தாய்; மிகைத்தாய், நகைத்தாய் உன் பெற்றோர்களையும் பகைத்தாய். நான் இப்பொழுது மண்டை ஓடு, இருப்பது சுடுகாடு, நான் தனிமையில் தான் இருக்கிறேன். வந்தால் இனிமையாகப் பொழுது கழிக்கலாம், பேய் வரும் என்று அஞ்சுகிறாயா! அஞ்சாதே, அதுவும் என்னைக் கண்டு ஓடிவிடும், நானா அழகி? யோசித்துக்கூறு''

புடைநாற்றம், அடைமழை; பெடைக் கழுகு; உடன் அதன் இணைப்பறவை இவை என்ன செய்கின்றன. குத்தித் குத்திக் குருதியைச் சுவை பார்க்கின்றன; தத்தித் தத்தி ரணப்படுத்தி நிணத்தில் முழுகுகிறது. கணத்தில் அந்த உடலும் மறைகிறது, இது யார்? உன் ரசிகை; இப்பொழுது அவள் இந்தப் பறவைகளுக்கு ருசிகை.

நீ விரும்புவது இந்த உடல்; அதனைத் தழுவும் அற்ப ஆசையை நீ விடுக; நான் தெரிவிக்கும் மடல் இது;

காயம் இது பொய்; மாயம் நீ காண்பது; அறம் மெய்; அறிவு மெய்; உண்மை மெய். இம்மூன்றும் சேர்வதுதான் அழகு; அறிக; ஆராய்க; மெய்ப்பொருள் காண்க.

## 6. கூறாமல் சந்நியாசம் கொள்

### (துறவு)

இருள் உன்னைச் சூழ்ந்து கிடக்கிறது; அதை நீக்க ஒளிக்கதிர் தேடுகிறாய்; குச்சி கொண்டு கொளுத்துகிறாய்; குத்துவிளக்கு எரியவைக்கிறாய். கும்மிருட்டுக் கம்முகிறது. ஒளி வீசுகிறது. மறுபடியும் விளக்கு அணைகிறது; இருள் சூழ்கிறது; இது என்ன விளையாட்டு? சிறுவர் விளை யாடும் கண்ஆம்மூச்சி; விளையாட்டா? ஒளி தவம்; இருள் மருள்.

தவம் செய்கிறான்; அவன் பாவம் நீங்குகிறது; தவம் கெடுகிறது; பாவம் வந்து சுடுகிறது. இதுதான் இந்த மின் மினி விளையாட்டு; கண்மணி! பாவம் செய்யாதே; தவத்தை மேற்கொள்.

அவன் அறிவாளி; சிந்துத்துப் பார்க்கிறான்; ஞானம் பெறுகிறான்; "செல்வம் நிலைக்காது; நோய் விலக்கினா லும் அவனையே இலக்காகக் கொள்ளும் நண்பன்; ஒட்டிக் கொண்டுஉறவாடும் கிளைஞன்; மூப்பு அவனுக்கு யாப்பு; அஃது அவனை இறுகக் கட்டி நடமாடச் செய்யாமல் அடக்கி வைக்கிறது சாக்காடு அவனை அழைக்கிறது. இந்த நான்கு செய்திகளையும் எண்ணிப் பார்க்கிறான். நண்ணுகிறது ஞானம். விளைவு அவன் இப்பொழுது துறவி."

தம் கடமை எது என்று எண்ணிச் செயல்படுகிறான். அவன் எதற்குக் கவலைப்பட வேண்டும்? கவலைக்கே அச்சம்தான் காரணம், சாத்திரங்களை நாடுவதும் கோத் திரங்களைத் தேடுவதும் துறவிக்குத் தேவை இல்லை.

துறவிக்குக் கவலை ஒரு துரும்பு; எதற்கும் அவன் கவலைப் படவே மாட்டான், ஆவது ஆகட்டும், போவது போகட்டும் என்று அவன் நினைக்கிறான்; 'நாளை' அதனை அவன் நம்புவதில்லை; 'நேற்று' அது பழங்கதை; 'இன்று' அவன் வாழ்ந்துகொண்டு இருக்கிறான்.

கட்டி வைத்த வீடு, கடன்காரன் ஒற்றி வைத்ததற் காகப் பற்றிக் கொண்டான். இளமை இன்பம் செய்தது; ஆனால் அஃது அவனை விட்டு நாள் ஆக ஆக அகன்று செல் கிறது. எழில் மிக்கவன் என்று பொழிலில் சந்தித்த அழகி ஒரு காலத்தில் பேசினாள். வனப்பு மிக்கவள் என்று கனத்த மொழியில் இவனும் சாதித்தான்; இருவரும் அது கற்பனை என்று அறிகின்றனர். ஈட்டி வைத்தபுகழ் இவை எல்லாம் மெல்ல மெல்ல அவனை விட்டு நீங்குகின்றன. மறுபடியும் இந்தப் பற்றுகள்! தேவைதானா? துறவு என்ற நிலை அடைந்துவிட்டால் இந்தச் சின்ன சின்ன ஆசைகள் அவனைத் தின்னத் தொடங்குவதில்லை. அவன் வாழ்வு பின்னப்படுவதில்லை.

இன்பம் தேன் துளி; மேலே தேன் கூடு; கீழே பாழும் கிணறு; மரத்தின் விழுதுகள் அவற்றோடு பாம்பின் தொகுதிகள், சொட்டும் தேன் அவன் நாவிற்குச் சுவை தருகிறது; என்றாலும் மனம் திக்குதிக்கு என்று அடித்துக் கொள்கிறது. எல்லாம் இந்தச் சிறு துளிக்குத் தான் அவன் செய்யும் தகிடு தத்தங்கள்; தாள மேளங்கள். எண்ணிப்பார்த்தால் இந்தப் பாசம் என்பதைக் கயிறாகக் கொண்டு தொங்க மாட்டான். கிணற்றில் வீழ்ந்து சாக மாட்டான். இவற்றை விட்டு வெளியேறிச் சுதந்திரப் பாதையில் நடப்பான்.

இனியும் தாமதித்து என்ன பயன்? இளமை வீணே கழிகிறது; நோயும் மூப்பும் உடன்பிறப்புகளாக இணைந்து வந்து சேரப் போகின்றன. அவற்றில் நண்பர்கள் இருமல், பொருமல், மடித்து வைத்த மருந்துப் பொட்டலங்கள், டானிக்குகள், அவற்றை ஊற்றிக் கொடுக்க 'வெள்ளை ரோஜாக்கள்'. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத் தப்பித்துக் கொள்பவன்தான் அறிவாளி; பேசாமல் சந்நியாசம் கொள். எந்தக் கலவலையும் வராது; பற்றுகள் அணுகா.

அறிமுகம் ஆனவன்தான்; அதனால் தேடிவந்து அழைப்பிதழ் தருகின்றான். மணவிழாவிற்கு வருக என்று. "தனியாக இருந்த நீ இனித் துணையாக ஒருத்தியைத் தேடுகிறாய். இதன் அணையாக நீ எதைச் சாதிப்பாய்?" என்று கேட்கிறேன் "நன்மகனைப்பெற்று நானிலம் வாழ்விப்பேன்" என்கிறான். "அவள் மலடி ஆகிவிட்டால்" என்று வினா எழுப்புகிறேன். "என் செய்வது?" என்று கேட்கின்றான் "பொன் செய்வது" என்று புன்முறுவல் பூக்கின்றேன். அடுத்துத் 'தக்க வருவாய் இல்லை என்றால் எப்படி வாழ்வாய்?' என்று கேட்கிறேன். இந்தச் சிக்கலில் அகப்படாமல் விலக வழி யாது?" என்கிறான். "பேசாமல் சந்நியாசம் கொள்! இதுதான் நாலடி சொல்கின்ற ஓரடி."

"மலை குலைந்தாலும் தன் நிலைகுலையாத மாண்பு உடையவரே தவத்தை மேற்கொள்வர். நெஞ்சு உறுதி இல்லை என்றால் தவத்தைப்பற்றிக் கிஞ்சித்தும் எண்ண மாட்டார். இல்லாழ்க்கையில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணற்க; துறவும் கடினமானதே; நல்லொழுக்கம் காத்துத் துறவுபேண வேண்டும். மேனகையைக் கண்டு நீ நகைக்கத் துவங்கினால் உன் வாழ்வு பிறர் ஏளனத்துக்கு ஆளாக அமையும்."

ஒருகன்னத்தில் உன்னை அறைந்தால் மறு கன்னத்தை அவனுக்குக் காட்டு. ''இறைவா! அவனை மன்னித்துவிடு'' என்று பாவமன்னிப்புக் கேள். அவன் பண்பு கொள்ளு வான்; பணிவுபெறுவான்; திருலள்ளுவன் ஆவான்.

அருள்உள்ளம் கொண்டு அனைவரிடமும் பழகுதல் சிறந்த துறவறமாகும். கண் பார்க்கத் துடிக்கிறது; செவி கேட்கத் துடிக்கிறது; மூக்கு நுகர்கிறது. மெய் பொய்யை நாடுகிறது. ஐந்து புலன்களும் உன் கட்டுக்கு அடங்காமல் காட்டு எருமையாகத் திரிகின்றன. இவற்றை நல்வழிப் படுத்திப் புன்மை அகற்றினால் நிச்சயம் நீ வீடு பெறு வாய்.

மனம் காத்தல் தூய்மைக்குவழி; அதுவே துறவுக்குத் திறவுகோல்.

இன்பம் இழுத்துப் பிடிக்கிறது; உன் வழி தடுத்து நிறுத்துகிறது. நீ செல்லும் பாதை நேர்வழி; இன்பம் உன்னைத் தடுக்கும் பேர்வழி அதனைப் பொருட்படுத் தாமல் கடமையை மேற்கொள்க. அது கடவுள் நெறி.

நாவின் சுவைக்கு அடிமையாவர் அவர் வெறியர்; பூவின் சுவைக்குப் பின்போவார் அவர் பூஜ்ஜியர். நாதம் அஃது ஏதம்; உலக ஆசைகள் உன்னை விழுங்கும் பூதம். ஏணிப்படிகள் ஏறிச் சொர்க்கம் அடைய வேண்டிய நீ ஏன் இப்படிப் பாம்பின் வாயில் அகப்படுகிறாய். துறவு கொள்க அஃது உன்னை உயர்த்தும்.

# 7. மதங்கொண்ட யானை

## (சினம்)

சினம் என்பது மதங்கொண்ட யானை; அதை அடக்கி ஆண்டால் அது பணிந்து நீ உயர ஏற வழி வகுக்கும். யானை மீது பவனி வர இந்த உலகம் உன்னைக் கண்டு பணியும்; பிறர் பகை தணியும். சினத்தை எப்படி அடக்குவது ? கொசு தொல்லைதான். அதற்காக நீ வீட்டையே கொளுத்த முடியுமா? ஈ உன் கையில் உட்காருகிறது; அதற்காக அதனைத் துரத்த நீ உன் கையை வெட்டிக் கொள்ள முடியுமா? பிறர் தரும் தொல்லைகள் அதற்காகக் கடக்க வேண்டாம் சினத்தின் எல்லைகள். அது நல்லது அன்று.

வீட்டில் பற்றாக்குறை; வெளியே தொடர்ந்து வரும் தொல்லைகள்; அவற்றிற்கு இல்லை எல்லை; சுமை தாங்கித் தாங்கி முதுகு வளைந்து விட்டது. "படமுடியாது இனித் துயரம்; பட்டதெல்லாம் போதும்" என்று உயிர்விடத் துணிவது அவசரம், ஆவேசம், இது வாழ்க்கையைச் சினப்பது. அறிவுடையவர்கள் எதையும் சீர் தூக்கிப்பார்ப்பர். துன்பம் உலக இயற்கை ; அதற்காகப் பொறுமையை இழக்காமல் யார் மீதும் சினக்காமல் தன் கடமை மீது கருத்து ஊன்றுவர்.

"யாகாவாராயினும் நாகாக்க" என்று சோ காக்கும் வழி கூறினார் வள்ளுவர். சோ காக்க என்று கூறுவதால் அவரையும் "சோ" என்று கூறலாம். இவர் அறிவாளி; கோமாளி அல்லர்; பிறரை வருத்தும் சொற்களை அறிவுடையார் என்றும் கூறார், காய்தல் அகற்றுக உவத்தல் கொள்க : வாழ்க்கை சாய்வது இல்லை.

காசுக்கு உதவாத கம்மியர்கள் கண்டபடி பேசுவார். அதற்காக நீ விம்மிப் பொருமுதல் வீண் செயலாகும். அவற்றை ஒரு பொருட்டாக எண்ணி அவர்களைத் தெருட்டுவது கருதி அறிவுரை கூறவேண்டாம். அவர் மீது சினந்து பயனில்லை. மேன்மக்கள் பொறுமையைக் காட்டுவர். கீழ்மக்கள் சிறு சொல் கூடப் பொறுக்க மாட்டார்கள். அடக்கம் என்பது யாது? முடங்கிக் கிடந்து ஒடுக்கம் கண்ட முதியவர் கொள்ளும் நடுக்கம்; அஃது அடக்கம் அன்று.

கோடிக்கணக்கில் குவித்த அவன் தன்னைத் தேடி வருவோர்க்கு ஜோடிப் புடவை தருகிறான் என்றால் அது கொடை அன்று; ஊர்ப் பெருந்தனக்காரன் செருக்கு மிக்கவன்; அவன் காந்தி சீடன் ஆயினால் அஃது உண்மையில் வியப்புச் செய்திதான். வலிவுள்ளவன் மெலிவு காட்டுவது பாராட்டத்தக்கது. இல்லாதவன் கொடை மதிக்கத் தக்கது.

குடிப்பெருமை உடையவர் என்றும் கண்ணியமும் கட்டும் கொண்டு நடப்பர். நற்குடிப் பிறந்த நயத்தால் நாகமெனச் சீறுபவன் வேகம் அடங்கி விரும்பத்தக்கவன் ஆகின்றான். மந்திரத்துக்கு நாகம் கட்டுப்படுகிறது. குடிப் பெருமைக்குத் தனிமனிதன் விட்டுக் கொடுக்கிறான். உயர்குடிப் பிறந்தவர்கள் சினம் காட்டுவது இல்லை.

"வெற்றிக்கு வழியாது? அதனைக் கற்றுத் தருகிறது நாலடியார். எதிரி அவன் கண்டபடி பேசினாலும் நீ பதறி அவனை எதிர்க்காதே. தீமைகளைக் கண்டும் காணாமலும் விட்டுவிடு; இஃது உனக்கு ஏற்றம் தரும்; இது நாலடியார் சொல்லும் மாற்றம்."

''உன் நண்பன்தான்; நீ சொன்ன சொற்களை அவன் சுடுசொற்களாக ஏற்கிறான்; தீயினால் சுட்டபுண்; அதன்வடுமாற வில்லை. வெந்நீர் தணிந்தால் தண்ணீர் ஆகிறது. பெரியோர் சினம் வெந்நீர்; அஃது ஆறாமல் இருக்காது; விரைவில் குளிர்ந்துவிடும்.''

''நன்றி ஒருவர் செய்தக்கால் அந்நன்றியை மறவாமை நயப்புடையதாகும். அடுக்கிய இடுக்கண்கள் பல செய்திருந் தாலும் அவற்றை வடுக்களாகக் கொள்ளார் மேலோர். நாய் கடிக்கிறது என்றால் அதனைத் திருப்பிக் கடிக்கவா முடியும்? கீழ் மகன் தடித்துப் பேசுவான். அதற்காக மடித் துத் திருப்பித் தாக்கத் தேவை இல்லை. அவன் உன்னை மடையன் என்று கூறிவிட்டால் அதற்காக அவனைக் கடையன் என்று கழறாதே. அவசரப்பட்டு ஆராயாமல் சொல்லி இருக்கிறான். அவன் தெளிவு பெற்றால் தவறு உணர்வான். திருப்பித் தாக்கிவிட்டால் அவன் கூற்று மெய்யாகிவிடும்; அதற்கு நீ துணை செய்யாதே; சால்பு கெடும்; சினத்தை விடுக.''

## 8. பொறுத்தவர் பூமி ஆள்வார்

### (பொறை உடைமை)

''அற்ப சகவாசம் உயிர்க்கு இறுதி விளைவிக்கும்; பிராணசங்கடம். யாவரோடு பேசுவது; யாவரோடு பழகு வது என்பதைச் சிந்தித்துப்பார். சின்னவர்களோடு சிநேகம் கொண்டால் அவர்கள் தம் பின்ன புத்தியைக் காட்டுவர். தொடர்ந்து இன்னல்களைத் தந்து கொண்டே இருப்பார்கள்; அதனால் உனக்குக் கொதிப்பு வரும்; மதிப்புக் குறையும். அவர்களைவிட்டு விலகு.''

சிறியோர் பிழை செய்வர்; அறிவுடைய பெரியோர் அவற்றை அழிவு தரும் என்று கொள்ளார். அவன் கல் லெடுத்து அடித்தால் நீ சொல்லெடுத்துத் தடுப்பது நல் லது; நீ வில்லெடுத்து விறல் காட்டக் கூடாது. சின்னக் கல்லால் மலம் தொட்டால் அது பிசுபிசுக்கும்; கசகசக்கும். பதிலுக்குப் பதில் என்பது மிருக நிலை; உதைக்கு உதை என்பது பழைய கதை. அவன் உன் பல்லை உடைத்தால் உடனே அவன் பல்லைக் கழற்ற முயற்சி செய்யத் தேவை இல்லை. அவன் வெட்டுகிறான்; நீ அக் கத்தியைத் தட்டிப் பறிக்கவேண்டுமே தவிர அவனை நீயும் வெட்டக்கூடாது; இருவருக்கும் பின் கட்டுப் போட வேண்டி வரும். மருத் துவச் செலவு; அருத்தமே இல்லை.

பெற்று வளர்த்த தாய் சற்றுக் கடுஞ்சொல் சொன் னால் அது சுடு சொல் என்று எடுக்காதே; அவள் அடி மனம் உன்னை அடிக்க அன்று; அணைத்துத் திருத்த; அன்புடைய மனைவி ஆவேசப்படுவாள். தட்டு முட்டு எடுத்துக் கட்டு மீறி வீசுவாள்; அவை ஒன்று இரண்டு பழுதுபடும்; அழுது தொலைப்பாள். உடனே நீ மல்யுத்த வீரனாக மாறி, அவளை மாறி மாறிக் குத்த முனையாதே; அது சுத்த முட்டாள்தனம்; அவள் உன்னை அடிக்கும் ஆற்றல் இல்லை; உனக்கு ஊறு நிகழ்த்திப் பேரு எடுக்க விரும்பவில்லை. அதனால் அவள் தன் சினத்தைச் சிறுசு களிடம் காட்டுகிறாள்.

உன் உயிர் நண்பன் செயிர்த்துப் பேசுவான். அதற்கு உட்கிடக்கை இருக்கும். அவனை வெறும் 'குடுக்கை' என்று கருதித் துறக்காதே. பகைவன் சிரிக்கப் பேசுவான். அவன் விரிக்கப் பார்ப்பது சூழ்ச்சிவலை; அதில் ஆழ்ச்சி படாமல் எழுச்சி கொள்க. புறஉரை வேறு; அகநிலை வேறு; இதனை அறிந்து பழகுக.

ஆண்டுகள் பல ஆகின்றன; எனினும், நரையற்று இருக்கின்றான். அவலம் இல்லாமல் அகமகிழ்வுடன் இருக்கின்றான். காரணம் என்ன?

விழித்து வாழ்கிறான்; சுற்றுப்புறத்தை அறிகிறான். அறிவது அறிந்து அடங்கி வாழ்கிறான்; அஞ்சத் தகுந்தவற்றிற்கு அஞ்சி வாழ்கிறான். இயன்றவரை இல்லாதவர்க்கு நல்குகிறான்; பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்பி வகுத்துவிட்டு எஞ்சிய ஈவு கொண்டு இன்புற்று வாழ்கிறான்; அவன் கணக்குத் தவறுவது இல்லை; நூற்றுக்கு நூறு அவன் வாழ்க்கையில் வாங்கும் மதிப்பெண். தானும் நிம்மதியாக வாழ்கிறான்; மற்றவர்களையும் வாழவிடுகிறான். உலகம் மகிழ, அம்மகிழ்வில் அவன் புகழ்வு காண்கிறான். நிறைவு அவன் மனம்; அதனால் அவனுக்கு இல்லை யாதும் குறைவு.

பாலும் தேனும் கலந்தால் இனிக்கும் என்பார் வள்ளுவர்; நட்பும் இப்படிச் செறுகிக் கிடந்தது; இடையில் சிறிது விரிசல். அந்தக் குரிசல் செய்வது தவறு; எனினும் நீ அதைத் தூற்றித் திரியாதே. நட்பின் பரிசில் என்று அதனைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்; மறுபடியும் பழக இயலவில்லை என்றால் சொல்லாமல் கொள்ளாமல் விலகிவிடு.

கண்ணாடி சன்னல் நட்பு; உள்ளிருந்து கொண்டு கல்லெறிந்தால் இருவர் மீதும் படும். வெளியே வந்துவிடு; கண்ணாடி உடைப்பானேன்? கல்லெடுத்து அடிப்பானேன்? மெல்ல அவனை விட்டு விலகிவிடு; கசப்புக் காட்டாமல் மெல்லக் கழற்றிக் கொள்; நட்பு நிலைக்கும்.

''பேயோடு உறவுகொண்டாலும் பிரிவு அரிது' என்பர்; அதனை விட்டு விலகப் பிடிக்காது; விலங்குகளும் பழகி விட்டால்'காய்' விட்டுக் கசந்துபோய்விடாது;இசைந்தவர் பிரிதல் என்பது கசந்தது ஆகும். நண்பனிடம் கூடிவிட்டுப் பின் குறை கண்டு அவனை விட்டு ஓடிவிடுவது நாடத் தக்கது அன்று. ஒட்டி உறவாடியபின் வெட்டி ஒதுங்குதல் கெட்டித்தனம் ஆகாது. பிரிந்தவர் பின் கூடினால் பேசவும் முடியாது; அதனால் பிரிவே கூடாது என்பதை மனத்தில் கொள்க. பொறுமை பெருமை தரும்.''

பெரியவர்கள் பெரியவர்கள்தான்; தவறுகள் என்பதே தெரிந்து செய்வன அல்ல! தப்பித்தவறிச் செய்தாலும் ஒப்புக் கொண்டு மன்னிக்கும் மாண்பு இவர்களிடம் இருப்பதால்தான் பழகிய பின் யாரும் இவர்களை விட்டுப் பிரிவது இல்லை.

''நச்சு நச்சு என்று செய்யும் தவறுகளை எல்லாம் சுட்டிக் காட்டி அச்சுறுத்திக் கொண்டிருந்தால் யாருமே ஒட்டி நிலைக்க மாட்டார்கள. நண்பர்கள் மட்டும் அன்று; நம்மை நாடி வரும் தொழிலாளர்கள் கூட; கண்டித்துக் கொண்டே இருந்தால் அவர்கள் சண்டை போட்டு விட்டு உன்னை ஒண்டிக் கட்டையாக்கி விட்டுப் போய் விடுவார்கள். ஆறுதல்தந்து ஆதரிப்பதுதான் அறிவுடைய ஆன்றோர் தம் செய்கை; கடன்; உய்கை; எல்லாம்.''

''சுட்டாலும் பால் சுவை குன்றாது; சங்கு சுட்டாலும் வெண்மைதரும். கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே. வயிறு சுட்டாலும் தாம் கெட்டுவிட்ட நிலையைப் பறை எடுத்து அறைந்து கொண்டிருக்க மாட்டார்கள். கண்டவரிடம் உன் கடுமையை எடுத்துக் கூறினால் அவர்கள்

உன்னை விடுவிக்கவா போகிறார்கள்? கீழோரிடம் எதையும் சொல்லி நீ தாழ்ந்து போகாதே. யாரிடமும் சொல்லாமல் இருக்க முடியாது; உன் துயர் தீர்ப்பவர் ஒரு சிலரை நீ சந்திக்கக் கூடும். அவர்கள் செவிசாய்த்துத்துக் கேட்பார்கள்; வழி காட்டி வகைப் படுத்துவார்கள்; ஒளி கூட்டி உன்னை உயர்த்துவார்கள். தக்கவர்களிடம் சொல்லிக்கொள்; தகாதவரிடம் விலகிக்கொள்; அவர்கள் ஆற்றப்போவதும் இல்லை; தீர்க்கப்போவதும் இல்லை; எதற்காக எடுத்துக் கூறுகிறாய்? விடு; விடு; விடு.

"இன்பம் அது ஒரு போதை; அதன் வேட்கை தீர்க்க இயலாது; தொடர்ந்து அதன்பின் சென்றுகொண்டு இருக்கிறாய்; நிழலைத் தேடுகிறாய்; அது நீண்டு கொண்டே போகிறது. நிழலின் நிஜம் இருட்டுதான். அதில் இருக்கும்வரை அது குருட்டுத்தனம். வெளிச்சத்திற்கு வா; பழி தரும் செயல்களைச் செய்து இன்பத்துக்கு வழி தேடாதே. போதை மருந்து இன்பம் தரும்; ஆனால் அது போதமன்று; ஏனைய இன்பங்களும் மயக்கம்; அதில் ஈடுபடத் தயக்கம் காட்டு; அதுவே உனக்குப் புகழ் தரும்"

"ஏன் வால் அறுத்துக்கொண்டாய்?" என்று கேட்டால் "வைகுந்தம் பார்க்க முடிகிறது" என்கிறது குள்ள நரி. தான் கெட்டது; மற்றவர்களையும் கெடுக்கிறது. இது நரிக்குணம்; மதங் கொண்ட யானை அது கீழ்மையைக் கருதாது. அது கரிக்குணம்.

நல்லோர் தாம் கெட்டுவிட்டாலும் மற்றவர்கள் கெட்டுப் போக வழி கூறமாட்டார்கள். அழிந்துபோக நினைக்க மாட்டார்கள். பசி என்பதற்காகப் பரதேசிப் பயல்களிடம் கைநீட்ட மாட்டார்கள். கீழ் மக்களை அண்டிப் பாழ்பட்டுப் போகமாட்டார்கள். வானமும்

வையகமும் தாமே வந்து காலடியில் விழுவதாயினும் பொய் கலந்த சொல் அவர்கள் பேசமாட்டார்கள்.

## 9. பிற மாதரைச் சிந்தையாலும் தொடேன்

### (பிறர் மனை நயவாமை)

பக்கத்து வீட்டுக்காரி; புதுச்சேலை உடுத்தி அதிகாலையில் நிற்கிறாள்; அவள் அங்கு வருகிறாள் என்பதைத் தெரிகிறான்; பூச்சூடி அன்று மாலை அவன் கண்ணில் படுகிறாள்; 'புதுச்சரக்கு வந்து இறங்கி இருக்கிறது' என்பது அறிகிறான்.

இவள் யார்? புதிதாக வந்தவள். அடுத்தவன் மனைவி; சொந்த வீட்டுச் சமையல் சுவைக்காது; அடுத்த வீடு தான் கமழ்க்கும். இவன் மதம் கொண்ட யானை; களிப்பு மிக்கவன்; கரும்பு வயலை மிதித்து அதனை விரும்பி உண்ண நினைக்கிறான். எப்படியோ அந்தப் புதியவள் இவன் வலையில் விழுந்து விட்டாள்.

இனி அடுத்து அவள் கை பிடிப்பதுதான் கருமம்; அதனை விட்டுவிட்டால் தருமம்; கவர்ந்தது அவள் சருமம். ஊசி இடம் கொடுத்தால் நூல் நுழைய வழி கிடைக்கிறது. என்றாலும் பார்த்து நுழைய வேண்டும்; வழி சிறிது; இருட்டு வேளை? வெளிச்சம்; அவன் கண்கள் கூசுகின்றன.

கதவைத் திறந்து வைத்தாள்; கணவன் வெளியேறிச் சென்றான்; அவன் வருவது எப்பொழுது? அது தெரியாது; அதற்குள் முடித்துக் கொள்ளலாம். ஏன் உடல் நடுங்குகிறது? வைத்தியரிடம் காட்டினால், 'இது மன நடுக்கம்' என்பான். இத்தனை இடுக்கு வழியே நடுக்கத்தோடு

ஏன் செல்கிறான்? படுக்கை இன்பம் கிடைக்கிறது என்ப தால்தான். இன்பம் சிறிது; அதற்கு அடையும் துன்பம் பெரிது; அவன் முயற்சி வறிது.

அவன் நிலை என்ன ஆயிற்று? அறம் கெட்டது; புகழ் தேய்ந்தது; உறவு முறிந்தது: பெருமை சிறுத்தது; நன்மைகள் அழிந்தன, பகை தொடர்ந்தது; பழி கூடியது; பாவம் அதற்கு மன்னிப்பு இன்றி மனம் உளைந்தது.

அவன் வாழ்க்கை அச்சமே ஆசாரம் ஆயிற்று. அவன் செய்கை அவனுக்கு விசாரம் ஆயிற்று. புகும்போதும் அச்சம்; அவளோடு நகும் போதும் அச்சம், காமம் மிகும் போதும் அச்சம்; எப்போதும் அச்சம். மறைப்பது எப்படி? அதுவும் அச்சம். அகர முதலாக னகர இறுவாய் நரகமே அவனுக்கு வாய்க்கிறது; இவை அச்சத்தின் விளைவு.

பிறர் கண்டால் இவனை மட்டும் பழிக்கமாட்டார் கள்; பிறப்பைப்பற்றியும் ஆராய்வார்கள். "இவன் தாய் ஒருவனுக்கு என்று விரிக்கவில்லை முந்தானை" என்பர்; இவன் தாயின் முந்தானை இவர்கள் ஆய்வுக்கு உள்ளா கிறது. அகப்பட்டுக் கொண்டால் கைகால் நீளம் குறை யும். பேடித்தனம் அவன் செய்கை; கல்வி கற்று அறிஞனாக இருக்க வேண்டியவன் விபச்சாரன் என்றும், துச்சாரி என் றும் தூஷிக்கப்படுகிறான்.

இவன் கெட்டுச் சீரழியக் காரணம் என்ன? இவன் செட்டாகச் சேரும் சிற்றினம்தான்; கொழுத்து அழகிய வடிவினள்; அவளிடம் அழுத்தமான உறவு; தொடர்ந்து அவளை மருவிக் கெடுவது இந்த ஆள்; இவன் ஒருநாளைக்கு 'அலி' என்னும் சொல்லுக்குப் பலியாவது உறுதி.

பக்கத்து வீட்டுப்பத்தினியோடு இவன் செய்யும் சல்லாபம் அதனை எப்படிக் கழுத்தை நீட்டியவள் பொறுத்துக் கொள்வாள்? ''பத்துப் பேர் அறியப் பந்தக்கால் எழுப்பி அவளை மனைவி என்று ஏற்ற நீ இந்தக் கந்தல் துணியை எப்படி நாடலாம்? உன் மனைவி மெல்லிய மனம் மல்லிகைப்பூ: அது வாடாதா! இது துரோகம்; அதன் காரணம் பிறன் மனையாள்பால் நீ கொண்ட மோகம்.''

''அரவு அழகாகத்தான் இருக்கிறது; அது நஞ்சு கரவு என்பது அறிய மாட்டாய்; படம் எடுத்து ஆடுகிறது; அதனை நடம் என்று நயக்கிறாய்; நச்சு உடையது அது; அஃது உன்னை நக்கத் தேவைஇல்லை; நீயே அது நஞ்சு உக்க அதன்பால் செல்கிறாய். இது பிள்ளைமை விளையாட்டு அன்று; கள்ளம் அமை உயிர் ஆட்டு; மரணத்தோடு விளையாடும் புதுக்கூட்டு.''

நீதிகள் எடுத்து ஓதி உரைத்தாலும் அவன் அவற்றை ஒரு சேதி என்று ஏற்கமறுக்கிறான்; காரணம் மீதூர்ந்த காமம்; அஃது உடல் இயற்கைதான்; என்றாலும் அதனை அடுதல் அறிவின் செய்கைதான்; அறிவுடையவர் காமம் கரை மீறாது கட்டுக்குள் அடக்கி வாழ்வர்; இயற்கை என்று மிகைக்கை செய்து அறிவாளி இத்தவறு செய்ய மாட்டான்.

பிறன் மனை நயத்தல், இளமை செய்யும் குறும்பு; அது காமத்தின் அரும்பு; அது கொடிது; கடிது; வெவ்விது; எதனாலும் அடக்க இயலாதது; அம்பும், நெருப்பும், காய் கதிரும் புறத்தைச் சுடும்! காமம் அகத்தைச் சுடும்-ஆற்றல் மிக்கது; அதனால் நெருப்பினும் காமவிருப்பு மிகுதியும் அஞ்சத்தக்கது ஆகும்.

ஊரே பற்றி எரிகிறது; எரிந்தால் என்ன? ஏரி குளம் உண்டு; அங்குப் பதுங்கிக் குளிர் பெறலாம். காமம் கட்டுக்கு அடங்காது. அஃது எரித்தால் தப்பித்துக் கொள்ள ஏமமே இல்லை.

## 10. கைக்கு அழகு தருவது ஈகை

(ஈகை)

ஈவதுதான் கை; கைக்கு அழகு தருவது கொடைப் பண்பு; வற்றிவிட்ட பிறகு ஊற்றாக வரும் நீர்ப்பெருக்கு; அது பிறர் வேட்கை தீர்க்கும்; தாகம் எடுப்பவர்க்கு அது உதவுவது; நன்கொடை; கைப்பொருள் அற்ற நிலையில் பையைத் தேடித் துழவித் தருகிறானே அதுதான் பெருமை. உற்றவன் கொடுக்கிறான் என்றால் அது வெறுமை; உலகப் புகழ்மை; அது காட்டாது மெய்ம்மை. கொடையொடு பட்ட குணன் உடையவர்க்குச் சுவர்க்கத்தின் கதவு அடையாது. சுவர்க்க வாசல் புகுமுன் அங்கே உள் நுழைவதற்கு 'விசா' வேண்டும்; அஃது அவன் கொடுத்துச் சிவந்த கைகள்; அவற்றைக் காட்டினாலே அனுமதி அவனுக்கு வெகுமதி.

''வயது உனக்கு என்ன?'' ''அறுபத்தி ஆறு''; ''மூப்பு உன்னை அடைகிறது; நோய்? இன்னும் அதற்குப் பெயர் தரவில்லை; நாளும் புதிய படைப்புகள்; வழி இல்லை துடைப்புகள்; அவை இன்று நடப்புகள்; அடங்கி இரு; ஆரவாரம் ஏன்? செயல்களைக் குறைத்துக்கொள்; தூக்கம் இழக்கிறாய்; காரணம் பற்றுகள் உன்னைப் பிய்த்துத் தின்னுகின்றன. மற்று இனிச் செய்வது யாது? பகுத்து உண்க; பல்லுயிர் ஓம்புக; காசு இருக்கும்போது வேசி போல் பற்றிக்கொள்ளாதே. ஆசு நீங்கி அருளுக; மாசு நீங்கி வாழ்க; ஈத்துப் புகழ் பெறுக.''

''நெருப்பினும் தூங்க முடியும்; நிரப்பினுள் கண் படுத்தல் இயலாது'' என்பது வள்ளுவர் வாக்கு; வறுமை ஒருவனை நடுங்க வைக்கும்; நிம்மதியாக இருக்க விடாது; அதனால் வறியவர் வேறு அரண் இன்றி இவனைச் சரண் அடைகின்றனர். ''இங்கே கொட்டியா வைத்திருக்கிறது?'' என்று கெட்டியாகக்கூறி மறுத்துவிடுகிறான்; அவர்களைத் துரத்தியும் விடுகிறான். போகின்றவன் மனம் வேகின்றான். ''எத்தனை நாளைக்கு உன் வாழ்வு? நீயும் ஒரு நாளைக்கு நடுத்தெருவுக்கு வராமல் இருக்கப் போவதில்லை'' என்று சாபம் கொடுக்கிறான்; பாபம் அவன் எரிச்சல் வயிறு.

கொடுத்தால் ஒன்றும் குறைந்துவிடாது; பிறர்க்கும் கொடுத்துத் தானும் உண்டால் செல்வம் செழிக்கும்; அவன் புகழ் கொழிக்கும்; தீமைகள் அழியும், துன்பங்கள் ஒழியும். ''நீ இறுகிப் பிடித்தாலும் பணம் உன்னை விட்டுப் போகாமல் இருக்காது; கெட்ட காலம் வந்தால் அஃது உனக்கு விடுதலை தந்து கெடுதலை விளைவிக்கும். ஆக்கமும் அழிவும் வினைப்பகுதியின் செயல்கள்; இவ் உண்மை அறிக; வறியவர்க்கு ஈக; அதோ நடுத்தெருவுக்கு வந்து ''நாராயணா'' என்று பாராயணம் செய்கிறானே; அவன் எப்படி இவ்வாறு வேறாயினான்? சென்ற பிறவியில் அவன் செய்த கருமம்; செய்யாத தருமம்; இப் பிறவியில் அவனைத் தாக்கி இருக்கின்றன.

பேசும் முன் சிலர் பொடி போட்டால்தான் உற்சாகமாகப் பேசுவார்கள்; நெடியாகத்தான் இருக்கும்; என்றாலும் அது சிலருக்குப் பழக்கம் ஆகிவிட்டது. நீ சோறு தட்டில் இட்டு உண்பதற்கு முன் வெளியே எட்டிப்பார்; காத்திருப்பான் ஒரு பரம ஏழை; அவனுக்கு இம்மி அளவு;

அது கம்மிதான். ஒரு பிடி அரிசி தானம் இடு; சிரமமாகத் தான் இருக்கும் என்றாலும் இதை மறக்காதே.''

வறியவன் வந்து நிற்கிறான்; அவனைப் பார்த்துக் கேட்கிறான். ''முகவரி கெட்டா இங்கே வந்து நிற்கிறாய்? வள்ளல் பாரி என்றா என் வீட்டு முன்னால் எழுதி ஒட்டி இருக்கிறேன்? 'காரி' என்பவன் யார் தெரியுமா? அவனும் ஒரு உபகாரி; அவர்கள் கொடுத்துக் கெட்டவர்கள்; வள்ளல் என்று பெயர் எடுத்தவர்கள் எல்லாம் வறுமைப் பள்ளத்தில் உழல்கிறார்கள். நமக்கு ஏன் வள்ளல் பட்டப் பெயர்? கொடுப்பதும் இல்லை கெடுவதும் இல்லை'' என்று கம்பீரமாகப் பேசுகிறான்; இவன் நடு நிலைமை வாதி.

ஒழுங்காகத் தான் வாழ்கிறான்; மாதம் முப்பது; இருபதில் கெடுபிடி; வீட்டில் அடிதடி; இல்லை அரிசி ஒரு படி; என்செய்வது? கேட்டு வாழத்தான் வேண்டும். இரவல்; இரத்தல் என்பதுதான் இரவல் ஆயிற்று. எப்படி யாவது நிரவல் செய்ய இதுதான் வழி; சே! மானம் கெட்ட பிழைப்பு; தானம் தராவிட்டாலும் பரவாயில்லை, பிறரைக் கேட்டு வாழ நினையாதே; எந்த இக்கட்டு வந்தாலும் பிறர் படிகட்டு ஏறாதே. மானம் உயிரினும் மதிக்கத் தக்கது. ஒரு முறை கேட்கத் தொடங்கினால் அதன்புறம் நீ மாற மாட்டாய்; தேறமாட்டாய்.

ஊர் நடுவே மரம் பழுத்தது போன்றது என்பர் உபகாரியின் செயல்; குடிநீர் பொதுக் கிணறு, மருந்துச் செடி இவையும் பலருக்கும் பயன்படுகின்றன. இவற்றைப் போன்றவர் உபகாரிகள் என்று உயர்த்திப் பேசினார் வள்ளுவர்; இன்னொரு புது உவமை பலரும் பறித்துச் செல்லும் பனைமரம் ஊர் நடுவே உள்ளது. இஃது உபகாரி உயர்வு; சுடுகாட்டில் காய்க்காத ஆண்பனை அபகாரியின் தாழ்வு. இஃது எப்படி? வள்ளுவர் உவமைக்குத் தோற்க வில்லை நாலடிப் பெருமை,

உபகாரிகள் அவர்கள் வீட்டுக்குக் காவல் இல்லை; துரத்துவதற்கு ஏவல் இல்லை; கத்தி மறைத்துவைத்துச் சுற்றிவரும் காவலாளி இல்லை. அடையா நெடுந் கதவு; அவர்கள் மனம் தூய திறந்தவெளி.

இவர்களுக்கு மாறுபட்டவர்கள் அபகாரிகள்; சுற்றிலும் மதிற்சுவர்கள். 'நாய் கடிக்கும்' இது அறிவிப்புப் பலகை. இரும்புக் கதவு; உள்ளே எட்டிப்பார்ப்பதைத் தடுக்க முழுக் கதவடைப்பு; துணிந்து ''பிச்சைக்காரர்கள் அனுமதிப்பது இல்லை'' என்றும் எழுதியும் வைக்க மாட்டார்கள்; அப்படி எழுதி வைத்தாலும் தொல்லை இல்லை. தம் கஞ்சத்தனத்தை ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். இப்படியும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை பயனற்றது; இயற்கை நியதிக்கு மாறுபட்டது. மனிதன் ஒதுங்கி வாழ இயலாது; வாழக் கூடாது. ஈகை இல்லை என்றால் அந்த வாழ்க்கை சோகைதான்.

மழை உதவுகிறது; அஃது என்ன எதிர்பார்க்கிறது? கைம்மாறு கருதாத செய்கை அதன்பால் உள்ளது. அஃது உலக அபிமானம்; இந்த உலகம் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம். மனிதன் பிறர்க்கு ஈவது; தருவது மனித அபிமானம்.

இன்று நாம் உதவினால் மற்றொரு நாள் அவன் திருப்பித் தருவான் என்று நினைப்பது கீழ்மை; சுருக்கமாகச் சொன்னால் வட்டி வியாபாரம்; கூடுதலாகக் கிடைக்கும் என்று நாடுதல் ஆகும்.

நீ தருவது மிகச் சிறியதாக இருக்கலாம்; இன்று இயன்றது அதுதான். இதைப்போல் நாளும் செய்துவா! மொத்தத்தில் கணக்குப்போடு. சிறு துளி பெரு வெள்ளம். கேட்பவனும் வீடு வீடு செல்கிறான். "ஒருபிடி சோறு" என்று தான் கேட்கிறான். அவன் பிச்சைப் பாத்திரம் மணிமேகலையின் அட்சய பாத்திரம் ஆகி விடுகிறது; நிறைந்து விடுகிறது. சிறு பிடிதான்; அது பல படியாகிறது; அதுபோல நீ இடுவது சிறு துளிதான்; தொடர்ந்து அளித்தால் அது பெருவெள்ளம் ஆகிறது!

கடிப்பு அடிக்கும் முரசின் துடிப்பு அதன் ஓசை அந்த ஊர் எல்லை வரைமட்டும்தான் எட்டும்; வானத்து இடி அதன் ஓசை மலைகளையும் முட்டும்; நடுங்கச்செய்யும்; அலையோசை போல் அதிரும். நீ கொடுத்து அதனால் எழும் புகழ் ஓசை மூவுலகும் கேட்கும்; எந்த ஓசை மிகவும் பெரிது? யோசித்துப் பேசு; ஈக; அதனால் புகழ் சேர்க்க.

## 11. ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும்

### (பழ வினை)

அவரவர் செய்யும் நல்வினைகள் தீவினைகள் எவையும் வீண் போவது இல்லை. "தினை விதைத்தவன் தினை அறுக்கிறான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" இது பழமொழி. உன் பழைய வினைகள் உன்னைத் தேடி வந்து அடையும்; தப்பித்துக் கொள்ள முடியாது, பசுவின் கூட்டத்தில் நல்ல ஓட்ட முடைய கன்றுக் குட்டியை விட்டால் அதன் நாட்டம் அதன் தாய்ப் பசுவை நாடித்தான் செல்லும்; அந்தக் கூட்டத்தில் தன் தாய் யார் என்று கண்டு கொள்ளும்; அதே போல்தான் நீ தோற்றுவித்த பழவினை நீ எங்குச் சென்றாலும் விடாது. சோழ நாட்டை விட்டு

மதுரை சென்றாலும் அது பின் தொடராமல் இல்லை; கண்ணகியைப் போலவே தொடர்ந்து சென்ற ஊழ்வினை கோவலன் வாழ்வினைப் பாழ்படுத்தியது; அவன் சாவுக்குக் காரணம் பழவினை என்றுதான் இளம் அடிகள் அளந்து கூறுகின்றார். காவியம் உணர்த்தும் உண்மைகளில் இஃது ஒன்று.

அறம் என்பது யாது? பிறர்க்கு உதவுவதே நல்லறம் ஆகும்; அம் மனப்பாங்கு ஏற்பட வாழ்வின் நிலையாமையை உணர்ந்துதான் ஆகவேண்டும்.

"என்றும் செல்வம் நிலைக்கும்; இளமை கொழிக்கும்; அதிகாரம் நிலைக்கும்; அழகு கவர்க்கும்" என்று நினைக்க முடியாது; அவை தேய்ந்து போகுபவை.

கூரையைப் பிய்த்துத் தெய்வம் கொட்டுகிறது என்றால் குடை பிடித்துத் தடுக்க மாட்டார்கள்; பை பிடித்து நிரப்புவார். செல்வம் வந்தால் வேண்டாம் என்று "டாம்" போட்டுப் பேசார்; 'ஆம்' வேண்டும் என்றுதான் கூறுவர்; எங்கே வந்து கொட்டுகிறது? லாட்டரி சீட்டுகள் வீட்டுக் குப்பை ஆகின்றன. அவற்றைப் பெருக்கும் கூட்டாளி அவன் மனைவி, இவனை ஒரு ஏமாளி என்று வருணிக்கிறாள்; "உங்களுக்கு எல்லாம் வராது" என்று அடித்துப் பேசுவாள்; படித்துச் சொல்வாள். "நாய்க்கு வால் அளந்துதான் வைக்கப்படுகிறது; யார் யாருக்கு இவ்வளவு என்பது முன் கூட்டியே முடிவு செய்யப்பட்டுள்ளது" என்பாள்; விளங்கனியைத் திரட்டியதும் இல்லை; உருட்டியதும் இல்லை; களங்கனிக்கு நிறம் கருப்பு; இஃது யார் படைத்த படைப்பு? வரப்போகும் வெள்ளத்தைத் தடுப்பது அரிது; அணைகட்டினாலும் அதுவும் தடுத்து நிறுத்திவிடாது; தரப்போகும் செல்வத்தை யாரும் தடுத்து

நிறுத்த முடியாது. துன்பமும் இன்பமும் யாருக்கு? எப்படி? எப்பொழுது வரும்? என்று முன் கூட்டி உரைக்க முடியாது; வந்தாலும் அவற்றை அனுபவித்துத்தான் தீரவேண்டும். பருவ மழை தவறிவிட்டால் அதைக் கண்டித்துக் கூட்டமா போடமுடியும்? மழை மிக்குப் பெய்து உலகைத் தழைக்கச் செய்தால் அதற்கு நன்றி கூறலாமே அன்றித் தொடர்ந்து பெய்விக்க ஆணையா இடமுடியும்? மழை பொழிவதும் பொழியாமல் ஒழிவதும் இயற்கை நியதி; மானிட வாழ்வும் அத்தகையதே.

'ஓகோ' என்று உயர வளர்ந்தான்; 'ஆகா' ''அவன் எப்படி வாழ்கிறான்!'' என்று உலகம் வியந்தது. நாலு தலை முறைக்கு என்று அவன் செல்வத்தைக் கட்டுப்படுத்த முடியாதபடி நீள் செல்வம் பெற்றவன். அவன் அதை நன்கு வைத்து வாழ்ந்தானா? முரண்படும் மனைவியைப் போல அஃது அவனைவிட்டு விலகிவிட்டது. செல்வமும் உரிமை யுடன் நடந்து கொள்கிறது. சற்று ஏறுமாறானால் கூறாமல் சந்நியாசம் கொள்கிறது. காரணம் என்ன? அவன் பூர்வ ஜென்மத் தீவினைகள். விவாகரத்து ஏற் படும் என்று யார் எதிர்பார்த்தார்கள்.

நாய் வண்டியில் நாய்களைப் பிடித்துச் செல்லும் 'நாயகனைப்' பார்த்து, 'ஏன்'யா, ''வெறி பிடித்த நாயை விட்டு விட்டுக் கறிபிடித்துக் கொழுத்த நாயைக் கட்டி இழுத்துச் செல்கிறாய்?'' என்று கேட்டால் அவன் என்ன சொல்கிறான்?

''இந்த வெறிபிடித்த நாயைப் பிடித்துச் சென்றால் இதை மீட்க யாரும் வரமாட்டார்கள். வெறும் சக்கை; இதற்கு மதிப்புக் கிடையாது. நல்ல கொழுத்த நாய் செல் வர்களுடையது. அதனால் எங்களுக்கு நன்மை உண்

டாகும். அவர்கள் எங்களை மதிப்பார்கள்; எமக்குக் காசு கொடுப்பார்கள்" என்கிறான்.

"ஏன்யா" நல்லவர்களை மட்டும் விரைவில் நீ வந்து அழைத்துச் செல்கிறாய்? தீயவர்களை விட்டுச் செல்கிறாய்' என்று எமனைக் கேட்டால் எமன் என்ன சொல்கிறான்? "தீயர்கள் வெறும் சக்கை; அவர்களால் இந்த உலகத் துக்கே நன்மை இல்லை என்றால் அவர்களை இழுத்துச் சென்று நான் என்ன செய்வது?" என்று பதில் கூறுகிறான் உயிர் பறிப்பவன்.

நல்லவர்கள் தாழ்வதும் அல்லவர்கள் உயர்வதும் நியாயம் என்று கூறமுடியாது. என்றாலும் உலக நியதி அப்படி அமைந்து விட்டது. அதைத்தான் "விதி' என்று கூறுகிறோம்.

இந்தப் பரதேசிப் பயல்கள் இவர்கள் அணி அணியாக வீடுகள் நோக்கித் தம் கேடுகளைச் சொல்லிக் கையேந்தி நிற்கிறார்களே இப்படி இவர்கள் வறுமை உறுவதற்குக் காரணம் என்ன? இளமையில் தக்க கல்வி கல்லாமை; தொழில் செய்யத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ளாமை; வருவாய் வந்தபோது வகையாகப் பிடித்து வைக்காமை; என்று பதில் கூறப்படுகிறது ஏன் இத்தவறுகள் இவர்கள் செய்யவேண்டும். விதி அவர்களுக்கு வழி காட்டவில்லை; அவர் மதி கெட்டுவிட்டது.

கல்வி கற்றவன்; ஒழுக்கம் மிக்கவன்; பண்பு உடைய வன்; அறிவாளி; இவனும் மிகப் பெரிய தவறு செய்கிறான் என்றால் அதை நம்மால் நம்பவே முடிவதில்லை. 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பது பழமொழி. எப்பேர்ப் பட்டவனும் தப்பேதும் செய்யாதிருக்கமுடியாது. இதற்கு

எல்லாம் காரணம் வினையின் ஆற்றல். ''அவன் புத்தி தடுமாற வேண்டும் என்று இருந்தது'' என்றுதான் கூறவேண்டும். சபலத்துக்கு இரையாகிவிட்டான். யாரும் அதிலிருந்து தப்பமுடியாது. நடுநிலைமை கெட்டுவிட்டான்; அவன் நன்மதியால் பொருள் கை நீட்டி வாங்குவதில்லை என்று உறுதியோடு வாழ்ந்தவன்தான்; மாசுமரு அற்ற வாழ்க்கை; அன்று அவன் கெட்டகாலம். ''யார் அறியப் போகிறார்கள்? கொடுத்தவன் சொல்லப்போவது இல்லை; வருவது வேண்டாம் என்று எப்படித் தள்ளுவது?'' என்ற சிறு சபலம்; அடுத்த வினாடி; அவனுக்குக் கைவிலங்கு. தொண்ணூற்று ஒன்பது நாள் அவன் பத்தினி; உலகம் மன்னிக்காது; எல்லாம் விதியின் செயல்; மற்றொருவன் யார் ஜோலிக்கும் போகான்; தான் உண்டு; தன் வீடு உண்டு என்று வாழ்ந்து வரும் மண்டு; நன்மையையும் தேடுவது இல்லை; தீமையையும் நாடுவது இல்லை. அவன் வீட்டில் அன்று திருடன் புகுந்து அவனை அடித்துப் போட்டுவிட்டு உள்ளதைச் சுருட்டி எடுத்துக் கொண்டு போய்விட்டான். இது செய்தி; அவன் யாருக்கும் ஒரு தீங்கு செய்தது இல்லை; அப்பாவிதான் எந்தப் பாவியோ அவனை அடித்துப்போட்டான். காரணம் விதி; அதனால் ஏற்பட்டது இந்தக் கதி.

முருகா! உனக்கு வந்த செல்வம் சிறுகாது; பெருமை அருகாது; முறை கெட்டுத் தாரார். வருவது வந்து தீரும்; போவது போய்த்தான் தீரும், இன்னாருக்கு இன்னது என்று முன்னாளே அவன் எழுதி விட்டான்; அவன் எழுதியதை யாரும் மாற்ற முடியாது. அரசியல் சட்டம் அன்று தேவைக்கு ஏற்ப மாற்றுவதற்கு; எனவே அந்த எழுத்து நன்கு அமைய வேண்டுமானால் உன் காரியங்களும் நன்மையில் அமைய வேண்டும். அப்பொழுதுதான் மூல ஆசிரி

யன் முதல் மதிப்பெண் தருவான்; சரியாகப் படிக்கா விட்டால் தேர்வு எழுதாவிட்டால் வட்டம்தான்; அதனால் வாட்டம்தான்.

## 12. எது உண்மை? நீயே முடிவு செய்க

(மெய்ம்மை)

அவன் மக்கள் தலைவன்; அப்படி அவன் சொல்லிக் கொள்கிறான். எப்படி அவன் இத் தலைமையைப் பெற்றான்? 'நன்கொடை' தருவதாகக் கூட்டத்தில் கூறுவான்; அதை உடனே மறந்து விடுவான். கைதட்டியவரும் தொடர்ந்து கேட்டு அலுத்து விடுவர் வேறுவழி இன்றி.

நல்லவன் என்று சொன்னார்கள். ஊரில் அனாதை இல்லம் கட்ட நன்கொடை கேட்கச் சென்றோம். தொகை ஐயாயிரம் என்று 'செக்' எழுதித் தந்தான் தொல்லை பொறுக்க முடியாமல். அதற்குப் பணம் வங்கியில் இல்லவே இல்லை. அவன் கண்ணியத்தை வங்கி மதிக்க மறுத்து விட்டது; அவன் நல்லவன் தான்.

கஷ்ட காலம் உடனே உதவ வந்தான்; ''முதல் தேதி வந்து பாரு'' என்றான்; ஆளே வீட்டில் இல்லை; விசாரித்ததில் 'இன்று முதல் தேதி; அவர் வெளியே போய்விடுவார்'. என்று பதில் வருகிறது. அடுத்த நாள் சென்றோம். அவன் 'இன்று இரண்டு தேதி' என்கிறான்.

மகளை மணக்க வரதட்சணை தரமாட்டேன் என்று சொல்லி இருக்கலாம். கட்டிக் கொடுத்து விட்டார். கேட்டால், 'வரதட்சணை கேட்பது சட்டத்துக்குப் புறம்பு' என்று சாதுரியமாகப் பேசுகிறார். இவர்கள் செய்வது

ஒன்று; சொல்வது வேறு. இந்த முரண்பாடுகள் மதிக்கத் தக்கவையா? நீயே முடிவு செய்க!

பிரகலாதன் கதை தெரியுமா? அவன் நாரணன்பக்தன்; இரணியன் அவனை எவ்வளவோ மாற்ற முனைந்தான். ஆசிரியர்கள் அவனைப் பலமுறை திருத்த முயன்றனர். மாற்றவே முடியவில்லை. நன்மையைத் தீயதாக மாற்ற முடியாது. கரும்பைக் கசக்கச் செய்ய இயலாது. அதே போல வேம்பை இனிக்கச் செய்யவும் முடியாது. இராவணனை மாற்ற முனைந்தவர் பலர்; தம்பியர் இருவர்; துணைவி ஒருத்தி; மண்டோதரி. இவ்வளவு பேரும் தோற்று விட்டனர்.

இறுதிவரை சீதையை மறக்கவே இல்லை, மூடர்களை மாற்ற முடியாது; கல்வி கற்பித்தும் பயன் இல்லை. காந்தி மகன் கதையும் மாற்றாது. நாய் வாலை நிமிர்த்த முடியாது. இவை வாழ்க்கை உண்மைகள். உம்முடைய கருத்து என்ன?

இத்த வீட்டில் ஏன் திடீர் கூட்டம்? அவனுக்கு லாட்டரி சீட்டில் லட்சம் பத்து விழுந்ததாம்,

அதற்காக ஏன் இவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

அந்தக் காற்றில் குளிர்காய விரும்புகிறார்கள்.

நடிகை நட்சத்திரமாகி விட்டாள்; அவள் ஒருகாலத்தில் தாய் அவளை வீட்டை விட்டுத் துரத்தினாள் இவள் எதற்கும் உதவாதவள் என்று. இன்று அவள் தாய் காரியதரிசி.

தேர்தலில் வெற்றி பெற்று விட்டான்; எம். எல். ஏ; அமைச்சர் பதவி; வோட்டுப் போடாதவர்கள் எல்லாம்

வாழ்த்துக் கூறுகிறார்கள். 'அவர் நம்ம தலைவர்' என்று பேசுகிறார்கள். மேடையில் வசைமாறி பொழிந்தவர்கள். ஏன் இப்படி இவர்கள் திசை மாறிவிட்டார்கள்?

பையன் எதுக்கும் உதவமாட்டான் என்று அப்பா அடித்துத் துரத்திவிட்டார். அவன் துபாய் சென்று ஏகப் பட்ட பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறான். அவன் 'திறமைசாலி' என்று அப்பா பாராட்டுகிறார்;

இந்த மாற்றங்கள் எப்படி ஏற்படுகின்றன? நீயே யோசித்து முடிவு செய்க; பொருள் உள்ளபோது உறவு காட்டுவர்; இல்லாதபோது எங்கும் குறைகளை அறைகுவர்.

பையனைப் பெண் பார்த்தாள்; பெண்ணைப் பையன் பார்த்தான். அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள். இருவருடைய உள்ளப் போக்கை அறியப் பெரியவர்கள் வினவுகிறார்கள்.

"பையனைப் பெண்ணுக்குப் பிடித்துவிட்டது; பெண் ணைப் பையனுக்குப் பிடித்துவிட்டது' என்று மற்றவர்கள் முடிவு செய்து விட்டனர்.

பெண் என்ன சொல்கிறாள்? "அப்பா விருப்பம்; அது தான் என் முடிவு" என்கிறாள். பையனைக் கேட்டால் அவனும் அப்படியே சொல்கிறான். தன் தந்தை விருப்பம் தான் தன் முடிவு என்கிறான்,

அப்பாக்களைக் கேட்டால் இருவரும் ஏகோபித்துச் சொத்து மதிப்புகளை எடை போட்டு விட்டுத் "தீர்மான மாக எங்களுக்குப் பிடித்துவிட்டது" என்று கூறுகிறார்கள், பையனும் பெண்ணும் மறுப்புக் கூறவே இல்லை.

காரணம் என்ன? சரியான பதில் தருவோருக்குப் பரிசு பத்தாயிரம்! விளம்பரதாரர் தருவர்; அதை இளம் தம்பதிகள் பெறுவர்.

நாயகன் படம் பார்த்தாயா! நீ எங்கே பார்க்கப் போகிறாய்! உனக்குப் படம் பார்க்கவே பிடிக்காதே. அதில் ஒரு முக்கியமான காட்சி. அமைச்சர் மகன் காவல் துறை அதிகாரியின் மகளை வம்புக்கு இழுத்து அவளைக் கெடுக்க முயல்கிறான்; நீதித்துறை செயல் இழந்துவிட்டது. அதன் மீது நம்பிக்கை இல்லை காவல் துறை அதிகாரிக்கு; அவர் துறையிலேயே அவருக்கு நம்பிக்கை இல்லை; முரடர் தலைவனிடம் வந்து முறையிடுகிறார்.

''நீர் காவல் துறை அதிகாரி, நீரே தண்டித்து இருக்கலாமே'' என்று கேட்கிறான் முரடர் தலைவன்.

''அமைச்சர் மகனை எதிர்த்து நான் ஒன்றும் செய்ய முடியாது'' என்று தன் இயலாமையைக் கூறுகிறார். ஏன் அந்தக் காவல் அதிகாரி கோழையாகி விட்டார்? நீதி ஏன் தோற்று விட்டது? சரியான பதில் எழுதி அனுப்புங்கள். விடை புதிதாக இருக்கவேண்டும். நீரே சிந்தித்து முடிவு செய்க. ''சாதிப் பசு; அதற்கு மதிப்பு அதிகம். நீதி தோற்றுவிடுகிறது'' என்ற பதில் வருகிறது.

''பழகிவிட்ட பிறகு அவர்கள் பழமையைப் பாராட்டுக'' என்கிறார் வள்ளுவர்.

''பிறர் தீமை செய்தாலும் மன்னித்து விடு; வெட்கப் படும்படி நன்மை செய்க'' என்றும் கூறுகிறார்.

"மதியாதார் வாசல் மிதிக்க வேண்டாம்; துஷ்ட னைக்கண்டால் தூர விலகிவிடு" "தீயரைக் காண்பதுவும் தீதே; தீயார் சொல் கேட்பவுதும் தீதே" — இப்படிப் பல பழமொழிகள் உள்ளன.

ஒரே குழப்பமாக இருக்கிறது; "தீமை செய்தாலும் திரும்ப நன்மையே செய்க" இது வள்ளுவர் வாக்கு; ஏசு நாதர் அறிவுரை. "தீயவனை விட்டு விலகி விடு, அவனை நீ மதிக்காதே; அவனுக்கு நன்மை செய்ய வேண்டும் என் பது பெருந் தவறு" இது நாலடியார் கூற்று.

இந்த இரண்டில் எது சரி! முடிவு செய்து மூன்று நாளில் விடை தருவோருக்கு முந்நூறு ரூபாய் பரிசு வழங் கப்படும். இஃது இன்றைய டி.வி. விளம்பரம்.

"கறை இல்லாத வேட்டியே இல்லை; குறை இல்லாத மனிதனே கிடையாது. மான் குட்டிக்கு எத்தனை புள்ளி கள்! அந்தப் புள்ளிகளுக்காக அதன் தோலைப் புறக் கணிப்பது இல்லை. தபால் சேவகன் காசு கேட்கிறான் என்பதால் அவன் தரும் கடிதத்தைப் பிரித்துப் படிக்காமல் இல்லை; மாமூல் கேட்கிறான் என்றால் அவனை வேலை விட்டு நீக்குக என்று யாரும் கூறுவது இல்லை: கொள்ளை அடிக்கிறார்கள் அரசியல் கட்சிக்காரர்கள் என்றால் அவர் களை அணுகாமல் இருக்க முடிவதில்லை; குறையில்லாத மனிதர்களே இல்லை; குறையுடைய மனிதர்களிடையே தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நன்கொடை கேட்கிறார்கள் என்பதால் பையனைப் படிக்க வைப்பதை நிறுத்த முடியுமா? குறைகளைத் திருத்துவது வேறு; அவர் களை அடியோடு புறக்கணிப்பது வேறு நாம் மனிதர் கள்; எல்லாரும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள்.

சற்று ஏறக்குறைய பார்த்தும் பாராமல் பழகுவது நல்லது.'' நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? இதற்குப் பரிசு கிடையாது.

''வான் வரை என் ஆணை செல்லும்'' என்று ஆணவத்தோடு பேசியவர் எல்லாம் பதவி விட்டுக் கீழே தள்ளப் பட்டு விடுகின்றனர். ''மக்கள் என்றும் மடையராக இருப்பர்; யானே ஆட்சியைக் காலமெல்லாம் கைப்பற்றுவேன்'' என்று 'கட் அவுட்' எழுப்பியவர் எல்லாம் 'கட்' 'அவுட்' ஆகிவிடுகின்றனர்; மக்கள் சாய்த்து வீழ்த்தி விடுகின்றனர். 'ஜனநாயகம்' என்பது ஆற்றல் மிக்கது; அக்கிரமக்காரர்களை நீடிக்க விடாது.

பதவியிலிருந்து கீழே தள்ள முடியாது என்று பகற் கனவு காணாதே. தவறான ஒரு அடிபோதும் சறுக்கிவிழ; பதவியிலும், ஆட்சியிலும், அதிகாரத்திலும் உள்ளவர் மக்கள் நலம் காப்பது அவர்கள் பொறுப்பு; அதனைச் செம்மையாக நடத்துவது நீதியின் விருப்பு. அடக்கம் உன்னை உயர்த்தும்; அடங்காமை ஆரிருளில் உய்த்திவிடும். இப்படி அறிஞர்கள் அவ்வப்பொழுது அறிவிக்கின்றனர். எது உண்மை? நீ ஆராய்ந்து கூறு; அறம் வெல்லுமா? வெல்லுகிறதா ஆராய்க. இஃது ஐய வினா.

அற நூல் கூறுகிறவர் அனைவரும் இந்த மூன்று செய்திகளை உரைக்கின்றனர். இளமை நிலைக்காது; யாக்கை நிலைக்கது. செல்வம் நிலைக்காது. அதனால் நிலைத்த தருமங்களைச் செய்க என்கிறார்கள்.

வாழ்க்கையில் நீ பொருள் ஈட்டுகிறாய். கடினமான உழைப்பு உனது. ''ஈக பிறர்க்கு; உதவுக'' என்கிறார்கள். 'அதுவே புகழ் தரும்'' என்கிறார்கள். நீ என்ன நினைக்

கிறாய்? பொருளை இறுகப் பிடித்துக் கொள்வது நல்லதா? நல்ல செயல்களுக்குப் பயன் படுத்துவது நல்லதா?

''இன்பம் இந்த உலகம் அள்ளித் தருகிறது; துள்ளும் இளமை உனது; இன்பத்தில் தோய்ந்து மகிழ்ந்து கிட; அதுதான் தக்கது'' இப்படிக் கூறுகின்றவர் பலர்; ''நீ கொள்கைகளில் உறுதியாக இரு. இன்பம், பொருள் இவற்றை நாடுவதில் நாட்டம் காட்டாதே. அறமே வாழ்வின் நியதி; குறிக்கோள். அதற்காக வாழ்ந்தால் வீடுபேறு கிடைக்கும்'' என்கின்றனர் சிலர் நீ எதை விரும்புகிறாய்? உண்மை எது? எழுதிச் சில வரிகளில் விடை தருக; மதிப்பெண்தான் தரமுடியும்.

## 13. தீயவை செய்ய அஞ்சுக

### (தீவினை அச்சம்)

வாயில்லாத ஜீவன்கள்; எதிர்த்துப் பேச இயலாத உயிர்கள்; அவற்றை வதைத்து வயிற்றில் அடக்குகிறீர்கள்; உங்கள் வயிறு என்ன சுடுகாடா? இல்லை புதைகாடு.

செத்துவிட்டவர்களை ஊருக்குள் புதைத்து அவர்களை அடக்கம் செய்ய அஞ்சுகிறீர்கள். ஏன்? அது முடை நாற்றம் வீசும் என்பதால்; ஆடு, கோழி இவற்றை அடித்துக் கொன்று அவற்றைப் புதைத்து வைக்க உங்கள் வயிற்றைத் தேடுகிறீர்களே! உங்கள வயிறு அழுகல் அடுக்கும் குப்பை மேடா?

தூய உடம்பை வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு மாய்ந்த சடலங்களைத் திணிப்பதைத் தவிருங்கள்.

தீவினைகள் என்பவை கொள்ளை, கொலை, கள்ளம் இவை மட்டும் அல்ல; உயிர்க் கொலையும் தீவினை தான். 'புலால் மறுத்தல்' நல்வினைகளுள் நயத்தக்கதாகும். இஃது அருளறத்தின் அடிப்படையாகும்.

கொலைத் தொழிலை விலைத் தொழிலாக மாற்றி உயிர்களை அலைத்துத் துன்புறுத்துவது கொடிது; இவற்றோடு வயலில் வலைவிரித்துப் பல்வகைப் பறவைகளைப் பிடித்து, அவற்றின் தோலை உரித்து, வதைத்து, உயிர்க் கொலை செய்து, 'சுவைக்கிறது' என்று தின்று மகிழ்கின்றனர். வானத்து வண்ணப்பறவைகள் அவற்றின் சிறகுகளை உடைத்து முடமாக்குகின்றனர். பறவைகளை வாட்டும் வேட்டுவனைச் சிறைப்பிடித்து விலங்கிட்டு இழுத்துச் சென்றால் அவன் இன்னல் எத்தகையதாக இருக்கும்? எண்ணிப் பார்க்கிறானா? வாயற்றவை; எடுத்து உரைக்கத் தெரியாது; நீ மானிடன்; கத்திக் கதறிக் கொடுமை என்று புலம்புவாய்; சட்டம் உன்னை விடுவிக்கும். நீ மட்டும் உன் கொலைத் திட்டத்தை விட்டு விலகமாட்டாய். நியாயந்தானா? உன் செயலை நிறுவி அது தக்கது என்று தோற்றுவிப்பாய்.

கோழிப்பண்ணைகள்; அவை விற்பனைத் திண்ணைகள்; அவற்றுள் ஒன்றைப் பிடித்து அடித்துக் கொன்று தோல் வேறு, உடல் வேறு என்று பிரித்துப் பார்க்கின்றனர். அதன் அங்கம் தொழுநோயாளியைப் போல் காட்சி அளித்து அச்சுறுத்தவில்லையா? அடுத்த பிறவியில் சங்கு போல் வெளுத்துக் கைவிரல்கள் உளுத்து அவர்கள் தொழுநோயாளியாக மாட்டார்கள் என்றுஎப்படிக்கூற முடியும்? அறிவாளிகள் இந்தக் கொடுமையைச் சிந்தித்துப் பார்ப்பார்களா? உயிர்க் கொலை தீவினை; அதனைச்

செய்வதற்கு அஞ்சுக; பாவ வேட்டையைச் சுமக்க எண்ணு பவர் இத்தீவினை ஆற்றுவர். கொல்லான் புலால் மறுத் தவனை இந்த உயிர்கள் எல்லாம் தெய்வமாகத் தொழும். அவற்றை வாழவிடுக! அவற்றிற்கும் இவ்வுலகில் வாழ உரிமை உண்டு.

அடுத்தது தீயவர் நட்புக்கு அச்சம் காட்டுதல் தேவைப் படுகிறது; பால்போல் வெளுத்து இருந்தான் முன்பு; இப்பொழுது அவன் புளித்துத் தயிராகி விட்டான். காரணம் புரைமோர் பட்டதும் பால்திரிந்து தயிராகி விடுகிறது. நெய் குளிர்ச்சி உடையதுதான். அது சூடான நெருப்பில் பட்டால் அதுவும் சூடு ஆகிறது; தொட முடிவது இல்லை. நல்லவர் கெட்டவர்களோடு சேரும் போது அவர் புளித்த தயிராகவும், சுட்ட நெய்யாகவும் மாறிவிடுகின்றனர். இதை வைத்து அவர்கள் இன்னார் என்று குறிப்பிடப்படுகின்றனர். நிலத்தியல்பால் நீர் திரி கிறது. தீயவர்களோடு நல்லவர்கள் சேர்ந்தால் நல்லவர் களும் தீயவர் ஆகிவிடுகின்றனர்.

'சேரிடமறிந்து சேர்' என்பது பழமொழி; பெருமை உடையவர்களுடன் சேர்வது பெருமை தரும்; அஃது அவனை உயர்த்தும்; வளர்ச்சிக்கும் வழி வகுக்கும்; ஒளி பெற்றுத் திகழ்வான்; அந்த நட்பு வளர்பிறை போன்றது; தீயவரோடு நட்புத் தேய்பிறை போன்றது! 'வரவர மாமி யார் கழுதைபோல் ஆவாள்' இது பழமொழி. நட்பும் அத் தகையது; அது திருப்பி எட்டி உதைத்தாலும் வியப்பதற்கு இல்லை.

யாரையும் முழுவதும் நம்புவதற்கு இல்லை; விழிப் பாக இருக்கவேண்டி இருக்கிறது? நல்லவர்களைத் தேடு

கிறோம்; சான்றோர் என்று மதிக்கிறோம்; சேய்மையில் இருந்து பார்க்கும்போது அவர்கள் தூய்மை நிறைந்தவர் என்று தோன்றுகிறது. நெருங்கிப் பழகினால் அவர்கள் சுருங்கிய உள்ளம் கண்களில் படுகின்றது. சந்தனம் உள்ளே இருக்கும் என்று கருதி அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தால் பாம்பு அங்கே படுத்துக் கிடக்கிறது. அதிர்ச்சி ஏற்படுகிறது; ஏமாற்றம் காணப்படுகிறது. யாரையும் புறத்தோற்றம் கண்டு மதிப்பதற்கு இல்லை.

யாரும் ஒருவர் உள்ளத்தை மற்றவர்கள் ஆராயும் திறன் படைத்தவர் அல்லர்; காண்பது ஒன்று; அவர்கள் உள்ளம் வேறு! பேசுவது ஒன்று; நடந்து கொள்வது வேறு ஆக இருக்கிறது. மனம் வேறு; செயல் வேறு என்று பலர் உலகில் நடந்து கொள்கின்றனர்; எனவே தக்க நட்பினர் யார் என்று தேடிக் காண்பது எளிது அன்று.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் பச்சோந்திகள் அவர்களை நம்ப வேண்டாம். சமயத்தில் கழுத்து அறுத்து விடுவார்கள்; எனவே பொன்னை உரை கல்லில் வைத்துப் பார்ப்பது போலக் கொஞ்சம் தேய்த்துப் பார்த்தே நட்பினைத் தேர்ந்து கொள்க. ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்; ஒன்று இரண்டு சொற்களில் அவர்கள் நடிப்பு வெளிப்பட்டு விடும். தீயவர் நட்பைத் தீவினை என்று அஞ்சுக; அவர்களை விட்டு விலகுக.

கத்தி கையில் இருந்தால் அது தற்காப்புக்கு உதவும் என்று கருதுகிறாய்; தீயவர் தொடர்பு சமயத்துக்கு நன்மை என்று கருதலாம்; அடியாட்களை வைத்துக்கொண்டு கடினமான செயல்களைச் சாதிக்கலாம் என்று கணக்குப் போடலாம்; மடியில் கனம் இருந்தால் வழியில் தனம் பறி

போகும். உன் கைவசம் உள்ள கத்தியே பகைவர் கைக்குக் கூர்வாள் ஆகிவிடும். அதை வைத்து உன்னைக் குத்த வாய்ப்பை நீயே ஏற்படுத்தித் தருகிறாய். அற்பர்கள் உறவு கைக் கத்தி போன்றது. அவர்களை விட்டு விலகு; உனக்கு அபாயம் நேராது.

''என்னப்பா இளைத்திருகிறாய்?'' என்றால் அவன் என்ன சொல்கிறான். 'சுமக்க முடியாத குடும்பச் சுமை; மனைவி மக்கள் மேல் பாசம்; அவள் கேட்ட வரம் தந்து ஆக வேண்டும். மகன் கண்ணில் பட்ட பொருள் வாங்கித் தர வேண்டும். அவர்கள் வசதிக்கு இவன் வணக்கம் செலுத்துகிறான். விட்டு விடுதலையாகி உயிர்க்கு ஆக்கம் தேடுக; பற்றுகள் நீங்குக; அளவுக்கு மீறிய பாசம் உன் உயிர்க்கு நாசம்; பாசம் என்றாலே கயிறு; அஃது எப்படியும் செல்லாமல் இழுத்துப் பிடிக்கும். உன் கழுத்துக்குச் சுருக்கு : அதனால் அதை முற்றிலும் விலக்கு, பாசமுள்ள மாந்தர்கள் மிகுதி; அவையும் உனக்குக் கெடுதி; இதுவும் தீவினை என்று அஞ்சுக.

## பொருட்பால்

## 14. கல்வி கரை இல

### (கல்வி)

கல்வி என்பது யாது? நடுவு நிலைமை கெடாமல் ஒழுகும் நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது; அதுதான் கல்வி; மகளிர் தலைவாரிப் பூச்சூடி புனைந்துகொள்வதும்; விலை மிக்க பல நிறத்துக் கரை போட்ட சேலை உடுத்திக் கொள்வதும், ஆடவர் நெஞ்சம் கவர முகத்துக்கு மஞ்சள் பூசிக் கொள்வதும் அழகு என்று பேசலாம்; அவை புறத்துக்கு அழகு செய்வன; ஆடை அணிகள் உள்ள அழகைக் கூட்டு

மே யன்றிப் புது அழகை ஊட்டாது; கல்வி அக அழகைக் தோற்றுவிக்கும். அறிவு ஒளிவிட, நீதி நிலை மிக, நடுவு நிலை பெருக, அவர்கள் நல்லவர்கள் என்று நாலு பேர் நவிலக் கல்வி அழகே அழகு.

இந்த உலகத்து வாழ்வுக்குக் கல்வி கண் போன்றது; எதையும் சாதிக்கும் அரிய கருவியாகும்; இருட்டைப் போக்கும்; ஒளியாக்கும்; எல்லா நன்மைகளையும் தரும்; ஈயக் குறையாது; அதைப் பிறர்க்குக் கற்பிக்க அது மேலும் பெருகுமே தவிரச் சிறுகாது; பிறருக்குச் சொல்லும் போது அவர்கள் எழுப்பும் ஐயம்; அதை மையமாகக் கொண்டு எழும் வினாக்கள்; அவற்றிற்குக் காணும் விடைகள்; அவன் மறுத்துச் சொல்லும் தடைகள் இவை அனைத்தும் உள் ளொளி பெருக்கி உயர்வு அளிக்கும். உன்னையே நீ அறியச் செய்யும். இதைத்தான் ஞான நன்னெறி என்பர்; கல்வி உன்னை மெய்ஞ் ஞானியாக ஆக்கும்; கற்ற கல்விக் குக் கேடு இல்லை. என்றும் நீ இதை மறக்க முடியாது. 'பாடை ஏறினாலும் ஏடு அதைக் கைவிடக்கூடாது' என்பர் 'பாடை' என்பது மொழி; மொழி நன்கு கற்றுக்கொண்டா லும் கல்வி கற்பதினின்று விட்டு விலகக் கூடாது என்பதே இதன் கருத்தாகும். கல்வியில் ஆர்வலர் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அவர்கள் ஏட்டைக் கைவிடுவது இல்லை; கல்விதான் துயர் தீர்க்கும் மருந்து என்று கொள்வர். கல்வியால் விஞ்ஞானம் பெருகுகிறது; அதனால் புது இயந் திரக் கருவிகள் பெருகுகின்றன. அரிய படைப்புகள் உல கத்தில் மிகுந்த வாழ்வுக்கு வளம் தேடித் தருகின்றன.

களர் நிலத்தில் உப்பு விளைகிறது; அது பிறக்கும் இடம் மட்டமானதுதான்; காலடி எடுத்து வைக்கவும் பின் வாங்குவர்; உப்பளம்; அங்கே மீன் உணங்கல் நாற்றம் வீசும்; கடற்கரை உடற்கு ஒவ்வாது என்றும் கூறுவர், என்

றாலும் அந்த உப்பு இல்லை என்றால் எந்தப் பண்டம் எடுபடும்? "உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே" என்பர்; நல்ல விலை கொடுத்து இந்த உப்பை வாங்குவர்; களர்நிலம் என்று யாராவது களைவார்களா?

பிறக்கும் இடம் எதுவாயினும் அது சிறக்கும் வகையே மதிக்கப்படும்; சாதிகள் இந்த நாட்டில் நீதிகளைக் கெடுத்துவிட்டன. தாழ்ந்தவன் என்பவன் உழைப்பாளி; உயர்ந்தவன் என்பவன் நூலாளி; படிப்பாளி; சாதிபேதம் என்பதே இந்தப் படிப்பால்தான் உண்டாகி விட்டது.

ஒரு சிலர் மட்டும் படித்து இனம் இனமாக முன்னேறி விட்டனர். அவர்களைக் கோயில் குருக்கள் என்றும், கணக்குப் பிள்ளைகள் என்றும், கல்வி ஆசான்கள் என்றும், கவிஞர்கள் என்றும், இந்தப் புவிஞர்கள் வேறுபடுத்தினர். இன்று உள்ள பிரச்சனை கீழ் மட்டத்து மக்கள் கல்வி கற்கவேண்டும்; அவர்கள் உயர்வதற்கு அதுதான் வழி. கல்விச்செல்வம் எல்லா இனத்தவரும் அடைய முடியும்; அதனால் அவர்கள் உயர்வு பெறுவர். சாதிபேதமும் சமூக அநீதிகளும் மறையக் கல்வி வாய்ப்பு அனைவர்க்கும் தரப் படவேண்டும். கல்வி கற்றவன் எந்தச் சாதியாயினும் அவனைச் சமூகம் வரவேற்கிறது; பாராட்டுகிறது, உயர்த்துகிறது.

சொத்து வைக்க எண்ணுகிறாய்; லட்சங்கள் சேர்த்து வைக்கிறாய். அடுத்த தலைமுறை; அதுதானும் அழிகிறது; உடையவனையும் அழிக்கிறது பொருள் அவனைக் கெடுக்கிறது; செல்வச் செருக்கால் அவன் கல்விப் பெருக்கைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. அறிவு குறைந்தால் ஏனைய நிறைவுகள் அமைவது இல்லை. இவனை விடக்

கற்றவன் திறமையாகச் செயல்படுகிறான். தொழில்களில் அவன் வெற்றி காண்கிறான்; இவன் தோல்வி பற்று கிறான். எனவே சொத்து என்று மக்களுக்கு வைக்க நினைத்தால் கல்விச் செல்வமே உயர்ந்தது; நிலைத்தது அழியாதது; ஆக்கம் தருவது; ஏற்றம் உண்டாக்குவது.

பொருட்செல்வம் சேர்த்துவைத்தால் நேர்த்தியாகப் பிறர் கொள்ளை அடித்துக் குறைத்து விடுவர். ஒரே நாள் மலை மடு ஆகிவிடும்; பொன்னன் என்று பேசப்பட்டவன் நன்னன் ஆகி விடுவான். சிறு பொறி போதும்; அது மிகுந் தால் மலைபோன்ற குவிவுகளையும் அழித்துவிடும் நெருப்புக்கு எதுவும் முன் நிற்காது. அழிவுக்கு அரசன் தீதான்; கல்வியை அழல் ஒன்றும் தொடமுடியாது; கல்வி நிரந்தரமானது; ஊற்றுப் பெருக்கு; அதனைத் தடுத்து நிறுத்த முடியாது.

இந்த அரிய கல்வி அதற்கு அளவு உண்டா? கரை இல்லை. கற்பவருக்கு நாள்கள் போதா, மெல்ல நினைத் துப் பார்த்தால் அதற்குள் நோய்கள் பல. அதனால் கண் டதைக் கற்றுப் பண்டிதன் ஆகலாம் என்ற நினைப்பை அகற்று. தேடிப்படி; நல்ல நூல்கள் உயர்வுக்கு மாடிப்படி; அன்னப்பறவை நீரும் பாலும் கலந்து வைத்தால் நீரை ஒதுக்கிப் பாலை மட்டும்தான் குடிக்கும். அதுபோல நல்ல நூல்களைத் தேர்ந்து எடு! குப்பைக் கூளம் அதனை நாடாதே; முத்துக் குவியலைத் தேடு; கத்தும் குயில் ஓசை இனிது; சத்தம் செய்யும் திரை இசைப் பாட்டு எல்லாம் கேட்டு உன் ரசனையைப் பாழ்படுத்திக் கொள்ளாதே, சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் இதன் வகை தெரிந்து அறிவு பெறுபவன் உலகில் உயர்வான். கலைமகள் அவள் என்றும் கற்றுக் கொண்டே இருக்கிறாள்! கேட்டால் என்ன கூறுகிறாள்? ''கற்றது கை மண்ணளவு. கல்லாதது

உலகு அளவு" என்று ஓதுகிறாள். கல்விக்குக் கரை இல்லை; அதில் அக்கரை காட்டு; வாழ்வில் கரை ஏறலாம் கறை நீங்கி வாழலாம்.

தோணி ஓட்டும் படகுக்காரன் அவன் குகன்தான்; அவனிடம் நட்புப் பாராட்டினான் இராமன்; ஏன்? அவன் அன்பினன்; கறையற்ற காதலன். சாதி இருவர் இடை நின்று பேதிக்கவில்லை. படகோட்டி தொழிலால் கடத்தல்காரன்; அவன் ஓடத்தைச் செலுத்திப் பிறரைக் கரை ஏற்றுகிறான். ஞான குருக்களும் அத்தகையவரே. யார் ஆசிரியன் என்று பேதம் பாராட்டத் தேவைஇல்லை; கரை ஏற்றும் ஆற்றல், தொண்டு, பணி, திறமை இவை இருந்தால் அவனை ஆசிரியனாகக் கொள்வர். கல்வி ஆசான் சாதி பற்றி மதிக்கப்படுவது இல்லை; கற்ற கல்வி பற்றிப் போற்றப்படுகிறான்.

தேவர் உலகத்தில் அவர்கள் என்ன செய்கிறார்கள்? கேளிக்கைக் கூத்தில் அவர்கள் களிப்புக் காண்கிறனர். அரம்பையும் ஊர்வசியும் ஆடிக்கொண்டே இருக்கின்றனர்; அவர்கள் பேரழகினர்; கலை நுட்பம் வாய்ந்தவர்கள்; அங்கே அழகுச் சுவை இருக்கலாம்; அறிவுச் சுவை எங்கே இருக்கிறது? இதைக்காட்டித் தானே தேவர் உலகம் சிறந்தது என்பர். இங்கே பட்டிமன்றங்கள், இலக்கியச் சொற்பொழிவுகள், ஆய்வுக் கழகங்கள், அறிவு ஆராய்ச்சிகள் இவை சொல் விருந்துகள்; கற்ற புலவர்கள் உரையாடல் கவின் உடையது; சுவைபடப் பேசுவது இனிமை தருகிறது. இரட்டுற மொழிந்து சொல் நயம் விளைவிப்பர்; கவிநயம் காட்டிக் களிப்புறச் செய்வர். கவிஞர்கள் பாடிச்சென்று தேடிவைத்து புதையல்களை நாடி எடுத்துப் பொருள் கண்டு, தகைகண்டு, சொல் நயம், பொருள்பயன், அணி

நலம் இவற்றைப் புலவர்கள் காட்டுவர். இவர்கள் கூடிப் பேசிப் பிரிந்த பிறகும் அவை எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன. மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து மகிழ வைக்கின்றனர். கவிதை கற்கண்டு; அதன் சுவை கண்டு' மலரை நாடும் வண்டு எனச் சுழல வைக்கின்றனர். அவர் கள் எந்தக் களங்கமும் இன்றிக் கலந்து உரையாடி அக மலர்ந்து சிரிக்கும் சிரிப்புக்கு நிகராக எந்த இன்பத்தையும் இணை கூறமுடியாது. அதற்குச் 'செஞ்சொற் கவிஇன்பம்' என்றும், 'செவி நுகர் கனிகள்' என்றும் பெயர் கொடுத்து மகிழலாம்.

சோற்றைக் கொட்டினால் வாரி வாரித் தின்கிறான் பசித்துக் களைத்து அலுத்தவன்; ''பசி ருசி அறியாது'' என்பர். நட்பு நுட்பமானது; சுவைத்து மகிழக் கூடியது; நிலைத்த பயன் பெறுவது. அது சென்று தேய்ந்து இறு வது அன்று. நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ண மு மாக மலர்வது. பட்டினத்தார் கரும்பைச் சுவைத்தாராம்; அடிப் பகுதியிலிருந்து தொடங்கிக் கடித்துச் சுவைத்து வந்தார். நுனிப்பகுதி வந்ததும் கசந்து விட்டதாம். அந்த இடத்திலேயே அவர் சமாதி ஆகிவிட்டார் என்று கதை பேசுகிறது. கரும்பு தின்பதில் ஒரு வரன் முறை உண்டு. அடிப்பகுதி சுவைக்கும்; நுனிப்பகுதி சுவையற்று வெறுமை பெற்றிருக்கும். கற்றவர் நட்பு, தொடக்கத்தில் வெறுமையாகத்தான் காணப்படும்; போகப் போகப் பெரு மை தரத் தக்கதாக அமையும். கீழோருடன் தொடக்கத் தில் ''ஆகா என்னே செறிவு!'' என்று இருக்கும்; பிறகு வர வரச் சரிவுதான் மிகுக்கும்.

பாதிரிப் பூவை மண் குடத்தில் போட்டு அதில் குளிர் நீர் ஊற்றினால் அது மணக்கிறது; நீர் குடிக்க இனிக்கிறது.

கல்லாதவர் கற்றவரைச் சார்ந்து ஒழுகினால் அவர்கள் அறிவு மணம் பெற்று வாழ்வில் ஒளி பெற்றுத் திகழ்வர். கற்க முடியவில்லை என்று அதற்காக மனச் சோர்வு கொள்ளத் தேவை இல்லை. எல்லாரும் பிற எல்லாச் செல்வமும் பெற்றுத் திகழ முடியும். ஒரு சிலரே கல்வி வல்லவராகத் திகழ்வர். அதற்கு நுண் மாண் நுழை புலம் என்பர். அவர்கள் கல்வி கற்றதோடு நில்லாமல் நுட்ப மான அறிவு படைத்தவராகத் திகழ்வர், மற்றவர்களை யும் பேசவைத்து, அல்லது எழுத வைத்து நூல்களைப் படைக்க வைத்துக் கற்றவர்கள் ஊக்குவிக்க வேண்டும். அறிவு மிக்க எழுத்தை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். "நாரும் மலரைச் சார்ந்து மணம்பெறும்" என்பர். மல ரைப் பிணித்துக்கட்டிவைக்கும் நார் தானும் மணம் பெறு கிறது. மலர்களைச் சிதறாமல் சேர்த்துக் கட்டுகிறது. மாலை கவின் பெறுகிறது. கல்லாதவரைச்சார்ந்து ஆள்க; அவர்களும் கல்வி அறிவு பெற்றுத் திகழ்வர்.

'நூல் பல கல்' என்றால் அவன் திரைப் பாடல்களை மனப்பாடம் செய்கிறான்; காதல் போதை தரும் கவிதை களை அறிவு நூல் என்று வேதம்போல் பயில்கிறான். மன அழுக்குப்போக வள்ளுவம் கற்றால் பயன் உண்டு. 'ஓடிப் போனவள்' என்பவளின் ஓட்டத்தில் நாட்டம் வைத்தால் பயனில்லை. அறிவுவாணர்கள் என்று சொல்லிக் கொண்டு அற்பவிஷயங்களை எழுதுகிறார்கள்; அவ்எழுத்துக்களைப் படைப்பு நூல் என்று பறை சாற்றுகின்றனர். இவை எல் லாம் எழுத்து ஆகா. தினவுக்குச் சொரிந்துகொடுப்பதாகும். சிந்தனையைத் தூண்டும் சீரிய எழுத்துக்களைப் படித்தால் பயன் உண்டாகும். அவை காலத்தை வென்று ஞாலத் துக்கு ஒளி தந்து கொண்டே இருக்கும். காக்கை கத்தல் கர கரப்பு ஆகுமே தவிர அது 'கர கரப்பு ராகம்' ஆகாது;

திரை இசைப் பாடல்கள் 'கிலுகிலுப்பை' என்று தான் கூறமுடியும். நூல் சில கற்றாலும் நுண்ணறிவு தரக் கூடிய பண்ணமைப்பு அவற்றினுள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

## 15. குடிப்பெருமை போற்றுக

### (குடிப் பிறப்பு)

பசி தன்னைப் புசிக்கிறது என்றாலும் சிங்கம் கொடிப் புல்லைக் கடித்துக் கூடப் பார்க்காது. உடுக்க உடையின்றி, கிடக்க இடமின்றி, உண்ணச் சோறும் இன்றி வறுமை உற்ற போதும் நல்ல குடியில் பிறந்தவர் தாழ்ந்து போக மாட்டார்கள்; பிறர் கையேந்தி நிற்க மாட்டார்கள்; ஈக என்று கேட்டு உண்ண மாட்டார்கள்; பெருமை குன்றும் செயல்களைச் செய்யமாட்டார்கள்; தவறான வழிகளில் சென்று பொருள் ஈட்டமாட்டார்கள்: அவை தம் குடிக்கு இழுக்கு என்று வழுக்கியும் தவறு செய்ய மாட்டார்கள்· தான் பிறந்த குடும்பத்தின் பெயர் கெடும்படி நடந்து கொள்ளமாட்டார்கள்; நாட்டை அன்னியரிடம் காட்டிக் கொடுக்க மாட்டார்கள்; குடிக்கு ஊறு நிகழத் தக்க அழிசெயல்களில் ஆழமாட்டார்கள்.

கட்டிய வீடு காலப் பழமையினால் ஒட்டி உறைவதற்குத் தகுதி அற்றதாகி விட்டாலும் அதனால் அதனை விட்டு விலகி ஓடி வெளியே சென்று ஒதுங்கமாட்டார்கள்; அந்த வீட்டிலேயே ஒரு மூலை கிடைக்காமல் போகாது; ஒதுங்கி இருந்து வாழ்க்கை நடத்த முடியும்; என்னதான் இடிந்து பழுதுபட்டாலும் அது முற்றிலும் ஒதுக்கக் கூடியது என்று கூற முடியாது. நற்குடிப் பிறந்தவர் வறுமையால் நொடிந்துவிட்டாலும் அவர்கள் வெறுமையில் மடிந்து போக மாட்டார்கள். தம் சால்பு குறை

நடந்து கொள்ளமாட்டார்கள். பசி என்று அவர்களை நாடிச் சென்றால் புசி என்று ஏதாவது கொடுத்துத்தான் உதவுவார்கள்.

அடுக்கு மூன்று என்று வீடு மிடுக்காக இருக்கலாம். அங்குச் சென்றால் தம் நடுக்கம் தீரும் என்று அங்குச் சென்றால் ஒடுக்கம் காணார். வெளித்தோற்றம் கண்டு மயங்கினால் அது அவர்கள் குற்றமே. வீடு அழகாக இருக்கலாம்; உள்ளம் அழுகலாக இருந்தால் 'சாக்கடை' நாற்றம்தான் வீசும். சான்றாண்மை, மென்மைத் தன்மையாகிய இரக்கப் பண்பு, நல்லொழுக்கம் இம்மூன்றும் நற்குடிப் பிறந்தவர்க்கே அமையுமே அன்றிப் பொருள் மட்டும் படைத்த செல்வர்க்கு அமையும் என்று கூறமுடியாது.

நற்குடிப் பிறந்தவர் அவர்கள் நடத்தையே தனித் தன்மை வாய்ந்தது ஆகும்; புதியவர்கள் வந்தால் உடனே எழுந்து அவர்களை அமரச் செய்ய அஞ்சலி செய்வர்; எதிர்சென்று வரவேற்பர்; வந்தபின் அவர்களை அமர வைத்து இன்னுரையாடி இனிமை கூட்டுவர்; அன்பு காட்டுவர்; விருந்து நல்குவர்; பின் அவர்கள் விடை பெற்றுச் செல்லும்போதும் அவர்களுடன் சில அடிகள் நடந்து 'சென்று வருக' என்று விடைதந்து அனுப்புவர். இவை எல்லாம் அவர்தம் நல் நடத்தைகள் ஆகும்.

இன்னார் இன்ன வீட்டார் என்றால் அவர்களிடம் சில எதிர்பார்ப்புகள் பிறர் காண்பர். அவர்கள் அடுக்கிய நன்மைகள் செய்யலாம்; அதை மற்றவர்கள் எடுத்துப் பேசிப் புகழ்வார் என்று கூறமுடியாது. அஃது அக்குடிக்கு இயல்பு என்று நவில்வர். வாய்விட்டுப் புகழமாட்டார்கள். அதே சமயம் சில தவறுகள் நிகழ்ந்து விட்டால் அது

அந்தக் குடும்பத்துக்குத் தகாது என்று பழி தூற்றுவர்; இழித்துப் பேசுவர். நல்லதுச்குப் புகழ்ச்சி இல்லை; தவறுகள் நடந்துவிட்டால் அதை மிகைப்படுத்திப் பேசுவர். உலகம் அப்படித்தான். நிலவு தரும் சந்திரன் அதன் ஒலியைப் புகழ்ந்து பேசுவதைவிட அதில் உள்ள களங்கத்தைத்தான் கவிஞர்கள் சுட்டிக் காட்டுவர். பதவிகள் வகிப்பவர் நூறு நன்மைகள் செய்தாலும் ஒரு தீமை செய்துவிட்டால் அவர்களை உலகம் பழித்துக் கூறும் அந்தப் பதவிக்கு அவர்கள் தகுதி இல்லை என்று கூறி விடும். முகவரி இல்லாத முனியன் தவறு செய்தால் அதைச் 'சனியன்' தெரியாது செய்துவிட்டான் என்று ஒதுக்கிவிடுவர். தனிப்பட்டவர் தவறுகள் மன்னிக்கப்படும்; தகுதி மிக்க பதவிகளில் இருப்பவர் மிகுதிகள் செய்துவிட்டால் உலகம் ஒப்புக் கொள்ளாது; எனவே குடிப் பெருமை உடையவர் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டிய நிர்பந்தம் உள்ளது என்பதை அறிக.

மாட்சி மிக்க குடியில் பிறந்தவரிடம் சில நற் செயல்களை மற்றவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த வீட்டுப் பிள்ளை படிக்காமல் திரிந்தால் மற்றவர்கள் துடித்துப் போவார்கள்; கடிந்து பேசுவார்கள். நயன்மிக்க செயல்களைச் செய்யாமல் சுயமை மிக்க கீழ்த்தரமான செயல்களில் இறங்கிவிட்டால் அவற்றைச் சுட்டிக் காட்டாமல் இருக்கமாட்டார்கள். "கெட்டுக் குட்டிச்சுவர் ஆகிறானே" என்று திட்டிக் கொண்டு இருப்பார்கள்; பேசும் சொற்களில் கூசும் இழி சொற்கள் கலந்து விட்டால் அவன் நாசம் அடைந்து விட்டதாக மற்றவர்கள் துவேஷிப்பார்கள். "இவன் வாயில்

இந்த மாதிரி சொற்கள் வருவது தகாது என்பர்''. ''சேரிடமறியாமல் சேர்ந்து 'சேரி' மொழி அவனிடம் ஏறிவிட்டது'' என்று வருந்துவார்கள். கேட்டு இல்லை என்றால் அந்தக்குடும்பத்தைபழித்துப் பேசுவார்கள்.அவன்வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்லுவதாகக்கூறுவார்கள். போகும்போது இவன் என்ன எடுத்துக் கொண்டு போகப் போகிறான்?'' என்று ஆராய்ச்சியில் இறங்கி விடுவார்கள். ''யாருக்கு வைத்துவிட்டுப் போகப் போகிறான்'' என்று கேட்பார் ''பிள்ளையா குட்டியா இவனுக்கு என்ன கேடு?'' என்று அவன் சொந்த வாழ்க்கையைத் தேடி உண்மை காண முயல்வார்கள். மாண்குடிப் பிறந்தவர்க்கு இப்பழிச் சொற்கள் வந்து சேரும். அக்குதொக்கு இல்லாமல் யாரோ எவரோ என்று வாழும் ஊதாரிகள் அவர்களைப் பற்றி யாரும் எதுவும் பேசமாட்டார்கள். அவன் தனிக்காட்டு அரசன்; கடலில் மரக்கலத்தில் செல்லும் வலைஞன்; அவன் உண்டு; அவன் கை வலை உண்டு; யார் அவனைப் பற்றி விமரிசிப்பார்கள்? நாலுபேர் நடுவே வாழும் மனிதர்கள் நற்பண்புகளுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறது.

''ஏன்'யா? உன்னை யார் அடித்தது? எதற்காக ஊர் வம்பு?'' என்று கேட்பாரும் உளர். ''அது எப்படி ஒதுங்கி வாழ முடியும்? என் குடிப்பெருமைக்கு ஒவ்வாது'' என்று விடை கூறுவர். ''நம்மவர்களுக்கு நாம் செய்யாவிட்டால் பின் யார் செய்வார்கள்?'; இன நன்மை அதைக் கருதித் தான் ஆகவேண்டும்'என்பர்; வாய்திறந்து வணக்கம் என்று சொல்லாமல் தன் வழி பார்த்து விழிவைப்பாரும் உளர். ''வணக்கம் என்றுசொன்னால் குறைந்தாபோய்விடுவான்'' என்று பேசுவர். இன்சொல் இதை மற்றவர்கள் எதிர் பார்க்கிறார்கள். ''வாரிக் கொடுத்துவிட வேண்டாம்,

எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டால் என்ன? வாய் முத்தம் உதிர்ந்தா விடும்?'' என்று கேட்பர். அவர்கள் செயலில் நன்மை எதிர்பார்ப்பது போல அவர்களிடம் மன நன்மையும் எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் மனம் எப் பொழுதும் நல்ல நிலையில் நின்று செயல்பட வேண்டும்; நன்மை கருதும் செயல்களையே அவர்கள் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்.

தனக்கு நூறு கஷ்டம் இருக்கலாம்; அவற்றை எல் லாம் நற்குடிப் பிறந்தவன் கவனித்துக் கொண்டு இருக்க மாட்டான். தனக்குள்ள இடர்களை எல்லாம் மடித்து வைக்கும் பழைய துணிகளைப் போல எடுத்து வைத்து விட்டு ஊருக்கு உறும் இடையூறுகளை எண்ணிச் செயல் படுவான். உச்சி மீது வான் இடிந்து விழுந்தபோதும் அச்சம் இல்லை என்று இறுமாந்து பேசும் தறுமாப்பு அவ னிடம் அமைகிறது. பிடுங்கல்கள் நூறு இருந்தாலும் அவற்றைப் பற்றியே பேசிக்கொண்டு ஒடுங்கி இருக்க மாட்டான். தனக்குத் தலைவலிஎன்றாலும் மனவலி காட்டி பிறர் வலியைத் தீர்க்கத் தயங்கான். தொல்லைகள் தனக் குப் பல இருந்தாலும் அவையே வாழ்வின் எல்லை என்று அடங்கிவிடமாட்டான்.

ஒரு பக்கம் பாம்பு கவ்வுகிறது. அதற்காக வானத்துத் திங்கள் ஒளிவிடாமல் மறைந்துவிடுவதில்லை. தன் துயரைப் பொருட்படுத்துவது இல்லை; உலகுக்கு ஒளி தருகிறது. குடிப்பிறந்தவரும் துயரில் மடிந்து கிடப்பது இல்லை; பிறர் துயரைக் கடிந்து நீக்கி வாழ முற்பட்டுச் செயலாற்றுவர்.

மான்குட்டி மான்குட்டிதான்; அதற்குச் சேணம் பூட்டினாலும் அது குதிரையாகாது. புல்லைத் தின்பதில்

இரண்டுக்கும் வேறுபாடு இல்லை; போர் என்று முனைந்து அவசரத்துக்கு மானைத் தேரில் பூட்டினால் அது ஏன் என்று கூடக் கேட்காது; தின்னத்தான் தெரியுமே தவிர வேறு எதையும் பண்ணவே தெரியாது. சப்பாணிகள் பலர் இருக்கிறார்கள்; பணம் படைத்தவர்கள் பலர் உள்ளனர்; குணம் படைக்க வேண்டாமா? அவர்களை அடைந்து ஓர் உபகாரம் என்று கேட்டால் 'வேறு இடம் பார்' என்று கைவிரித்து நிற்பார்கள். உபகாரிகள் பைவிரித்துத் தரு வார்கள். இதுவே நற்குடிப் பிறந்தவரின் நற்செயல் ஆகும்.

கோடையில் ஆற்றுநீர் வற்றிவிட்டால் மணல் ஊற் றில் கைவைத்தால் நீர் வேட்கைத் தீரும். அடிசுடும் அந் நாளிலும் நீர் ஊற்றுப் பொய்க்காது; அதுபோல் வறுமை உற்று அவர்கள் வாழ்வு நொடிந்து விட்டாலும் 'இல்லை' என்று சொல்லிக் கதவு அடைக்கமாட்டார்கள். உள்ளதைத் தந்து அதற்குமேல் தர இயலவில்லையே என்று வருந்தி விடை தருவார்கள்.

## 16. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்

### (மேன்மக்கள்)

அழகிய வானத்தில் விளங்கி ஒளிவீசும் நிலவும் இளகிய மனமுடைய சான்றோரும் உலகுக்கு ஒளி தருவ தில் ஒப்புமை பெறுவர். மாசு மறுவற்றது திங்கள் என்று கூற இயலாது; அதற்குக் களங்கம் உண்டு என்று அதன் கன்ா துளங்கு இருளால் உலகம் சாற்றுகிறது. அந்தச் சிறு மாசும் தமக்கு ஏற்பட்டால் மேன்மக்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வர்; செயலாலும் நினைப்பாலும் தீமை கருத மாட்டார்கள்.

பழிவிளைவிக்கும் வழிகளில் விழிகள் நாட்டம் செலுத்த மாட்டார்கள். இவ்வகையில் நிலவை விட நிறைகுணம் படைத்த சான்றோர் மேன்மை மிக்கவர் ஆவர்.

நல்லது தீயது இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தே ஒரு காரியத்தில் இறங்குவர் மேன் மக்கள்; உள்ளுவது எல்லாம் உயர்வையே நினைப்பர். ''காட்டு முயலை வேட்டையாடி அதைப் பிடித்துக் கொண்டு வந்து குறி தப்பவில்லை என்று அறிவித்தால் யாரும் அவனைப் பாராட்டமாட்டார்கள். யானையைக் குறி வைத்து அம்பு எய்து அது தப்பினாலும் அவரைப் பாராட்டுவர்'' என்பர் வள்ளுவர். நரியைக் குறி வைப்பதை விடக் கரியைக் குறி வைப்பதே பெருமை தருவதாகும். கரி என்பது கருப்பு நிறத்தை உடைய யானை: பிறர் தவறுகளைக் கண்டு அறையலாம் போலத் தோன்றலாம்; என்றாலும் அவனை அதற்காக மேன்மக்கள் வருத்த மாட்டார்கள். மற்ற வர்கள் அவர்களை இகழக் கூடுமே என்று அவர்களுக்காக இரக்கம் காட்டுவர். பெரியோர் என்பவர் சிறியோர் செய்யும் பிழைகளைப் பொறுப்பது அவர்தம் கடமை ஆகக் கொள்வர். அதுவே அவர்களுக்குப் பெருமை தருவ தாகும்.

கரும்பு கடித்தாலும் சுவைக்கும். பிழிந்துபருகினாலும் சுவைக்கும். அதனைச் சாறாகப் பிழிய நூறாகத் துண்டித் தாலும் அது தன் இன் சுவையில் சிறிதும் குறையாது. மேன்மக்களை நீ திட்டு; பேசு, வாட்டு அவர்கள் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். ''அ:்து அவன் கருத்து, அதைப் பற்றிக் கவலை கொள்வது தவறு; நமக்கு நாம் உயர்ந்தவர்கள் என்று மதித்துக் கொள்ளலாம்; அந்த

மதிப்பீடுகளை அவன் உதைத்துத் தள்ளலாம்; அதற்காக நாம் நம் மனப் போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும் என்பது இல்லைஎன்பர். அப்பொழுதும் மேன்மக்கள் எதிரிகளுக்கும் தம்மாலான நன்மைகளைச் செய்துகொண்டே தான் இருப்பர்.

மேன்மக்கள் என்று சொல்லிக் கொள்ள அவர்களிடம் என்ன தகுதிகள் இருக்கின்றன? அவர்களிடம் எதிர்பார்க்கும் நற்பண்புகளை நவில இயலுமா? 'களவு' என்பது அவர்களிடம் காணமுடியாது; மறைவாகப் பிறர் பொருளைக் கவ்வுதல் என்ற நினைவு தோன்றாது. அகப்பட்டவரையில் சுருட்டிக் கொள்வது என்ற ஆக்கிரமிப்பு அவர்களிடம் இருக்காது. 'குடி' அந்தப் பேச்சே அங்கே பேசக்கூடாது; கீழ் மக்கள் தாம் மதுக்களைப் பருகி மகிழ்வர்; உயர் மட்டம் அவர்களுள்ளும் குடிப்பார் உளர்;கொஞ்சம்பணம் கைக்குவந்துவிட்டாலே பான வகைகள் வந்து சேர்ந்து விடுகின்றன. ''வசதி இருக்கிறது குடிக்கிறேன்; அதனால் என்ன தவறு'' என்று வினவுவர். கொலு பொம்மைபோல் நிற்பது வாழ்க்கை அன்று; வாழ்க்கை அனுபவிப்பதற்கு என்றுசித்தாந்தம் பேசுவர். வெளிநாட்டுச் சரக்கு அவற்றை அவர்கள் உள்ளே இறக்குமதி செய்து பெருமைப்படுத்துகிறார்கள். இவர்கள் பணக்காரர்கள் ஆவர். பண்பாளர் அன்று; மேன்மக்கள் எந்த வகை மயக்கம் தரும் குடி வகைகளையும் தொடமாட்டார்கள். புகைபிடிப்பதையும், வரைவு இல்லாமல் மகளிரை நாடுதல் முதலிய தீய பழக்கங்கள் அவர்களிடம் காண முடியாது பிறரை மனமறிந்து எள்ளிப் பேசமாட்டார்! இகழ்ந்து உரைத்தலால் புகழ் அமையாது என்பதை நன்கு அறிவர். எந்த நிலையிலும் வாய் பொய் பேசாது, வாய் என்றாலே வாய்மை என்பதை உணர்ந்தவர், வாய் என்ற

பெயரே அது பொய் பேசாது என்பதைக் காட்டுகிறது. வாய்மை 'பொய்' பேசாது இது சொல் விளக்கம்; அதற்குப் 'பொய்' என்று யாரும் பெயரிடவில்லை. மனம், வாக்கு, செயல் இம்மூன்றிலும் மாசு மறுவற்றவராய்த் திகழ்வர்; நிலைமாறினாலும் தம் உளம் மாறாத உத்த மர்கள் அவர்கள். சம நிலையில் வாழ்ந்து எதையும் தாங்கும் மன இயல்போடு வாழ்பவர் அவர்கள்; இவை எல்லாம் மேன்மக்களின் நற்குணங்கள்; செயல்கள் ஆகும்.

இதுதான் அறநெறி என்று எடுத்துரைக்கத் தேவை இல்லை; இந்த மூன்று நன்னெறிகளை ஒருவன் பின்பற் றினால் அதுபோதும் அவனை உயர்த்துவதற்கு; இவனை மற்றவர்கள் செவிடன் என்று பேசும் அளவிற்கு மற்றவர் களின் வாழ்க்கையை விமரிசிக்கக் கேட்க வேண்டாம்,

பக்கத்து வீட்டுக்காரன் தன் மனைவியைத் தினம் அடித்துத் துன்புறுத்துகிறான். 'அடிதடி' காதில் போட்டுக் கொள்ளாதே. அவனைச் சந்திக்கும்போது 'கேட்டு விடாதே. கேட்டால் அவன் என்ன கூறுவான்? ''உன் மனைவியை நீ அடித்துக்கொள் நான் கேட்கவில்லை'' என் பான். ''அவள் என் உடமை; அவளை அடிப்பது எனக்கு அதில் ஒரு மகிழ்ச்சி; உன்னை அடித்தால் வந்துகேள்'' என் பான்; கல்லை அறைவானேன் கைநோவு என்று கூறு வானேன். மற்றவன் மனைவி அவளை உற்றுப் பார்ப்பதைத் தவிர்க. இந்த வகையில் நீ குருடனாய்ச் செயல்படுக; அவளைப் பார்த்தால் என்ன பயன்? அவள் பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிடுவாள். ''எதிர்வீட்டுக்காரர் நான் சேலை அழகாகக் கட்டிச் சென்றால் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை; உறுத்து உறுத்துப் பார்க்கிறார்''. என்று தன் கணவனிடம் முறையிடுவாள். அவன் உடனே

ரோஷம் பொத்துக் கொண்டு வெளியே வந்துவிடுவான். ''என் மனைவியை நீ ஏன் முறைத்துப் பார்த்தாய்? ' என்று கேட்பான், 'அழகாக இருக்கிறாள்; அதனால் அவள் என்னைக் கவர்ந்தாள்'' என்றால் அவன் கேட்பானா? பக்கத்து வீட்டுக்காரி எப்படி இருந்தால் உனக்கு என்ன? குருடாக இருந்துவிடு; பிரச்சனையே வராது; உன் வீட்டுக் காரியும் சும்மா இருக்க மாட்டாள். ''என்னைவிட அவள் எந்த வகையில் அழகு?'' என்று வினாத் தொடுப்பாள். இதற்கெல்லாம் விடை தேடிக் கொண்டிருக்க முடியாது, மற்றொன்று புறங்கூறிப் பொய்த்து நகை செய்யாதே. நண்பன் இருக்கும்போது நகைபடப் பேசிவிட்டு அவன் சற்று மறைந்ததும் அவன் குறைகளை மிகைபடப் பேசுவது இழிவு ஆகும். அதைவிட நாக்கைப்பிடுங்கிக்கொண்டு யாக்கையை விட்டு விடலாம். வாழவே தேவை இல்லை. புறங்கூறுவது கெட்ட பழக்கம். அதனால் அந்த வகையில் ஊமையாகச் செயல்படுக; மற்றவர்கள் வாயைக் கிளறுவார்கள்; நீ ஏதாவது உளறுவாய். ஐம்புலன்களை இறைவன் அளித்தாலும் சிலவற்றைச் செயல்படாமல் வைத்துக் கொள்வது நல்லது; செவி, நாக்கு, வாய் இந்த மூன்று ஒலிக் கருவிகள்; இவற்றைக் கட்டுப்படுத்து; இரைச்சல் செய்யாமல் பார்த்துக்கொள். இனிமையான பண்ணிசை கூட்டு; இந்த இழி இசை தள்ளிவிடு; இதுவே உயர்வதற்கு வழியாகும்.

சிலபேரைச் சில நேரம் மட்டும் பார்த்தால் போதும்; அடிக்கடி வந்தால் அவன் ஏதோ உதவிக்கு வருகிறான் என்று இகழ்ந்து பார்ப்பான். மேலோர் எத்தனை முறை சென்றாலும் முகம் இனிக்க வைத்து அகம் நகைக்க வைத்து உறவாடுவர். அவர்களைப் பார்த்து அணுகுதல் செய்க; மதியாதார் வாசல் மிதிக்க வேண்டாம் என்பது தொல் மொழி; அதை மதித்து நடந்து கொள்க.

கோடிக் கணக்கில் பணம் குவித்துவிட்டான்; அவனை அடைந்தால் கேடு இல்லை என்று கருதலாம். அவன் சமூக விரோதி; பிறர் அடைய வேண்டிய பொருளை ஒருவனே குவிக்கிறான். அவன் மனம் உவந்து பிறர்க்கு எந்த உதவியும் செய்யமாட்டான். வசதி உடையவன் என்பதால் உன் அசதிகளை அகற்றுவான் என்று கருதிவிடாதே.

சான்றோர் உறவு அத்தகையது அன்று; உடனே கேட்ட அந்த அளவே விரும்பியது கிடைக்கும் என்று கூற முடியாது. அது தங்கச் சுரங்கம்; உள்ளே பொதிந்து கிடக்கின்றன. நிரந்தரமாக நன்மை செய்வர். அவர்கள் நன்மைகள் கண்ணுக்குப் புலப்படா; ஆனால் தொடர்ந்து துயர் தீர்ப்பர்; மேன்மக்கள் தொடர்பு நிலைத்தது; தொடர்ந்து உதவுவது, பயன் உடையது; நம்பியவரை அவர்கள் என்றும் கைவிடமாட்டார்கள்.

## 17. பெரியவர்களை மதிக்கக் கற்றுக்கொள்

### (பெரியாரைப் பிழையாமை)

குணம் என்னும் குன்று ஏறி நின்றவர்கள் பெரியவர்கள்; அவர்களை அவமதித்தால் அவர்களை அடக்கிவைக்க முடியாது; "சாது மருண்டால் காடு கொள்ளாது" என்பது பழமொழி; 'சாது' என்பது இந்தச் சான்றோர்களைத் தான் குறிக்கும். 'என்ன சொன்னாலும் இவர்கள் பொறுத்துக் கொள்வார்கள்" என்று தப்புக் கணக்குப் போடக் கூடாது. அவர்கள் வெறுக்கத்தக்க அளவு அவமதிக்கத் தொடங்கினால் அது திருப்பி அடிக்கும். அவர்கள் சீறிப் பொங்கினால் உன் நிலை மாறிவிடும். ஆறி அடங்குவார்கள் என்று எதிர்பார்க்காதே,

பொன்னைப் பெற்றாலும் பெற முடியும். பெரியோர்களின் நன்மதிப்பைப் பெறுவது எளிது அன்று. அவர்களை நல்ல வகையில் பயன்படுத்திக் கொண்டு நன்மைகள் பெறலாம். அவர்கள் செயற்கரிய செய்யும் இயல்பினர்; பல நற்காரியங்களை அவர்களைக் கொண்டு சாதித்துக் கொள்ளலாம். அவர் தெரியும் இவர் தெரியும் என்று பறை அறைந்து கொண்டிருந்தால் என்ன நிறைவு அடைய முடியும். கற்ற பெரியவர்களிடம் பல நற் செய்திகளை அறிந்து கொள்ளலாம். உற்ற செல்வர்களாக இருந்தால் பொருள் உதவி பெற்று முன்னேறலாம். பதவியில் மேலோர் ஆயினும் சலுகைகள் பெற்று உயர இயலும்; கல்வி, சால்பு, செல்வம், பதவி, மதிப்பு, உயர் நிலை இவை உள்ளவர்கள் பெரியவர்கள்; நம்மைவிட வயதிலும் பெரியவர்கள்; அவர்களை மதித்தால் நீ உயர முடியும்.

பெரியோர்கள் அறிவு உடையவர்கள்; அவர்களைப் போற்றியோ தூற்றியோ ஏமாற்றிவிட முடியாது; இவற்றால் அவர்கள் மகிழ்வது இல்லை; கசிவதும் இல்லை; அசைவதும் இல்லை; இழிந்தவர் பழித்தும் அழித்தும் பேசி அவர்கள் மதிப்பைக் குறைக்க முயல்வர்; அவற்றை அவர்கள் பொருட்படுத்துவது இல்லை. எது உண்மை? எது பொய்ம்மை? எது நன்மை? எது தீமை என்று நுட்பமாக அறிந்து கொள்ளும் இயல்பினர் அவர்கள்; அவர்களிடம் நன்மை பாராட்டினால் சீர்மை பெற முடியும். சிறப்பு அடைய முடியும்.

நஞ்சு உடைய நாகம் கொடிது; அதைக் கண்டு மற்றவர்கள் அஞ்சுவர். அது மலைக் கல்லில் பதுங்கி மறைந்து இருந்தாலும் இடி இடித்தால் ஒதுங்கி அஞ்சும்

இயல்புடையது. நடுங்கும்; ஒடுங்கும். தீயவர்கள் "தம்மைப் பெரியவர்கள் கண்டு கொள்ளமாட்டார்கள். அவர்கள் அப்பாவிகள்; என்ன சொன்னாலும் கேட்டுக்கொண்டு இருப்பர்" என்று எதிர்பார்த்தால் அது பேதைமை ஆகும். பெருமை மிக்க நிலையில் உள்ளவர் சீற்றம் கொண்டால் அதை நீ ஆற்ற முடியாது; போற்றும் காவல் உள்ள இடத்தில் பொதிந்து மறைந்து கொண்டாலும் அவர்கள் காற்றும் புகாத இடத்தில் ஆதிக்கம் செலுத்தி உன்னை அடக்கிவிடுவர். பெரியோரை அவமதிக்காதே.

முளைத்து இலை மூன்று விடவில்லை; அதற்குள் களைத்த சொற்களைக் கொண்டு வளைத்துப் பெரியோர் களைத் தாக்குகிறாய், அறிவில் ஆற்றலில் தம்மை விட யாரும் உயர்ந்தவர்கள் இல்லை என்று தம்பட்டம் அடித் துக் கொள்கிறாய்; அவசரப்படுகிறாய்; ஆவேசமும் கொள்கிறாய். அறன் அறியும் அறிஞர்கள் அவர்கள் தன் னடக்கம் உடையவர்கள். தம்மைத்தாம் புகழ்ந்து பேசிக் கொண்டு இருக்கமாட்டார்கள்: ஆறி அடங்கி இருப்பர். அவர்களை மதித்து அவர்கள் தகுதி அறிந்து போற்றுவது சிறந்த கோட்பாடு ஆகும்.

சிறியவர் நட்புத் தொடக்கத்தில் சீறி எழும்; காலை யில் தோன்றும் நிழல் பெரிதாகக் காணப்படும். வர வர மாமியாராகி விடும்; தேய்ந்து விடும். பெரியவர் நட்புத் தொடக்கத்தில் சிறிதாகக் காணப்படும். வரவரப் பெரு கும்; மாலை நிழல் போல் அது நீண்டு கொண்டே இருக் கும். அது குளிர்ச்சியும் தரும்; மகிழ்ச்சியும் தரும். சிறியோர் தொடர்பைக் குறைத்துக் கொள்; பெரியோர் மதிப்பைத் தேடிக் கொள்.

அரசர் தம் செல்வம் அவர்களை அணுகுபவரே அடைவிர்; அனுபவிப்பர்; எல்லாச் சலுகைகளையும் பெறுவர்; பெண் கூட அவளை அணுகினால் தான் அவள் இன்பம் தருவாள், எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பெரியவர்களும் அத்தகையவரே. ''அவரை நாம் ஏன் மதிக்க வேண்டும்?'' ''வயது மிக்கவர்கள் வாலிபம் இழந்தவர், நரை திரை இவற்றால் நலிவுற்றவர்கள், கோல் கண்ணாகக் கொண்டு நடைபோடுகிறவர்கள்'' என்ற எடைபோட்டு ''இந்தக் கிழங்கள் முதிர்ந்த பழங்கள். இவர்கள் நமக்குச் சுமை; இவர்கள் உறவு நமக்குத் தேவை இல்லை'' என்று ஒதுங்கி வாழும் இளைய தலைமுறை பல நன்மைகளை இழந்து விடுகின்றனர். அனுபவமும் அறிவும் சான்ற அப் பெரியவர்கள் விலை மதிப்பற்ற செல்வம். இவர்களைப் புறக்கணித்து ஒதுங்கினால் முன்னுக்கு வர முடியாது; ஆண்டியாகவும் அழகிகளை அனுபவிக்க இயலாத அலிகளாவும்தான் வாழ வேண்டி வரும்.

நூல் பல கற்ற ஞான நன்னெறி உடைய பெரியோர்களிடம் கொள்ளும் தொடர்பு தூயது; ஏனைய முரடர்களிடம் கொள்ளு உறவு தீயது; முரடர்கள் அவர்கள் திருடர்கள்; உன் உழைப்பை வருடிக்கொண்டு சமயம் வரும்போது இடறி விழச் செய்வர்; விட்டுப் பிரிந்தால் சுட்டும் கொன்று விடுவர். சேரிடம் அறிந்து சேர்க; நல்லவர் சேர்க்கை நன்மை தரும்; பிடிக்காவிட்டால் விலகி விடலாம். தீயவரை விட்டு விலக முடியாது; விலகவிடமாட்டார்கள். ஆப்பு முளையில் அகப்பட்ட குரங்கின் கதையாகத்தான் முடியும்.

ஏடு எடுத்து ஏதாவது படித்துக் கொண்டிருந்தால் அஃது உனக்குப் பீடும் பெருமையும் தருகிறது. நாடிய

கல்வி கை கூடுகிறது. நூல் எடுத்துப் பிரித்துப் பார்க்காத அந்த நாள் வீணாளாகும். பத்திரிகை படிக்காவிட்டால் உன் சுற்றுப்புறம் அறிய மாட்டாய்; நூல்களைக் கற்றுக் கொண்டே இரு; புரட்டிக்கொண்டே இரு; திரட்டிக் கொண்டே இரு; கல்வி ஞானம். அது பயன் உடையது. அதே போலப் பெரியவர்களைச் சாராத நாளும் வீணான தே; பெரிய இழப்பு என்று தான் கூற முடியும்; நம்மால் இயன்றது பிறர்க்குக் கொடுக்காமல் கழிந்த நாளும் பயனற்ற தாகும். பண்பு மிக்கவர்கள் இந்த மூன்று நல்ல பழக்கங்களையும் விடமாட்டார்கள். நாளும் ஏடுகளைப் படித்தல், பெரிவர்களைச் சந்தித்துப் பழகுதல், வறிய வர்க்கு ஏதாவது ஈதல் இம்மூன்றும் பண்புமிக்க செயல்கள் ஆகும்.

சிலர் பண்பால் உயர்வு பெற்றவர் ஆவர்; ஞானத் தால் உயர்ந்தவர் ஆவர். அவர்கள் பெருமை மிக்கவர்; என்றாலும் பெருமை சிறுமை பாராட்டாமல் தம்மை அடையும் இளைஞர்களை ஆதரிப்பது, அறிவு கூறுவது, அன்பு காட்டுவது அவர்தம் கடமையாகும். சிலர் செல் வத்தால் செழிப்பு உடையவர் ஆவர். அவர்கள் ஏழை எளியவரிடத்துப் பழகி அவர்களைக் களிப்புறச் செய்தால் அவர்களும் மதிக்கத் தக்கவர் ஆவர்.

## 18. சேர் இடம் அறிந்து சேர்க

### (நல்லினம் சேர்தல்)

அறியாப் பருவத்தில் இருந்து ஊர் முரட்டுக் காளை களுடன் பழகிப் பாழாகிப் போன சிறுவர்கள் கூடத் திருந்த முடியும் புல் நுனிமேல் தங்கும் பனித்துளி காய் கதிர்ச் செல்வன் கரம்பட்டதும் மறைந்துவிடுகிறது. அதே

போலத்தான் தீயவரோடு பழகித் தீயவராக இருப்பவரும் நல்லவரோடு சேர்ந்து வல்லவராக மாறக் கூடும்; சேரும் இடம் அறிந்து சேர்வது உயர்வு தரும்.

நல்லவன் என்று பெயர் எடுக்கச் சில அடிப்படைச் செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. முதற்கண் 'அறநெறி யாது?' என்று அறிந்து கொள்ள வேண்டும். அடுத்தது ,நாமே கொடிகட்டிப் பறக்க முடியும்' என்று முடிவு செய்யக்கூடாது. எந்த நேரத்தில் எந்த அழிவு வரும் என்று முன் கூட்டி உரைக்க அல்லது கணிக்க இயலாது. நாம் பலரோடு பழகுகிறோம்; அவர்கள் நம்மைத் தாக்கிப் பேசக்கூடும்; கடுஞ்சொல் கேட்டுச் சுடுசொல் கூறத்தேவை இல்லை. அவர்களை மன்னிக்கும் மாண்பு நம்மிடம் அமைய வேண்டும்; அதனோடு அவர்கள் அவ்வாறு கூறக் காரணம் என்ன? நம்மிடம் உள்ள குறையாது என்று ஆராய்ந்து அவற்றைக் களைய முற்பட வேண்டும். பிறரை ஏய்த்து வாழவேண்டும் என்று சிறிதும் நினைக்க வேண்டாம். தீய செயல்களை மேற்கொள்வாரை வெறுத்து ஒதுக்கவும்; பெரியவர் கூறும் வாய்மை மிக்க சொற்களைப் போற்றிக் கொள்ளவும்; இந்த நல்ல பழக்கங்கள் சேர்ந்தால் நல்லவன் என்று மதிப்புப் பெற வாய்ப்பு உள்ளது.

இந்த உலகத்தில் நம்மை அடையும் துன்பங்கள் மூன்று; ஒன்று நம் நெருங்கிய உறவினைரைப் பிரிந்து வாழ்தல்; மற்றொன்று தீராப்பிணி; மூன்றாவது கேடுகள். கேடுகள் எவை என்று கூறமுடியாது; இழப்புகளைத்தான் கெடுதிகள் என்று கூறுகிறோம். 'அவனுக்கு என்ன கேடு' என்றால்' அவனுக்கு என்ன இழப்பு' என்பதுதான் கருத்து.

இந்த மூன்று துன்பங்களும் அணுகும்போது அவற்றைத் தாங்கவும் போக்கவும் பெரியவர்களின் துணை தேவைப் படுகிறது. நல்லவர்கள் இணக்கத்தை நாடவேண்டி உள்ளது. கற்றறிந்த கல்வியாளரின் தொடர்பு இவற்றை நீக்க வல்லது ஆகும்.

மரணம் என்பது ஒன்று உண்டு என்பதால் இந்தப் பிறவி நிலையற்றது என்று களைய முற்படார். பிறப்பு வெறுக்கத் தக்கது அன்று; அதனைச் சிறப்புற்றுச் செய் வதில்தான் நம் பெருமை அடங்கி இருக்கிறது. பண்புமிக்க நண்பினர்கள் வாய்த்தால் வாழ்க்கை ஒண்பு உடையது ஆகிறது. அஃது ஒளி பெறுகிறது; எனவே வாழ்க்கை வாழ் வதற்கு என்ற நிலை தக்க பண்பினர் நமக்கு அன்பினராக உள்ளனர் என்ற நிலை ஏற்படுவதால்தான்.

ஊரில் உள்ள கழிவுநீர் அதனைச் சாய்க்கடை என்பர்; அஃது ஆற்றோடு சங்கமிக்கும்போது அதன் உவர்த் தன் மையும் கழிவுத் தன்மையும் பேராற்றில் கலந்து விடு கின்றன. இரண்டும் கலக்கும்போது சிறுமை பெருமை பெறுகிறது. அந்தப் பழமை அதனை விட்டு நீங்குகிறது. அதனையும் அந்த ஆற்றின் கிளை என்றே கருதுவர். அது தூய்மை பெறுகிறது. உயர்வும் அடைகிறது. அதே போலக் கீழ்த்தரம் மிக்க பாழ்பட்ட வாழ்க்கை உடைய வரும் மேல்தரம் உள்ள மேன்மக்களோடு சங்கமித்தால் அவர்களும் பழைமை, அழுகல், உளைவுகள், வளைவுகள், நெளிவுகள் அனைத்தும் நீங்கிச் செம்மைஅடைகின்றனர்; சீர் பெறுகின்றனர்; சிறப்பு அடைகின்றனர்.

ஒளி வீசும் தண் மதியததை முயல் என்ற கறை சேர் கிறது; அது மதிக்கத்தக்கது அன்று எனினும் வான்

நிலவை வையகத்தார் வணங்கும்போதும் தொழும்போது இந்த முயலும் மதிக்கப்படுகிறது; அதுவும் வணங்குதற்கு உரிய பொருள் ஆகிறது. சிறியவர்களும் பெரியவர்களோடு சேரும்போது சீர்மை பெறுகின்றனர். அவர்களும் மதிக்கப்படுகின்றனர்.

பாலில் நீர் கலந்தால் பால் நீராகாது; நீர்தான் பால் நிறம் பெறுகிறது; பால் என்றே பருகப்படுகிறது. சிறியவர்கள் பெரியவர்களோடு ஒன்றி உறவாடி நட்புக் கொண்டால் அவர்களும் மதிக்கப்படுகின்றனர். அந்தப் பெரியவர்களைக் கொண்டுதான் இவர்கள் அடையாளம் காட்டப் படுகின்றனர்.

உழவர்கள் ஏர்க் கலப்பை புல் எங்கிருந்தாலும் அதைத் தூக்கி எறிந்து சமன் படுத்திவிடும்; என்றாலும் உயரமான இடத்தில் கற்கள் பொதிந்த மரத்தின் அடிப்பகுதியில் முளைத்துக் கிடந்தால் கலப்பை அதனைத் தொடாது. அதே போலச் சார்பு உணர்ந்து அவர்கள் சேர்ந்த இடம் அறிந்து பகைவர்கள் சிறியவர்களைத் தொடமாட்டார்கள். பெரிய இடத்துச் சார்பு இருக்கிறது என்றால் அவர்களைத் தொட அவர்களோடு போர் இடப் பின் வாங்குவர். பெரியவர்களின் தொடர்பு சிறந்த தற்காப்பைத் தருவது ஆகும்.

நிலத்தின் தன்மையை ஒட்டி அதன் புலத்தில் விதைக்கும் நெல் நலம் பெறுகிறது, சிறப்பும் பெறுகிறது. நீர் வளமும் நிலவளமும் நெல்லின் செழிப்புக்குக் காரணம் ஆகின்றன. அதே போலக் குடிப் பிறப்புச் சான்றாண்மைக்கு வித்தாகிறது, சத்தாகிறது; உரம்சேர்க்கிறது; உறுதி பயக்கிறது. நற்குடியில் பிறந்த நல்லோர் ஆயினும் அவர்

களுக்குத் தீயவர் சேர்க்கையால் சாய்வுகள்; ஏற்படுவது உண்டு, மரக்கலம் உறுதி உடையதுதான் என்றாலும் சூறைக் காற்று வீசினால் அது கவிழ்ந்து விடாமல் இருப்பது இல்லை; தீயவன் இணக்கம் சூறாவளி போன்றது. திடீர் என்று அவர்கள் வந்து சேர்வதால் அவர்கள் தாக்குதலினால் நல்லவர் தம் சீர்மையும் கெட வாய்ப்புள்ளது. எனவே உறுதி உடைய பெரியோர்கள் கூடத் தம்மிடம் சேர்பவர் யார் என்றும் கவனிக்க வேண்டும்; கண்டவரோடு உண்டு மகிழ விருப்புக் கொள்ளக்கூடாது. அற்பர் நட்பு உயிருக்குச் சேதம் விளைவிக்கும். மனத்தால் மாசு அற்றவர் என்றாலும் இனத்தால் ஆசு ஏற்பட வழியாகிறது; இனம் கொண்டு அவர் இகழ்ப்படுவர்; காட்டிலே தீப்பற்றிக் கொண்டால் மேட்டிலே உள்ள சந்தனமும் வேங்கையும் வேகாமல் போகாது; உயர் மரங்களும் பற்றி எரியும். கோரைப் புல்லில் பற்றிய தீ ஏனைய மரங்களின் வேரையும் அழிக்கும். சிற்றினம் கூடாது; சேர் இடம் அறிந்து சேர்க.

## 19. பேருண்மைகள்

### (பெருமை)

எது உண்மை? நன்மை தருவது உண்மை; அதுவே மெய்ப் பொருள் ஆகும். இந்த வாழ்க்கைக்கு என்ன பொருள்? பிறர்க்கு ஈய முடிவதில்லை; அதற்கு வேண்டிய உள்ளம் குறைகிறது; பொருளும் அருகுகிறது. வாரி வழங்கக் கூடிய வழி இல்லை. எதற்காக வாழ்வது? இளமை நாம் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே நம்மை விட்டு அகல்கிறது. இளமை இன்பம் தருவது. ஆனால் அதை நம்ப முடிவதில்லை; காதலித்துக் கூடிய

காரிகையரும் பேதலித்து விட்டு விலகுகின்றனர். தாய்மை அவர்களை ஈர்ப்பதால் கட்டியவனோடு தொடர்ந்து உறவாடுவது இல்லை; அவர்களும் ஏதோ பேருண்மை காண்பதில் நாட்டம் கொண்டு இயங்குகின்றனர். காதல் மக்களும் முற்றிய முதுமையில் நம்மை விட்டு விலகி விடுகின்றனர்; ஊன்று கோலாக இருப்பர் என்று எண்ணியது தவறு ஆகி விடுகின்றது. பாசம் வைத்த மக்கள் நேசம் மறந்து தனித்துப் போய்விடுகின்றனர். அதனால் இந்த உலக வாழ்வில் பற்றுக் கொள்ளுதலும் அதற்காக நம்மை நாம் விற்றுக் கொள்ளுதலும், அறியாமை ஆகும். பற்றுகள் நீங்கில் அடுத்தது யாது? எது மெய்ப் பொருள் என்று காண்பதற்கு அடிப்படை துறவுள்ளம்; அந்தத் துறவோடு உறவு கொள்வதே உறுதிபயப்பதாகும்.

இல்வாழ்க்கைதான் நல்வாழ்க்கை என்று அதில் அகப்பட்டு உழல்கின்றோம். அதுதான் காப்பு; இங்கு அது தரும் இன்பமும் சுகமும் எதுவும் தராது என்று எப்பொழுதும் அந்தச் சிறு உலகத்தைச் சுற்றியே நம் கற்பனைகள் சென்று வருகின்றன. என் வீடு, என் மனைவி, என் மக்கள் என்று எண்ணி எண்ணி அதற்காகவே அல்லும் பகலும் உழைத்து வருகிறோம். என்ன சுகம் காண்கிறோம்? சிக்கல் நிறைந்தது இல்வாழ்க்கை; எப்பொழுதும் ஏதாவது ஒரு பிரச்சனை உருவாகி வருகிறது! என்றுமே ஏதாவது தொல்லைகள் நம் எல்லைகள் என அமைகின்றன. எனக்கு என்ன குறை? வசதிகளைப் பற்றிப் பேசி இவைதாம் வாழ்வியல் என்று கருதி உயர் உண்மைகளை நம் கட்டுக்குள் மறந்து வாழ்கின்றனர். எதுவும் நிலைப்பது இல்லை, நம் கட்டுக்குள் அடங்குவது இல்லை; இவ்வளவும் தெரிந்தும் அதே சேற்றில்தான் உழல்கிறோமே தவிரக் காற்று வாங்கிச் சுகப்பட விரும்பு

வதில்லை. வெட்ட வெளிதனை மெய் என்று கருதித் தூய வெளிச்சம், காற்று இவற்றையும் சுவாசிக்க முயற்சி செய்வோமாக; மேலான பொருள்களைப் பற்றியும் சிந்தித்து உண்மை காண்போமாக.

வாழ்க்கை ஒரு தொடர்கதை; எங்கேயும் முடிக்க முடிவது போல அமைவது இல்லை. ஏதாவது ஒரு புதிய பிரச்சனை உருவாகிக் கொண்டுதான் வருகின்றது. இளைஞன் ''மணமாகிவிட்டால் எல்லாம் சரியாகிப் போய் விடும்; எந்தக் குறையும் இருக்காது. கைப்பிடித்தவள் பானை பிடிப்பாள், அவள் வந்த பாக்கியம் எல்லாம் சிலாக்கியமாக முடியும்'' என்று கனவு காண்கின்றான். வந்தபின் எத்தனை போராட்டங்கள்? அமைதி எங்கே? எந்த மூலை முடுக்குகளில் தேடிப்பார்க்கினும் கிடைக்க வில்லை. புகிதாக வந்தவள் இந்தக் குடும்பத்துப் பிரஜை களை நேசிப்பது இல்லை; பெற்ற தாயும் தந்தையும் அந்நியப்படுத்தப்படுகின்றனர். பின்பு குழந்தைகள் படிப்பு; அவர்களை நிலைநிறுத்துவது; அப்பப்பா முடிவே இல்லை. இவற்றைக் கண்டு மயங்கி இதுதான் இன்ப சுகம் என்று ஆழ்ந்துவிடாதே. இதைவிட மேலான வாழ்வு அமைத்துக் கொள்ள முடியும். சிந்தித்துப்பார் அறிவு உலகம் அழைக்கிறது. மெய்ப் பொருள் காண முயல்க.

மழை பெய்கிறது; பருக நீராக அமைகிறது. ஆனால் மழை எப்பொழுதும் பெய்துகொண்டே இருப்பது இல்லை; கிணற்று நீர் ஊற்றுகள் இருந்து சுரந்து கொண்டே இருக்கிறது. அதுபோல மேன்மக்கள் வரு வாய் குறைந்து விட்டாலும் தாம் சேர்த்து வைத்த செல்வம் கொண்டு பிறர்க்கு உதவிக்கொண்டே இருப்பர். அவர்கள் நன்மை செய்வதிலிருந்து பின்வாங்குவது இல்லை. கீழ்மக்கள் தாழ்நிலையில் இருந்தே செயல்

படுவர். செல்வம் மிக்கு இருந்தாலும் பிறர் அல்லல் தீர்க்க முன்வர மாட்டார்கள். பேருண்மை கண்டு பெரு மிதத்தோடு வாழ்வதே வாழ்க்கையாகும். உள்ளம் உயர்ந்து பிறர் துன்பத்தைக் குறைக்க முயல்வதே வாழ் வின் மெய்ம்மையாகும்; மெய்யறிவு என்பதும் அதுவே ஆகும்.

ஆற்றுப் பெருக்கு நீர்ப்பெருக்கால் நிலம் செழிக்கச் செய்து பயிர் வளர்க்கும்; உணவு பெருக வழி செய்கிறது. மக்கள் உயிர் வாழ்வுக்கு அடிப்படையாக விளங்குகிறது. மழை இன்மையால் நீர்ப் பெருக்கு இல்லாவிட்டாலும் ஊற்றுநீர்க் கொண்டு மக்கள் நீர் வேட்கையைத் தீர்க் கிறது; குடிக்க நீராகிறது. மேன்மக்கள் இருக்கும் காலத் தில் வாரி இறைப்பர்; இல்லாத காலத்தும் உதவிக் கொண்டே இருப்பர். பசையற்ற நெஞ்சோடு அவர்கள் வாழ்வது இல்லை. உயிர்களிடத்து நசை உற்ற வாஞ்சை யோடு வாழ்வர்; மக்களை எப்பொழுதும் நேசிப்பர்; இதுவும் வாழவின் மெய்ம்மையாகும்.

வெள்ளெருதுமேல் சூடுபோட்டால் அது பளிச் சென்று பலர் கண்ணிலும் படும்; "பாவிகள் எருதுக்குச் சூடு போட்டுவிட்டார்களே" என்று பழி பேசுவர். சான் றோர் சிறு தவறு செய்தாலும் அதைப் பறை சாற்றி இகழ்வர்; பெரிதுபடுத்திப் பேசுவர். அதுவே கீழ்மக்கள் எருதைக் கொன்று புசித்துவிடுவர். யாரும் அதைப்பற்றி ஏதும் எடுத்துப் பேசமாட்டார்கள். வெளுத்த துணிமேல் கறை பளிச்சென்று காட்டிவிடும். அதனால் சான்றோர் தவறு செய்வது தவிர்ப்பது நல்லது.

நகைச் சுவை என்பது மென்மையானது. நுட்ப மானது; அதைச் சுவைக்க மனஇயல்பு நன்றாக இருக்க

வேண்டும். எள்ளிப் பேசுவது மனத்துள்ளலால் விளைவது; பிறரை மகிழ்விப்பது; ரசனையே இல்லாத மண்டுகளிடம் சிரிப்புவரப் பேச முயன்றால் அவர்கள் தம்மை இழிவுபடுத்துவதற்காகவே இவ்வாறு பேசிவிட்டார் என்று சீற்றம் காட்டுவார். அறிவு நிரம்பிய சான்றோர் சலனமற்று வாழ்வர்; அவர்களிடம் குத்தலாகப் பேசினாலும் அவர்கள் குறையாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்; பெருமை பெருமைதான்; சிறுமை சிறுதான்.

யாரிடம் எப்படிப் பேசவேண்டும்? எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும். புதிதாக மணந்து கொண்டவளிடம் அவள் மகிழப் பேசவேண்டும்? "உன் மூக்கு என்ன சப்பையாக இருக்கிறதே; நெற்றி மேடாக இருக்கிறதே" என்று விவரித்தால் அவள் உன்னைக் கேடாக நினைப்பாள். "அதி சுந்தரி நீ; வனிதாமணி" என்றால் அவள் உன் உறவுக்கு உடனே படிவாள்; தடித்தனமாக அவளிடம் நடந்துகொள்ளக் கூடாது.

பயில்வானிடம் சண்டைபோடச் செல்கிறாய்; அங்கே அவனிடம் மெல்ல வருடிக் கொண்டு இருக்க முடியாது; தூக்கி எறிய முனையவேண்டும்; முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும். வஞ்சகரை நயமாகப் பேசி அவர்களை வெற்றி கொள்ளவேண்டும். நல்லவர்களிடம் நன்மை தோன்ற நடந்துகொள்ள வேண்டும். எங்கே யாரிடம் பேசுகிறோம் என்பது அறிந்து பேசுவது வாழ்க்கையில் வெற்றி தரும்.

முடுக்கிக் கசப்பான வார்த்தைகளைச் சொல்லி இடுக்கி விட விரும்புகிறான் ஒருவன். கோள் சொல்லி நல்லவனாக நடிக்க விரும்புகிறான். இல்லாதது பொல்லாதது

சேர்த்துக் கூட்டிப் பேசுகிறான். நமக்கு நன்மை செய்வது போல் காட்டி அவன் நம் நண்பர்களைப் பிரித்து வைக்க முற்படுவான். அப்பொழுதும் தலை அசைக்கலாம். ஆனால் நிலைகெடக் கூடாது; ஒளிவிடும் விளக்குப் போல் தம் நிலைமாறாமல் அவன் கூறுவதை எடுத்துக்கொள்ளாமல் அவனை அனுப்பி விடுவதே தக்கது ஆகும். யார் எது சொன்னாலும் சீர் தூக்கி ஆராய்வது பெருமை தரும்.

உண்பதற்கு முன் அவர்கள் கண் நான்கு பக்கம் பார்க்கவேண்டும். முதற்பிடியை மற்றவர்க்கு என்று எடுத்து வைத்துவிட்டு மற்றபடி உண்ணத் தொடங்க வேண்டும். பிறர் பசித்திருக்கத் தான் உண்பவன் நற்கதியைச் சாரான்; அவன் மனம் அழுக்குப் படிந்ததாக விளங்கும். மனம் மாசு பெற்று மங்கி விடுவான்.

## 20. உழைப்பே உயர்வு தரும்

### (தாளாண்மை)

ஏரியில் நீர்வளம் இருப்பதால் அடுத்த கழனிகளில் பயிர்கள் செழித்து வளர்கின்றன. பயிர்கள் பச்சைப் பசேல் என்று இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் ஏரியில் நீர் நிறைந்திருக்கிறது என்பதாகும். அவை செழித்து வளர்வதற்கு நீர் கொழித்துப் பாய்கிறது. சுற்றமும், உறவினரும், மக்களும் மனைவியும் சுகமாக இருக்கின்றனர் என்றால் அக்குடும்பத் தலைவன் உழைப்பதால்தான். தளராத உழைப்பு மற்றவர்கள் பிழைப்புக்குக் காரணம் ஆகிறது. நாட்டியப் பெண் பாட்டியலுக்கு ஏற்ப ஆடுகிறாள்; அவள் கண்கள் வாள்போல் சுழன்று சுறுசுறுப்பைக் காட்டுகிறது. அவள்

கண்களின் சுழற்சிபோல உழற்சி காட்டும் உழைப்பாளியின் சுறுசுறுப்பும், பரபரப்பும், பொருள் ஈட்டும் நல் முயற்சிகளும் அந்தக் குடும்பத்தை வாழ்விக்கின்றன. முயற்சி திருவினை ஆக்குகிறது; அயர்ச்சி தாழ்வினைத் தருகிறது.

நேற்று மெலிந்து கிடந்தான்; இவன் வலிந்து செயல் செய்ய முற்பட்டான்; சிறு தொழிலாகத் தொடங்கினான்; இன்று பெருந்தொழில் முதலாளி ஆகிவிட்டான். எப்படி? விடா முயற்சிதான்; ஆடிக்கொண்டிருந்த அவன் ஆரம்ப வாழ்வு காழ்ப்பு ஏறிக் கடுமைகளைத் தாங்கிச் செழுமை பெற்றுவிடுகிறது. காற்றுக்கு அசைந்து துவண்ட மெல்லிய தளிர்களைக் கொண்ட செடி கூட நாளடைவில் காழ்த்து வலிவு பெற்றுக் கட்டுத் தறியாகிறது. அது காற்றுக்குத் துவண்டு வெறும் கீற்றாகச் சாய்ந்து விட்டிருந்தால் போற்றத்தக்க இந்தப் பெருமையை அடைந்திருக்க முடியாது. காற்றுக்கும் மழைக்கும் ஈடுகொடுத்து நிமிர்ந்து நின்று திமிர்ந்து மரமாகி அது வைரம் பாய்ந்து அசைக்க முடியாத நிலைபெற்றுவிட்டது; இஃது உழைப்பாளிக்கு ஒரு ஆசான். அதைப் பார்த்து இவன் விடாப்பிடியாகத் தொடர்ந்து உழைத்தால் முன்னுக்கு வருவான். கட்டுத் தறியில் யானையைக் கட்டி வைக்க முடியும்; இவன் பல பேர் சுற்றத்தினர் நாடி இடம் அளிக்கும் செல்வனாகத் திகழ்வான்.

வலிமைமிக்க புலி பசித்தால் அது பட்டினி கிடக்காது; சிறு தவளை கிடைத்தால் அதைப் பிடித்து அந்நேரத்திற்கு உயிர் வாழ முற்படும். அதுபோலக் கால் தொழிலாக இருந்தாலும் அது மேலான தொழில் என்று அதைத் தொடங்குக. பிறகு மெல்ல மெல்ல முன்னேறலாம்.

தொடங்கும்போதே பெரிய அளவில்தான் தொடங்குவேன் என்று அடம் பிடித்தால் தடம் புரள்வது ஆகும்.

அரிய செயல் என்று அசதி காட்டினால் அஃது ஆண்மைக்கு இழுக்கு; பூ முடித்துப் புனைவுகள் செய்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தால் அதனைப் பெண் ஒருத்தியே செய்துவிடுவாள். செயற்கரிய செயலைச் செய்வதுதான் பெருமைக்கு அழகு, ''இது நம்மால் முடியுமா?'' என்று திகைப்புக் காட்டத் தேவை இல்லை; முடியும்; முயல்க; வெற்றி காண்க.

குலம் பேசி உயர்வு காண முயல்வர் நலம் பேசி நன்னிலை அடைய முடியாதவர்; உயர்வு தாழ்வு என்பது பிறப்பால் அடைவது அன்று. அவரவர் செய்யும் தொழில் சிறப்பால் அடைவது ஆகும். மிக்க பொருள் ஈட்டுக; அஃது உன்னை உயர்த்திக் காட்டும். தவம் கல்வி இவற்றோடு ஆள்வினை கூடினால் எதுதான் சாதிக்க முடியாது; தவம் என்பது விடாமுயற்சி; கல்வி என்பது செய்யும் தொழிலைப் பற்றிய நுட்ப அறிவு. ஆள்வினை என்பது செயலாற்றும் திறன்; அடுத்தது சோர்வு இன்மை; இந்த நால்வகைப் பொருளால்தான் மனிதருக்குச் சிறப்பு உண்டாகும். பிறப்பு அனைவர்க்கும் பொது: அதை வைத்துச் சிறப்புக் கொண்டாடுவதில் பயன் இல்லை; அவரவர் செய்யும் தொழிலால்தான் மதிக்கப்படுவர்.

ஒரு காரியத்தை மேற்கொண்டு அதை முடிக்கும் வரையும் அதைப் பற்றி அளவளாவுதல் வெற்றிக்குத் தடையாகும். செய்யும் தொழில் செம்மையுற நடைபெற வேண்டும் என்றால் வீண் பெருமைக்சாக அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது; அதை மற்றவர்கள் அறிந்தால்

அவர்கள் முந்திக்கொள்வார்கள். அது எப்படிச் செய்வது? அதனால் உண்டாகும் நன்மைகள் யாவை? இவை எல்லாம் ரகசியமாகவே வைத்துக் கொள்ள வேண்டும். முடிந்தபின் அறியட்டுமே! அதுவரை அடங்கி இருப்பது தக்கது ஆகும். மற்றும் பிறர் என்ன செய்கிறார்கள்? அவர்கள் தமக்கு எப்படிப் போட்டியாக வரக்கூடும் என்பது எல்லாம் கூர்ந்து கவனித்து வரவேண்டும், அவர்கள் செய்வது எப்படி என்பதை அறிந்து தம் தொழிலுக்கு அவ் அறிவினைப் பயன்படுத்த வேண்டும். பிறர் தொடர்பைத் தக்க வழியில் பயன்படுத்துவது அறிவுடைமையாகும். எனவே தம்மை வெளிப்படுத்திக்கொள்ளாமல் மற்றவர்களைக் கவனித்துக் கொண்டும் செயலாற்றுவது வெற்றி தரும்.

சிதல் அரிக்கப்பட்ட ஆலமரம் அஃது அழிந்து விடாமல் காப்பது அவைவிடும் விழுதுகள்; அவை அம் மரத்தைத் தாங்கிப் பிடிக்கின்றன. மக்களும் தந்தை தொடங்கி விட்ட தொழிலைத் தொடர்ந்து காப்பது அவர்தம் கடமையாகும்.

மதங்கொண்ட யானையை அதன் கதம் அடக்கும் வலிமை உடைய வள்ளுகிர் உடைய சிங்கம் போன்ற ஆற்றல் உடையவர்கள் வீழ்நிலை உற்றபோதும் தாழ்வுறும் செயல்களில் முயலார்; சிறு தொழில் செய்து ஜீவிக்கலாம் என்று மனம் சோர்வு பெறமாட்டார்.

கரும்பின் பூக்கள் குதிரையின் பிடரிபோல் காண்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். மணம் என்பது அதன் குணம் அன்று; நறுமணம் தராது. அதேபோலக் குடிப்பிறப்பு மட்டும் ஒருவனை உயர்த்திவிடும் என்று கூற முடியாது. படிப்பும், பண்பும், விடாத உழைப்பும், செயலும், மட்டுமே அவனை உயர்த்திக் காட்டும்.

சோற்றுப் பிண்டங்களாய்த் தண்டசோறு தின்று கொண்டு தரித்திரராய் வீட்டில் எடுபிடிகளாகச் செயல் பட்டு ஏற்றமின்றி வாழ்வார் அவர்கள் சோம்பேறிகள்; கூழைக் குடித்தாலும் தன்மானத்தோடு தாழ்ந்து விடாத உழைப்பால் உயர்வு பெற்று ஒளிபெற்றுத் திகழ்வார்; அவர்கள் உழைப்பாளிகள். உழைப்பே உயர்வு தரும்; அண்டிப்பிழைப்பது அடிமைத்தனம் ஆகும்.

## 21. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்

### (சுற்றம் தழாஅல்)

சுமை தாங்கி என்ற நிலையில் மகனை வயிற்றில் தாங்கி அவள் பெற்ற நோய்கள், மசக்கைகள் இவை எல்லாம் மகனைப் பெறும் நாள் மறக்கிறாள். அவை இன்ப நினைவுகளாய் நிற்கின்றன, பட்ட சுமை எல்லாம் ஒரு கணத்தில் மறக்கிறாள் மகனைப்பெற்ற மகிழ்ச்சியில். அதேபோலத் தாளாற்றிப் பொருள் தேடுகிறான்; பின்பு காலாற்றிச் சுற்றத்தோடு சூழ இருந்து உண்கிறான். அவர்களோடு பகிர்ந்து உண்டு, அளவளாவுகின்றான். அவர்கள் பசியைப் போக்கிய பெருமிதம் அவனை ஆட் கொள்கிறது. காதலியின் கடைக் கண் பார்வையில் விண்ணையும் சாடுவர் இளைஞர்கள்; இளைஞர்கள் பிறர் வருத்தம் தீர்கிறது என்றால் விண்ணையும் வளைத்து மண்ணையும் அளந்து அல்லும் பகலும் பாடுபடயாரும் முனைவர், சுற்றத்தினரைத் தழுவிக் கொண்டு அவர்கள் துயர் தீர்ப்பதே செல்வம் பெற்றதனால் ஏற்படும் பயன் என உணர்வர். நல்ல ஆண் மகனுக்குக் கடமைகள் சில உள்ளன. ஆளுமை உடையவன் என்று நாளும் அவனைப்

பாராட்டுவர். கோடையிலே இளைப்பாறும் குளிர் மர நிழல் என்று சொல்லும்படிப் பிறர் வாடையிலே அவர்க்கு ஆறுதல் தருபவனே சிறந்த தலைமகன் ஆவான். அது மட்டும் அன்று; பழுத்த மரம் உள்ளூரில் பொது இடத்தில் இருக்கிறது; அதுபலர் பசியைத் தீர்க்கிறது; ருசியை அளிக்கிறது. பலரும் பயன் பெறுகின்றனர். சுற்றத்தினர் வந்து நற்பயன்கள் பெற அவன் கற்றூண்போல் அவர்கள் சார நிற்கின்றான்; சுற்றம் போற்றுதல் நற்செல்வம் உடையவரின் கடமையும் ஆகும்; அஃது அவர்கள் தாளாண்மையை அறிவிக்கும்.

செடிக்குக் காய் சுமை அன்று; காய்கள் அடுக்கடுக்காகக் காய்த்தாலும் மரம் அவற்றைத் தாங்குவதற்குத் தயங்குவது இல்லை; பழுத்துக் காய்த்துப் பயன் தரும் மரங்களே மதிப்புப் பெறுகின்றன. வெடிக்கும் துயரத்தோடு இவன் படிகட்டு ஏறி மாறி மாறி இருந்து விருந்துண்டு செல்லும் சுற்றம் கண்டு உழைப்பாளி துவண்டு போகமாட்டான். வருவிருந்து வைகலும் ஓம்புவதில் அவன் மனம் மாழ்குவது இல்லை. சுமை அவனுக்குச் சுவை; மிகை அவனுக்கு உவகை; அவர்கள் வருகை உள்ளத்துக்குத் தரும் மகிழ்கை;

சிரித்துப் பேசிச் சிருங்காரம் விளைவிக்கும் சிற்றினத்தவர் உறவு கனத்துக் காணப்பட்டாலும் அவை நாட்கள் நீடிப்பது இல்லை; வெறுத்து ஒதுங்கிவிடுவர்; மிகுத்துப் பழகி நம் துயர் வருத்த அவற்றைத் தீர்க்கும் தகையாளர் நம் சுற்றத்தினர். அவர் மிகையாளர் எனினும் நம் துயர் தீர்க்கும் மருந்தாளர் ஆவர். நண்பர்கள் நீடித்து இருக்க விரும்புவர்; சுற்றத்தவர் துயர் தீர்க்க

எப்பொழுதும் ஒட்டி உறவாடுவர். நண்பர் உறவினர் நமக்குத் தேவையே எனினும் உறவுக்கு உள்ள உறுதி நட்புக்கு இருக்க வாய்ப்பு இல்லை,

நம்மை அண்டவரும் மண்டை ஓடுகள் அவர்கள் யாராக இருந்தால் என்ன? அவர்கள் தம் தலையெழுத்தை எடுத்துச் சொல்லி விலை மதிப்பு இல்லா உறவு பாராட்டி வந்தால், ''நீயார்? எப்படி எனக்கு உறவு? உனக்கு நன்மை செய்தால் எனக்கு என்னமேன்மை?'' என்று கேள்வி கேட்டு விருந்தாகிய வேள்வி செய்யாமல் இருப்பவர் கீழ்மக்கள் ஆவர். தராதரம் பாராமல் பராவரும் பண்பினர் யாவராயினும் அவர்களைச் சுற்றமாகக் கொள்பவரே ஏற்றம் மிகு மேன்மக்கள் ஆவர்.

பொன்தட்டில் புலி நகம் போன்ற புழுங்கல் சோறு, கறிகாய், வடை வகை இவற்றை அயலான் அழைக்க அரு விருந்து என அவற்றை வாரிக் கொட்டிக் கொள்வதை விட நம் வீட்டில் இருந்து கொண்டு நம் உழைப்பில் ஈட்டிய பொருளைக் கொண்டு உப்பு இல்லாத வெறுஞ் சோறு ஆயினும் நம் சுற்றத்தவரோடு அமர்ந்து உண்பதே எக்காலத்தும் இனியது ஆகும். அதற்கு இணையான இன்பம் எதுவுமே இவ் உலகில் இல்லை.

அவசரம், ஆவேசம், பசி; இவற்றோடு சுவைமிக்க உணவு; நடுப்பகலுக்கு முன்பே சுடச் சுடப் படைத்து உண்ண அழைக்கின்றார்; ஆனால் அவர்கள் முன்பின் பழகாத அறியாத புதியவர்கள்; அயலார். ''அய்யா! கொஞ்சம் பொறு! நேரம் ஆனாலும் ஆகட்டும்; சாயுங்காலம் வரை காத்திருக்க வேண்டுமா? பொறுத்திரு; அது ஆறிய கஞ்சி

யாக இருக்கலாம்; அஃது அமுதினும் இனியது ஆகும். அயலார் இடுவது கருணைக்கிழங்கு பொறியல் ஆயினும் அது வேப்பங்காய்தான். சுவை என்பது பொருளை ஒட்டியது மட்டும் அன்று. அது தருவாரது மன அருளை யும் ஒட்டியது ஆகும்.

கொல்லன் உலைக்களத்தைப் பார்; அதில் சுட்டுக் காய்ச்சப்படும் பொருளும் அதைப் பிடிக்கும் சூட்டுக் கோலும் இணைபிரிவது இல்லை; காய் எரி புகுந்து கனத்த சூட்டில் இரண்டும் பதன் படுகின்றன. சூட்டைக் கண்டு ஒன்றைவிட்டு ஒன்று விலக முற்படுவதில்லை; ஆனால் அதைப் பிடிக்கும் குறடும் அடிக்கும் சம்மட்டியும் பிரிந்து விடுகின்றன. நெருங்கிய சுற்றத்தினர் வளம் சுருங்கிய காலத்தில் ஒட்டி உறவாடுவர்; பதுங்கும் பண்பினை உடைய நண்பினர் சமயம் வரும்போது நெகிழ்ந்து தப்பித் துச் சென்று விடுவர். பழகுகிறவர் எல்லாம் பண்பினர் என்று கொள்ளுவதற்கு இல்லை; இளகுகிறவர் நம்மோடு இணையும் சுற்றத்தினரே ஆவர்.

இறுதிவரை நம்மோடு இணைந்து உறுதியாக உதவு வார் என்று நம்பி ஒருசிலரை நயக்கின்றாய்; மறுமைக்கும் அவர்கள் பெருமை தேடித் தருவர் என்று கருதுகிறாய். வாழும் போது நம் இன்பத்தில் பங்கு கொள்கின்றார். ஆனால் துன்பத்தில் நெகிழ்ந்து விடுகின்றனர். மண் குதிரை; இவர்களை நம்பி வேகமாகச் செல்லும் வெள்ளத் தில் பயணம் செய்ய இயலாது. பங்குச் சந்தை சரிந்து விட்டால் அங்குப்போடும் பணம் அரோகராதான். தங்கும் இன்பம் நினைக்கத் தக்க சுற்றத்தினரை நயக்க; அவர்கள் பயன்படுவர்.

இருந்து முகம் திருத்தி ஈர்க்குக்கொண்டு பேன் வாங்கி விருந்து வந்திருக்கிறது என்று சொன்ன அளவில் அவள்

பேயாடுகிறாள்; அத்தகைய வீட்டில் ஏதோ புத்தித் தடுமாறி அழைப்புத் தந்து கொழுக் கட்டை போட்டு காய் கறிப்பொறியல் வைத்து 'அடிகளே அமுதம் உண்க' என்று படி இறங்கி அழைத்தால் நீ உள்ளே நுழைந்தால் நெய் கமழ்க்கும், அந்த உணவும் கசக்கும்; வேம்பாகச்சுவைக்கும். 'வந்தால் போதும்' என்று வருகைக்கு மகிழ்ந்து ஆதனம் தந்து அமர வைத்து ஊறுகாயும் இல்லாத பழஞ்சோறு உண்ணத்தந்தால் அஃது அமிழ்தம் ஆகும். தேவரும் இந்த உணவைத்தேடி மண் உலகில் அடி எடுத்து வருவர். அன்பு என்னையும் குளிரச் செய்து விடுகிறது.

## 22. நீரைப் பிரித்து அறிக

### (நட்பு ஆராய்தல்)

கரும்பைக் கடித்துத் தின்ன நீ பாடம் படித்திருக்கிறயா? நுனிக்கருப்பு அது தொடக்கம்; இனிப்பு அதன் ஆரம்பம்; மெல்ல மெல்லக் கடித்து அடிக் கரும்புக்கு வா; தொடக்கத்தில் சுவை அதற்கு அமையாது; மெல்ல மெல்ல அது சுவைக் கட்டி; சாறு சுவைக்கும். உயர்ந்தவர் நட்பு பழகப் பழக இனிக்கும். தீயவர்பால் நட்பு செல்லச் செல்லப் புளிக்கும்; அடிக் கரும்பு ஆரம்பம்; நுனிக்கரும்பு முடிவு சென்று தேய்ந்து குறையும்.

ஆள் அடி உயரம்; அவன் செல்வத்தின் அகலம். இவற்றைக்கொண்டு அமையாது நட்பின் ஆழம். பண்பு மிக்கவரின் பழம் பெருமை குடிப்பிறப்பு. இதனை நீ அறிந்து கொள்வது முதற்படிப்பு. அவர்கள் நடுநிலைமை பிறழாத பீடும் பெருமையும் கொண்டவர். அத்தகையவரோடு நீ கொள்வது நட்பின் நன் முடிப்பு.

பருத்துக் கொழுத்த யானை அது பாகனையே கழுத்தை முறித்துக் கொல்லும். உருவு கண்டு அவனிடம் நட்பு மருவினால் அது யானையின் உறவாக முறியும். நாய்; அலைந்து திரிவதுதான்; குலைத்துக் குலைத்துக் குழைவதுதான். அது நன்றி கெடாது; நாயகனைக் கடிக்கத் தொடாது. நாயனைய நயத்தவரை நீ நட்பாகக் கொள்க; அது ஒட்பமாக அமையும்.

பக்கத்து வீட்டுக்காரன்; ஆனால் அவன் துக்கத்துக்குத் துணையாக மாட்டான்; எக்களித்து மகிழ்வான்; அவன் நட்பு நயக்காதே. இடத்தால் அகன்று எங்கோ வாழ்ந்தாலும் உள்ளத்தில் உண்மை உறவு கொண்டவர் பள்ளத்தில் விழும்போது படுதா இட்டுக் கொண்டு மறைந்து வாழார். கண்ணன் காரிகைக்குத் தரும் அபயமாக உபயம் செய்ய வருவர்.

கோட்டுப் பூ சூடிக்கொண்டால் அதனைக் கேட்டுப் பெற விழைவர்; மலர்ந்தால் அது கருகாது; கயத்து நீரப்பூ நீரை விட்டு எடுத்தாலே கள் நீர் (கண்ணீர்) விடும்; கலுழும்; கசங்கி விடும். மலர்களுள் இத்தனை வேறுபாடா? மாந்தர் தம்முள் இந்த வேறுபாடு இருக்கும்போது மலர்கள் மட்டும் மங்கியா கிடக்கும். ஒருமுறை பழகிவிட்டால் நீங்காத நட்பு மேலோரிடம் உள்ளது. பலமுறை பழகியும் கசங்கிக் கசந்து கலுழ வைப்பர் கீழோர். அவர்கள் நட்பு, கயத்து மலர் ஆகும்.

பாக்கு மரம்; வீட்டு முன் அழகு தருகிறது; காய்க்கிறது; பயனும் தருகிறது; ஆனால் அதை வளர்ப்பது அருமை; நீரும் சேறும் நிதமும் அமைத்தால் தான் அது பாக்கு மரம். இல்லை என்றால் அது வெறும் பார்க்கும்

மரம் தான் காய்காது. அல்சேஷன் நாய்போல் அதனை அடிக்கடிக் கவனிக்க வேண்டும். கடை மக்கள் நட்பு பாக்கு மரம்; அவ்வப் பொழுது அவர்களுக்கு ஊக்கத் தொகை தந்து நட்பு ஆக்க வேண்டும்.

தென்னை மரம் ஒரு முறை நீர் ஊற்றினால் அஃது உன்னை மறக்காது; நெடுக வளர்ந்தாலும் அதன் புத்தி குறுகவே குறுகாது; காய் தரும், இடைப்பட்டவர் ஒரு முறை தரும் உதவிக்கு வாழ்நாள் வரை நன்றி காட்டுவர்.

பனை மரம் தானே வளரும்; தானே காய்க்கும் தானே தரும், பிறர் உதவிக்கு அது கை நீட்டுவதில்லை. வள்ளல் சாதி அது. அத்தகைய நட்பை உள்ளுக; இவர்களே தலை யாய நட்பினர்.

அரிசி களைந்த கழுநீர்; அதுதான் அப்பொழுது கிடைத்தது; நல்லநீர் கொண்டுவர அவள் நாலுகாதம் செல்ல வேண்டி இருக்கிறது; கறிகாய் அதைப்பறி என் றால் அதனை அறியேன் என்கிறான். பசிக்குச் சோறு; புசிக்க வேறு தேவைப்படுகிறது. கொல்லைப்புறத்துக் கீரை அதனைப் புளியும் உப்பும் சேர்த்து அரைகுறையாக வேகவைத்து 'உண்க அடிகளே' என்று அமுத மொழிப் பேசிப் பரிமாறுகிறாள். சூடாக இருக்கிறது உணவு; குளிர்கிறது அவள் வார்த்தைகள். அமுதம் என்று கூறி அக மகிழ்வோடு உண்கின்றனர் வந்த விருந்தினர், அகம் நக ஒளிவிடும் நட்பு இது.

தடபுடலான வரவேற்பு; புடலங்காய்க்கூட்டு; எல்லாம் வெத்து வேட்டு, நீளம் அடி நான்கு தலைவாழை இலை; பரபரப்பு; சுறுசுறுப்பு; சலசலப்பு. எல்லாம் அடுக்கி வைக்கப்படுகின்றன. எடுத்து இட ஆள் இல்லை; நட்சத்

திர உணவகம்தான்; அலுத்துவிடுகிறது இதுவல்ல நட்பு; இது வெறும் நடிப்பு.

நாய்க்கால் சிறுவிரல்களை எப்பொழுதாவது கவனித்தது உண்டா? அவை சேர்ந்தே இருக்கும். பிரிக்கவே முடியாது. அழகான உவமை: அதுபோல் சேர்ந்தே இருப்பர்; அவர் நட்பர். ஆனால் ஈய்க்கால் அளவு உதவ வாய்க்கால் அங்கே சிறிதும் ஏற்படாது. பேய்க்கால் அவர்கள் உறவு; நிலைத்து ஊன்றி நிற்காது. சேய்க்கால் சென்று கொண்டு வர வேண்டும் வாய்க்கால் நீர்; அது வயல் விளைக்கும் செந்நெல்; வாழ்வு அளிக்கும். அத்தகையவர் உயர் நட்பினர் ஆவர்.

நல்லது நான்கு நவின்றால் நீ செவி கொடுத்துக் கேட்பாயா? கேள். தெளிவில்லாத முரடர் அவர் நட்பைவிட அவர்கள்பால்கொள்ளும் பகைமை தகைமை; நோய்வாய்ப்பட்டு நொந்து நித்தம் நித்தம் சத்தம் இட்டுக் கொண்டிருப்பதைவிட மொத்தமாக உயிர்விடுவது உயர்வு ஆகும். பண்பட்ட நண்பரைப் புண்பட்ட சொற்களில் தாக்குவதைவிடக் கண்பட்ட வாள்கொண்டுதென்பட்டஅவரைக் அடித்துக் கொன்றுவிடு; அது நன்று என்று நானிலம் பேசும். இல்லாததைச் சொல்லி நல்லார் இவர் என்று நற்சொல் கூறிப் புகழ்வதைவிட வசைச் சொற்கள் நான்கு பேசிக் கற்கள் வீசுவதைப்போல் கடிந்து உரைப்பது கவின் மிக்க செயலாகும்.

நட்பைத் தேடும்போது நாள்பல ஆயினும் நயத்தக்கவரை நாடி நட்பாகக் கொள்க. அக்கா மகள் என்று அங்க

ஈனம் உடையவளை நீ செங்கை பிடித்து மணந்து கொண்டால் அவள் உனக்கு எப்படி இன்பம், நன்மை, பணி முழுவதும் செய்வாள்? தங்கமனம் படைத்த செம்மல்களைச் செறிவு கொள்க.

## 23. ஒருவர் பொறை இருவர் நட்பு

### (நட்பிற் பிழை பொறுத்தல்)

உமி உண்டு என்பதால் நெல்லை நெகிழ்ப்பார் இல்லை; நுரை உண்டு என்பதற்காக நீரைக் குறை கூறி ஒதுக்கமாட்டார்கள். புல்லிதழ் அதன் புறத்தைச் சுற்றிக் கொண்டு அதன் நிறத்தைக் கெடுக்கிறது என்பதால் நறுமலரை வீசி எறியமாட்டார்கள்; அவைபோல நண்பனின் பழமை பாராட்டி அவன் கிழமையில் எந்தக் குறையும் காணாதே.

கரையை உடைத்துக் கொண்டு நீர் வயலில் பாய்கிறது; கரை உடைந்து விட்டது என்பதால் அதன் மீது சினம் கொண்டு அக்கறை காட்டாமல் பாய்ந்து ஓடவிட்டால் நெல்லை அஃது அழிக்கும். வயலுக்கு நீர் தருவார் யார்? நீரோடு நீர் ஊடல் கொண்டால் பயிர் வாடல்தான் மிச்சம். அதனால் பழகிவிட்ட நண்பர் உரிமை பற்றித் தவறுகள் மிகையாகச் செய்துவிட்டாலும் பகையாகக் கொள்ளாது நகையாகக் கொள்வதுதான் தகையாகும்.

சரிதான்; அளவுக்கு மீறித் தவறு செய்துவிட்டான். யார் அவன்? உன் நண்பன்; பலகாலம் பழகியவன்; அந்தப் பழமையைப் பார்க்க வேண்டாமா? உடனே நீ சீறிச் சினந்தால் அவன் உன்னை விட்டுத் தொலைந்தான்

ஆவான். ஒருவர் காட்டும் பொறுமை இருவர் தம்முள் உள்ள நட்பை நிலைநிறுத்தும். ''ஒருவர் பொறை இருவர் நட்பு'' இத்திருவாசகத்தை நாளும் கடைப்பிடிக்க; நட்புக் கெடாது,

பழகிவிட்ட பிறகு அவர்களை 'அழகன்று' என்று அவர்களை விலக்குதற்கு முயன்றாலும் ஆவர்கள் மழகன்று போல் உன்னையே சுற்றி வருவர். நெஞ்சில் மூட்டும் தீபோல் அவர்கள் எரிச்சலை ஊட்டுவர் என்றாலும் அவர்கள் பிழையைப் பொறுப்பது நமைச்சலைத் தாங்கிக் கொள்வதுபோல் ஆகும்.

நல்லது செய்தல் ஆற்றார் எனினும் அவனை விட்டு விட முடியாது. நட்புக்கொண்டவன், நயத்தக்க நாகரிகம் உடையவன், அவனை எப்படி விட்டுவிட முடியும்? நெருப்பு சுடத்தான் செய்கிறது; பொலிவுமிக்க வீட்டினையும் எரிக்கவல்லது. நெருப்பு இப்படிப் பேரழிவுகள் செய்கிறது. அதற்காக நெருப்பே மூட்டமாட்டோம் என்றால் அடுப்பு எரியாது; வயிறு கடுப்புத் தணியாது. யாரும் நெருப்பு இன்றி வாழ முடியாது. பருப்பில்லாமல் கலியாணம் இல்லை; பகுப்பு இல்லாமல் வகுப்பு அமையாது. தொகுப்பு என்ற நிலையில் பார்த்தால் உன் நண்பனை வெறுப்புக் கொண்டு ஒதுக்க இயலாது.

செறிவு கொண்டு பழகியபின் அறிவு கொண்டு அணைத்துக்கொள்பவரே சான்றோர் ஆவர். பிழைகள் சில கண்டு அவன் உடன் பழகுதல் தவிர்ப்பது அழகு அன்று; அவர்களிடத்து உள்ள குறைகளை எடுத்து அறை பறை செய்தால் அவர்கள் நீசர் ஆவர்.

பகைவர் அவர்கள் நமக்கு மிகைவன செய்வர். எனினும் அவற்றை மிகைப்படுத்தி வருந்தற்க; அறியாமை அவர்களை ஆட்கொண்டுள்ளது என்று அவர்களை மன்னித்துவிடு; தூயவர் ஆகிய நல்லோர் தவறுகள் செய்துவிட்டார் என்றாலும் அவர்கள் தெரிந்து செய்தவை அன்று என்று கொள்வதே நன்று ஆகும். நண்பனோ, பகைவனோ, யாவனோ எவனாயினும் என்ன? நட்பின் வகை அறிந்து அவர்கள் தகைமையைப் போற்றிப் பழகி வாழ்வதே சிறப்பு ஆகும்.

ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டு அது சேறு என்று கூறினால் அது யார் தவறு? குறை நிறைகளை ஆய்ந்தே நிறை உடையவர் என்று கண்டபின்பே நண்பனைத் தேர்ந்து எடுக்க வேண்டும். தாலிகட்டிக்கொண்ட பிறகு வேலிபோட்டுக்கொண்டு விவாகரத்துக் கோருவது விவேகமன்று. ஏறக்குறைய நல்லது பொல்லது பார்த்து அறுத்துக் கொள்ளாமல் பொறுத்துக்கொள்வது நட்பிற்கு அழகாகும். செறிவுமிக்க நட்பு என்றால் பிரிவு அதனைத் தாக்காது.

## 24. கழுத்தறுப்புகள்

### (கூடாநட்பு)

இருக்கும் வீடு ஓலையிட்ட கூரை; அது கிழிச்சல்; சுவர்கள் கசிவு; நீர் அதனைக் குளிர் சாதன அறை ஆக்குகிறது; தரை சேறு; சறுக்கி விளையாடலாம்; வெள்ளம் அணை தேடிக் கதவை முட்டுகிறது. நீர்ப்பஞ்சம் இனி இருக்காது; ஏன் வீடே அடித்துச் சென்றுவிடும். என் செய்வான் பாவம்! நீரை எறித்துக் கரை ஏற்றுகிறான்.

பெட்டி படுக்கை தட்டு, முட்டு ஓட்டை உடைச்சல் இவை தாக்கப்படுகின்றன. அவை காக்கப்படுகின்றன; அந்த வீட்டை விட்டு ஏன் வெளியேற மறுக்கிறான்? அது அவமானம்; பலஹீனம், சுகஈனமும் ஆகிவிடும். நூறு குறையிருந்தாலும் அதைவிட்டு வேறு இடம் பார்ப்பது அறிவுடைமையாகாது. நட்பும் அப்படித்தான்; பழகியவன் பெருச்சாளி; அடித்து விரட்ட முடியாது. பொறுத்துக் கொண்டு மெல்ல அவனிடம் இருந்து வெளியேறுவதுதான் புத்திசாலித்தனம்.

சீர்மிக்க நல்லோர் நட்பு கார் காலத்து மழை போன்றது; வாழ்வுக்கு உதவுவது. பேர்கெட்ட தீயோர் நட்பு வற்றிய வறற்காலம் போன்றது.

சுவர்க்கம், நரகம் இவை நாம் தேடிக்கொள்வன; நுண்ணுணர்வு மிக்க கண்ணியவான்களின் தொடர்பு சுவர்க்கம்; அறிவு என்பதன் அகராதி இல்லாத முகராசிகளுடன் தொடர்பு சுவர்க்க நீக்கம்; நரகம், இவை நாம் படைத்துக் கொள்வன.

பந்தமோ பாசமோ இல்லாது வந்துசேர்ந்த நட்பினர் தொடர்பு காட்டுத் தீ போலப் பற்றும்; வைக்கோற் போர் போல் வானை முட்டும்; பிறகு நெருப்பு இருந்த இடம் கூடத் தெரியாமல் மறைந்துவிடும். ஒளிவிட்ட நட்பு தோன்றிய கணத்தில் மறைந்துவிடுகிறது. இது கூடா நட்பு.

நண்பன் என்று அவனை நாடுகிறாய்; வானத்தை வளைத்துக் கயிறாக ஆக்கித் தருகிறேன் என்கிறான். நிதானமாகச் செய்யத்தக்க காரியங்களையும் செய்யாது ஏய்க்கிறான் ''இதோ இன்று; அதோ அன்று'' என்று என்றும்

பேசிக் காலம் கழிக்கும் குன்று அவன். அவனைச் சுற்றிக் கொண்டிருப்பது நன்று அன்று; நட்புதான் ஆனால் அது கூடாத ஒன்று; பயனற்றது.

தொட்டகுளம் ஒன்றுதான்; வெட்ட வெளிச்சம்; அதில் கழுநீர்ப்பூவும் ஆம்பலும் பக்கத்துப் பக்கக் குடிவாசிகள்தாம்; கழுநீர் வழுவுடையது; ஆம்பல் விழுப்பம் மிக்கது; வாசனைகள் வேறு; இது அது ஆகாது. அது இது ஆகாது. கீழோர் கீழ்மக்கள்தாம்; மேலோர் மேன்மக்கள் தாம். பிறப்புக்குணம் அவரவர்களை விட்டு விலகாது; அத்தகையவர் உறவு உனக்கு ஆகாது.

குட்டிக் குரங்குதான்; அது தன் நெட்டைத் தந்தையுடன் ஒட்டி உறவாட மறுக்கிறது. தந்தைக் குரங்கு கையகத்துப் பலாவைத் தட்டிப் பறித்துச் செல்கிறது. அப்பனுக்கும் மகனுக்கும் எவ்வளவு நெருங்கிய ஒற்றுமை; மட்டு மரியாதை மறந்து விட்டால் இனி அப்பன் என்ன சுப்பன் என்ன? உறவு ஒட்டவில்லை என்றால் எட்டிப் போவது நல்லது.

ஆபத்துக்கு உதவாத நண்பன் அவன் பாபத்திற்கும் அஞ்ச மாட்டான். உயிரையும் தந்து காப்பதாக உறுதி கொடுத்த தோழன் பெயரையும் கூறாமல், ''வந்தது சொல்ல வேண்டாம்'' என்று இவன் படுக்கையில் கிடந்தாலும் நெகிழ்ந்து விடுகிறான். "இவன் எல்லாம் உன் தோழன்" என்று ஆழமான நட்பைக் காட்டினாயே அவன் உன்னை குழி தோண்டிப் புதைக்கும்போது விழிகளில் நீர் மல்க வந்து அழுது நடிப்பான்; துடிப்பான்; பழம் நட்புப் பேசிப் படிப்பான்; கவலைப்படாதே! அழுவதற்கு ஒரு ஆள் இருக்கிறான்,

நன்மை கருதும் நண்பனைக் கைவிட்டு விட்டு நயமாகப் பேசி நடிக்கும் புன்மையனை நயப்பது நெய் ஊற்றும் கிண்ணததில் அதை நீக்கிவிட்டு வேம்பு அதன் நெய் நிரப்புவது போல் ஆகும். இனிமை கெடுகிறது; கசப்புப்படுகிறது. தீய நட்பு நீக்குக; கட்டுவிரியன் கண்ணுக்கு அழகு தருவது; அதன் பெடை அதனோடே பழகும் ஆண் பாம்பு; கூடி மகிழ இணையலாம்; என்றாலும் அதன் உயிருக்கே அது ஆபத்து உண்டாக்கிவிடும். நண்பர்கள் நயமாக உரையாடுவர்; கவர்ச்சி மிக்கவராகக் காணப்படுவர். புகழ்ச்சிக்கு உரியவர் போல் தோற்றம் அளிப்பர். ஆனால் எந்த அளவும் நன்மை செய்ய மாட்டார்கள். இவர்கள் கட்டு விரியன்கள்; நாமே தேடிக் கொள்ளும் சனியன்கள். குடிக்கும் பால் என்று நினைத்தால் அவர்கள் வெறும் கலப்படம்தான்; தண்ணீர்தான் புலப்படும்.

## 25. அறிவே ஆக்கம் தரும்

### (அறிவுடைமை)

அறிவு என்பது அறிந்து செயல்படுதல்; எப்பொழுது எது செய்தால் அது நன்மை தருமோ அப்பொழுது அதனைச் செய்வது அறிவுடைமையாகும். முளையிலே களைந்து விடலாம் என்று பகைவன் மெலிந்திருக்கும் நிலையில் அவனைத் தாக்குவது தற்காலிக வெற்றி தரலாம். "நொந்து கிடப்பவனை இவன் நோகடித்தான்" என்று இந்த உலகம் பழிதூற்றும்; எதிரி தலை நிமிர்ந்து வாழும்போது நல்லது கெட்டது காண அவனோடு மோதினால் அஃது ஆண்மை; அந்த வெற்றி நிலைத்து நிற்கும்; குறுக்கு வழி சறுக்கிவிடும். திங்கள் பிறை வடிவில்

இருக்கும்போது இராகு கேது இவை அதனைப் பற்றா, முற்றி வளர்ந்த நிலையிலேயே அவை அதனைச் சுற்றும்; அதுவே அதற்குப் பெருமை; கடன்பாக்கி கேட்பதாக இருந்தால் அவன் கையில் காசு உள்ளதா என்று கவனிக்க வேண்டும்; சட்டி பானை தெருவில் எறிகிறேன் என்றால் அது குன்று முட்டும் குருவியின் செயல் ஆகும்.

ஏழைகள் என்றும் அடங்கி இருப்பது அவர்களுக்கு ஏற்றம் தரும்; நிறை குடம் தளும்பாது; குறை குடம் நீர் தளும்பினால் உள்ளதும் வெளிப்படும். அடக்கம் இல்லை என்றால் அவனை மற்றவர்கள் முடக்கி விடுவர். அவனைப் பற்றி ஆதியோடு அந்தமாக நீதிகெட்டு விமரிசிப்பர். தப்பிப் பிறந்தவன் என்று அவன் பிறப்பில் தப்புக் காண முற்படுவர். உலகம் அவனை ஒப்புக் கொள்ளாது. அடக்கம் உயர்வு தரும்; அதுவே பிழைக்கும் வழி; அடங்காமை நிறை வறுமையுள் ஆழ்த்தி விடும். ஏழைகள் அவசரப்படக்கூடாது. வாய்க் கொழுப்பால் மண்ணைத் தலையில் வாரிக் கொட்டிக் கொள்ளக்கூடாது.

எட்டிக்காய் எட்டிக் காய்தான்; அதனை எந்த நிலத்திலும் விதைத்தாலும் அது தென்னையாக மாறவே மாறாது. அனைவரும் உயர்வுதரும் சுவர்க்கம் புகுவர் என்று கூறமுடியாது; ஒரு சிலர்க்கே அந்த வாய்ப்பு அமைகிறது. அதற்காக அங்கலாய்ப்புப்பட்டால் பயன் இல்லை.

வேப்பம் இலை நடுவே வாழை பழுக்கிறது என்றாலும் வாழை தன் இனிமையை இழக்காது. மோப்பம் பிடிக்கும் நாய் போன்ற இழிந்த இனத்தவர் சிலர் ஒருவனைச் சுற்றிக் கொண்டாலும் அவன் சுய அறிவு இயல்பாக உடையான் தன்சால்பு குறையான்.

சொந்த புத்தி கெடாமல் இருக்கும்போது ஒருவன் யாரோடு சேர்ந்தால் என்ன? பழகினால் என்ன? அவன் மனம் உறுதியாக இருக்கும்போது அவனை மடத்தனம் வந்து ஒன்றும் செய்யாது; கடற்கரைதான்; நீர்தோண்டிப் பார்த்தால் நல்ல குடி தண்ணீர் ஊறுகிறது; மலைப்பகுதி தான்; அங்கே உப்புத் தண்ணீர் சில சமயம் சுரக்கிறது; வியப்பாக இல்லையா? நிலத்தியல்பால் நீர் திரியும் என்பர் வள்ளுவர். நீர் தன் நிலை கெடாமல் இருக்க வாய்ப்பு உள்ளது என்று நாலடியார் கூறுகிறது; புதிய கருத்து. இரண்டும் இரு கண்ணோட்டங்களில் உண்மை யானதுதான்; கெடுவதற்கு வாய்ப்பு உண்டு; கெட வேண்டும் என்பது நியதி இல்லை; மாறுபட்ட கருத்துகள் அல்ல; துணை நிற்பன இவை.

நட்பு என்பது பூப்போன்றது; அது மலர்ந்து இருந் தால் தான் மணம் வீசும்; பூ வாடிவிட்டால் அதனை யாரும் நாடார். நட்பு அஃது ஒட்பு உடையது; எப் பொழுதும் ஒரே தன்மையது; கூம்பலும் மலர்தலும் இல்லாமல் ஒரு பூ இருந்தால் அதனைச் சிநேகிதத்திற்கு உவமை கூறலாம். எப்பொழுதும் ஒரே நிலையில் பழகு பவரே பண்புடைய நண்பினர் ஆவர். மலர்ச்சி பூவைப் போல அமையவேண்டும். நிலைபேறு காயாக முற்றிக் கனியாகக் கனிந்து இனிமைதர வேண்டும்.

சொன்னால் புரிந்து கொள்ளத் தேவை இல்லை; உணர்த்தினாலேயே உணரும் உயர்வு உள்ளவரே உயர்ந்த நண்பர் ஆவர்; பன்னிப் பன்னிப் பலமுறை எடுத்துப் பகர்ந்தாலும் செவியில் சேர்க்காத முரடர்கள் அவர்கள் தொடர்பினை அறுத்துக் கொள்வதுதான் ஆக்கம் தரும்; துன்பத்தினின்று விடுதலை கிடைக்கும். உணர்ச்சிதான்

நட்பாம் கிழமை தரும். மெல்லிய உணர்வுகள் துல்லிய மாக அறிபவரே நல்லியல் உடையவர் ஆவர்.

உன்னை நீதான் உயர்த்திக் கொள்ள வேண்டும்; யாரோ வந்து கை தூக்கி விடுவார்கள் என்று பை தூக்கிச் செல்ல வேண்டாம். தன்னை உயர்த்துபவனும் தான் தான்; தாழ்த்திக் கொள்பவனும் தானே தான். நிலையில் இருந்து படிப்படியாக வளர்பவனும் அவனேதான். எல்லாம் அவரவர் கைகளில்தான் இருக்கிறது; அழித்துக் கொள்ளலாம்; விழித்துக் கொள்ளலாம்; எப்படியும் வாழ லாம்.

கப்பல் கரை சேர்கிறது என்றால் கலத்தின் மாலு மிக்குப் பாராட்டு; அவன் தன் கடமையில் கருத்தூன்றி னான் என்பது அதன் விருத்தம்; எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கவும்; தெய்வம் கொடுத்த பொருளைக் கொண்டு இன்பம் துய்க்கவும்; மகிழ்ந்து உண்க. அதற்கு மேல் ஒருபடி; அதை நீ படி; ஆன்றோர் சொற்படி தருமத் துக்குக் கீழ்ப்படி. இயன்றவரை தருமவினை கடைப்பிடி; இவையே வாழ்க்கைப் படிகள்; இம் மூன்றையும் விடாப் பிடியாகக் கொண்டு நடந்து கொள்க. வாதம் விடுக; தருமத்தில் பிடிவாதம் காட்டுக.

## 26. படித்துக்கொண்டே இரு

### (அறிவின்மை)

நுட்பமான அறிவு இல்லை என்றால் அவர் வறிய வருக்கு நிகராவார்; ஒட்பமான அறிவு உடையவர் பெருஞ் செல்வருக்கு நிகராவர்; பேடிகள் பெண்மை அவாவு

கின்றனர். பெண்களைப் போல் தம்மை அலங்கரித்துக் கொள்வர். பயன்? அவர் பெண் ஆக முடியாது. அது போல 'கலகல' என்று தன்னை மிகைப்படுத்திக் கொள்பவர் கல்லாதவர், 'பொல பொல' என அறிவுடையவராகத் திகழ்வது அவர்களால் இயலாது.

இதனை நினைத்துப் பார்த்தாலே வியப்பாக உள்ளது; நூல் பல கற்றவர்; அவர் வீட்டு அடுப்பில் பூனை தூங்குகிறது. கேட்டால் "இனிமேல்தான் கடைக்குப் போக வேண்டும்" என்று கதைக்கிறாள் அந்தக் கற்றவர் மனைவி; "என்னப்பா நீ பல நூல் கற்று எல்லாம் தெரிந்தவனாக இருக்கிறாய்; பஞ்சப் பாட்டுப் பாடுகிறாயே" என்று கேட்டால் அவர் தன் வீட்டில் மாட்டி வைத்த சரசுவதியின் படத்தைக் காட்டுகிறார். "இரண்டு படத்துக்கு இங்கு இடமில்லை" என்கிறார். "திருவேறு தெள்ளியராதல் வேறு, இந்த உலகத்தின் இயற்கை இது" என்று கூறுகிறார். "கலைமகள் இங்கு இருப்பு; அலைமகள் உள்ளே வர மறுக்கிறாள்" என்று நகைத்துக் கொண்டே விடை தருகின்றார்.

"பள்ளிக்குச் செல்லு" என்று படித்துப் படித்துக் கூறினார் பையனின் தந்தை; துள்ளிக் குதிக்கும் பருவம்; எள்ளி நகையாடினான் அன்று. அடித்தும் பார்த்தகர். படியாத மாடாகி விட்டான். 'கல்' என்று சொன்னால் அவன் அது 'தக்க சொல்' என்று எடுத்துக் கொள்ளவில்லை. இன்று அவன் நிலைமை என்ன? பலபேர் கூடியிருக்கும் அவையில் நீட்டோலை வாசிக்க முடியாத நெடுமரமாக நிற்கிறான். 'ஏடு அறியேன் எழுத்து அறியேன்' என்று நாடோடிப் பாடல் பாடுகிறான். அவன் அங்கே நிற்க முடியாமல் நாணி அந்த இடத்தை விட்டு ஓடோடி வந்து

சேர்கிறான். கல்லாதவன் நிலை இதற்குமேல் எப்படிச் சொல்ல முடியும். அன்று அடித்துத் திருத்தியபோது படித்துத் தொலைக்காதவன் இன்று படும் வேதனை இது.

இரும்பு அடிக்கின்ற இடத்தில் ஈயிற்கு என்ன வேலை? அந்தச் சூடு அது தாங்காது. கற்றவர் அவையில் கல்லாதவர் செல்வது அவனுக்கு எந்தப் பயனும் விளையாது. அவன் வாயைத் திறந்தால் நாய் குரைக்கிறது என்பர். அவன் எதுவும் உரையாமல் இருந்தாலும் நாய் கிடக்கிறது என்பர். கத்தினாலும் தப்பு; சத்தமில்லாமல் சுத்தமாக இருந்தாலும் அஃது ஏற்கப்படுவது இல்லை.

படித்தவன்தான்; பட்டம் பெற்றவன்தான். ஆனால் முழுவதும் கல்லாதவன்; அவன் வாயைத் திறக்கிறான். சும்மா இருந்தால் சுகம்; தன் கல்வித் திறனைக் காட்ட உளறுகிறான். ஆழப்படிப்பு இல்லை; புதிதாகத் தெரிந்து கொள்ளும் ஆவலும் இல்லை. அவர்கள் கற்றவர்கள் என்று கருத முடியாது. மேலும் கற்பதே கல்வி என்று கருதப்படும். தொடர்ந்து நூல்களைக் கல்லாமை அறிவு விளக்கத்திற்குத் தடையாகும்.

அவனைப் பார்த்தால் படித்தவன்போல் தெரியவில்லையே என்று ஒருசிலர் பேச ஆரம்பிக்கின்றனர். ஏன் அவையின்கண் அடங்கி இருக்கத் தெரியவில்லை. அவசரப் படுகிறான்; அடித்துப் பேசுகிறான்; அவன் படித்தும் பேதை என்பதைக் காட்டிக் கொள்கிறான்.

தட்டிக் கேட்க ஆள் இல்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டன் என்பார். பனை ஓலை சலசலக்கிறது; அதில் பசுமை இல்லை; பச்சையோலை சல சலப்பு செய்வது

இல்லை; அது ஈரம் தாங்கி நிற்கிறது; கற்ற அறிவாளிகள் அடக்கம் காட்டுவர்; அருமையாக ஒருசில பேசினாலும் அவைபெருமை காட்டக் கூடியவை; ஆய்வுக் கருத்துகள் மிகச் சிலவாகத்தான் இருக்கும்; அதை உலகம் வியந்து வரவேற்கிறது. நுட்பமாகப் பேசுபவர் மிகுதி யாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டார். கத்திப் பேசி னால் கற்றவன் என்று மதித்து விடமாட்டார்கள்.

பன்றிக்குக் கூழ் ஊற்றும் தொட்டில் அதில் மாம்பழச் சாறு ஊற்றினால் அந்தப் பன்றிக்கு அதன் அருமை தெரியப்போவது இல்லை. பாறைக் கல்லிலே முளைக்குச்சி அடித்தால் அது பிளவுபடப் போவது இல்லை; செவிடன் காதில் சங்கு ஊதினால் அது மற்றவர்களைத்தான் செவி டாக்கும். அரிய கருத்துகளை அறிந்து பயன்படுத்திக் கொள்வார் முன்பே அவற்றைக்கூறவேண்டும்; பல்லில்லாத கிழவிக்குக் கல்முறுக்குத் தந்தால் அவள் என்ன செய்ய முடியும்? முறுக்குக் கல் என்பாள்; கல்வி கடுமை என்பான் கல்லாதவன்.

கரித்துண்டு அதை வெளுத்துக் கட்டுவது என்று ஒரு வன் பாலில் கழுவி அதை உலர்த்துகிறான்; அது உளுத்துப் போகுமே அன்றி நிறம் மாறாது; கருப்பு நாயை எவ்வளவு தான் தேய்த்துக் குளிப்பாட்டினாலும் அது வெள்ளை நிறம் பெறாது. முரடன்; படிக்க மனம் இல்லாதவன் அடித்து அடித்துப் படிக்க வைத்தாலும் அவன் மண்டை யில் ஏறப்போவது இல்லை; இந்த மாட்டு ஜென்மங்கள் சில இருக்கத்தான் செய்கின்றன. என் செய்வது?

நறுமலர் பூத்த நந்தவனம்தான்; அங்கே தேனீ சுழன்று திரியும்; தேனருந்தும், பயன்பெறும். கழிசடையில் மேயும்

ஈ அதனைப் 'பூந்தோட்டத்துக்குப் போ' என்றால் அதற்கு ''ஆவல் தனக்கு இல்லை'' என்று குப்பைக் கூளம் தேடித் தான் செல்லும்; அது அதன் வாழ்வு முறை. அறிவு தரும் நூல் நிலையம் சென்று ஏடுகளைப் புரட்டிப் பார்க்க விரும்பாதவர் பகல் காட்சிக்கு வெய்யிலில் கியூ வரிசையில் நிற்பர். மட்டமான படங்களைப் பார்க்கச் செல்வரே அன்றித் திட்டமிட்ட கல்வியை நாடமாட்டார்கள் சிலர்.

கற்றவர் கூறும் கசடு அற்ற ஞானம் அஃது அவனைக் கவரவில்லை; ஈர்க்கவில்லை; 'அறுவை' என்று சொல்லி விட்டுக் கேளிக்கை விருப்பும் வேடிக்கை மனிதரோடு உல்லாசப் பேச்சுப் பேச அவர்கள் சகவாசத்தை நாடிச் செல்வர். கல்விமேல் நாட்டம் செலுத்த மாட்டார்கள்.

## 27. பணம் படைத்தும் என்ன பயன்?

### (நன்றியில் செல்வம்)

விளாமரம் பக்கத்திலேயே காய்க்கிறது. அதன் மணம் மூக்கையும் துளைக்கிறது. வவ்வால் அருகிருந்தும் அதைத் தின்னச் செல்வது இல்லை. அது அதற்குப் பயன்படாது.

செல்வர்கள் மிக அருகில்தான் இருப்பார்கள் என்றாலும் மானம்மிக்க நல்லோர் அவரிடம் சென்று உதவிக்குக் கேட்க மாட்டார்கள். அச்செல்வம் பயன்படாத ஒன்று; யாருக்கும் பயன்படாது. அவர்களே வைத்துப் பூஜிக்கிறார்கள். என்செய்வது?

அள்ளிக்கொள்ளத் தக்கவகையில் கள்ளிப் பூக்கள் பூத்துக் கிடக்கின்றன. அவற்றை யாரும் தலையில் சூடிக்

கொள்வது இல்லை; சென்று பறிப்பதும் இல்லை. கீழ் மக்கள் செல்வம்மிக்கு வைத்திருந்தாலும் அறிவுடையவர் அவர்களைத் தேடிச் செல்லார்.

அடுத்த வீட்டு ஆசாமி; கொடுத்துப் பழக்கமில்லாத கருமி; அவனிடம் அவசரத்துக்கு என்று கேட்டால் சராசரி மனிதனாகக்'கொடுப்பது இல்லை' என்று கைவிரிப் பான். அவன் "கடல் நீர்." உவர்க்கும்; யார்க்கும் குடிக்கப் பயன்படாது. கிணறு சிறிதுதான்; அதன் தண்ணீர் பருகப் பயன்படும். செல்வம் படைத்தவர்கள் நல்ல உள்ளம் படைத்தவராக இருப்பது இல்லை. ஏழைகளே ஓரளவு அவசரத்துக்கு ஆறுதல் காட்டுவர் என்று கருதப்படுகிறது. இதில் ஏழை பணக்காரன் என்ற பேதம் இல்லை. கஞ்சத் தனம் இரு சாராரிடமும் உள்ளது. நல்லவர்கள் எங்கோ ஒரு சிலர் நன்மை செய்து கொண்டு இருப்பார்கள். அவர் களைத்தான் வறியவர் நாடுவர்; தேவைப்பட்டவர் தேடிச் செல்வர்; நாடிய பொருள் அங்குக் கைக் கூடும்.

கரிமுள்ளிச் செடியும், கண்டங்கத்திரியும் யாருக்குமே பயன்படுவது இல்லை. இவற்றைப்போல ஒரு சிலர் செல்வம் பிறர்க்குப் பயன்படாமல் சீரழிகிறது. என் செய் வது; தேவை உடையவரைச் செல்வம் நாடுவது இல்லை. தேவை அற்றவரிடம் அது சேர்ந்து பதுங்கிக் கொள்கிறது.

நல்லவர்கள் செல்வம் பயன்படுபவை; பலர் இருக் கிறார்கள் கஞ்சத்தனம் உடைய கீழ்மக்கள்; அவர்களிடம் செல்வம் தஞ்சம் புதுந்து கொண்டு வெளிவர மறுக்கிறது. என் செய்வது ?

நற்குணம் மிக்க பொற்புடையாரிடத்து வறுமை அடைக்கலம் புகுகிறது; பலாப் பிசின் போல ஈயாத

கஞ்சன்பால் செல்வம் ஒட்டிக்கொள்கிறது. இது வியப்புக்கு உரியது; இந்த நிலை மாறவேண்டும். உடையவர் இல்லாதவர் என்ற பேதம் நீங்கினால் தான் சமுதாயம் சீர்படும்.

தாமரை மலரில் தாள் வைக்கும் பொன்மகளே நன் மக்களை விட்டு விட்டுப் புன் மக்களைக் காக்கிறாள்; ஏன்? சிந்தித்துப் பார்க்க வேண்டிய சீர்கேடு இது; பணம் எங்கும் முடங்கிக் கிடக்க கூடாது. அது பொருளாதாரச் சீர்கேடு; இது மாதிரிதான் வாழ்க்கை இன்பமும்.

சோறு கண்ட இடம் சொர்க்கம் என்று எங்கே அழைப்புக் கிடைத்தாலும் நுழைப்புக்குப் பின் வாங்க மாட்டார்கள் அற்பர்கள்; மானம் மிக்கவர் எவ்வளவு தூரம் நடக்க வேண்டி இருந்தாலும் சோறும் நீரும் போதும் என்ற எளிய உணவு உண்டு அமைதி காண்பர். அலைச்சல் என்பது அவர்கள் உளைச்சலில் காணமுடியாது. அலைகிறவர்கள் வாழ்க்கையின் நன்மையைத் தொலைத்தவர் ஆவார்.

நெற்கதிர்கள் நீர் இல்லாமல் வாடுகின்றன. அவற்றை வாழ வைக்கும் பொறுப்பை மேற்கொள்ளாமல் மழை நீர் கடலுள் பெய்கிறது. இதைப் போல் அறிவற்றவர் கைப்பட்ட செல்வம் செறிவு அற்ற செயல்களுக்குப் பயன் படுத்துகின்றனர். வீண் விரயம் ஆக்குகின்றனர். ஏன் என்று கேட்க ஆள் இல்லை; இன்னும் இந்தச் சமூகம் விழிக்கவில்லை.

நுண்ணுணர்வு அற்ற பேதைகள் நூல் பல படித்தாலும் அவர்கள் அறிவு பெருக்கிக் கொள்வது இல்லை;

அதுபோல பேதையரிடத்துப் படும் செல்வம் மேதகு செயல்களுக்குப் பயன்படுவது இல்லை. செல்வம் இருந்தும் செல்வம் ஒழுங்கு படுத்தப்படுவதில்லை; சிந்தித்துப் பார்க்க வேண்டிய செய்தி இதுவாகும்.

## 28. ஈயாத உலோபிகள்

### (ஈயாமை)

நண்பனோ அந்நியனோ பசி அனைவருக்கும் உடைமை; அங்கே நட்பு பகை என்று பார்க்காதே; பசித்தவன் அவன் பசியைப் போக்குவற்குப் பின் வாங்காதே; அவன் வாழ்த்தட்டும்; வையட்டும்; அஃது அவன் போக்கு. கதவு திறப்பது காற்று வருவதற்கு; பசித்தவர் தடையின்றி நுழைவதற்கு; ஒருசிலர் கதவு அடைத்துக்கொண்டு தாம் மட்டும் உண்டு மகிழ்வர்; அவர்கள் உள்ளம் மிகவும் குறுகியது. சுவர்க்கக்கதவுகள் அவர்களுக்குத் திறக்காது;ஒளி அவர்கள் வாழ்வில் காண மாட்டார்கள். அந்த வீடு இருண்ட வீடு என்றுதான் கூற முடியும்.

உதவுதல் என்பது உபரிப் பணம் உடையவரால்தான் முடியும் என்று கூறுதல் பொருந்தாது; கூலிக்கு வேலை செய்பவர் கூட 'டீ'க்கடைக்குச் செல்கிறான்; அவன் தோழன் அவனோடு செல்லும்போது, ''நீ நில்; நான் 'டீ' குடித்துவிட்டு வருகிறேன்'' என்று நிறுத்தி வைக்கமாட்டான். உடன் அழைத்துச் செல்வான்; இதுதான் பண்பாடு, பெரிய வீடு; கூர்க்கா, காவல் மேல்நாட்டு நாய். மனிதர்களுள் சாதி ஒழிந்தாலும் நாயினத்தில் ஒழியவில்லை. இவ்வளவும் மீறி உள்ளே செல்ல முடியுமா? சென்றால்

இன்முகம் காட்டி நல் விருந்தா தரப் போகிறார்கள்? சலசலத்த புடவையுடன், கல கலத்த பேச்சில், மல மலத்து இருக்கப் போகிறார்கள். நீ வெல வெலத்து வெளியேற வேண்டியது தான். உள்ளம் உவந்து தருபவரே கள்ளம் தவிர்ந்தவர் ஆவர்.

பொருளை வைத்துக் கொண்டு அவன் என்ன செய்கிறான்? பொம்மலாட்டம் ஆடுகிறான்; தானும் மனம் வந்து உண்ணான், வயிறுக்கு வாய்தா போடுவான்! துறவிகள் பாவம் உறவு யாரும் இல்லாதவர். சோறு ஒன்றுதான் அவர்கள் உலகத்துப் பற்று. பசி ஒன்று தான் அவர்களை வசிக்கச் செய்கிறது. அவர்கள் மதுவோ மங்கையோ வேட்டு மகிழ விரும்புவதில்லை. சோறு கைப்பிடி சோறு; அதற்கும் கெடுபிடி; அவன் நாலு வீடு நடந்தால்தான் அவன் அட்சய பாத்திரம் நிச்சய பாத்திரம் ஆகிறது. அவர்கள் இல்வாழ்க்கை நடத்தும் நல்லோரை நம்பித்தான் வாழ்கின்றனர். அவர்களையும் கவனிக்காமல் சேர்த்துவைத்துச் செத்துப் போனால் பின் அந்தச் செல்வமே அவனைப் பார்த்துச் சிரிக்கும். இந்த உலகம் அவனை எள்ளி நகையாடும்; அதனால் செல்வர் பலருக்கும் பயன்பட வாழ்ந்து அதில் மகிழ்வு காண்க.

இடுக்கண் தீர்க்காது ஒடுக்கி வைத்த செல்வம் அவனா அனுபவிக்கப் போகிறான்? அஃது மகனுக்கு அவன் போற்றி வளர்க்கும் மகளுக்கு ஆகிறது. மகள் வளர்க்கத் தக்கவள்; கன்னிப்பருவம் வந்ததும் அந்நியன் அவளை இழுத்துச் சென்று கழுத்தை நீட்டு என்று தாலி கட்டி வேலி இடுவான். அனுபவிக்கத் தெரியாதவர்; அதற்கு என்று ஒருவன் வந்து அள்ளிக் கொண்டு போகப் போகிறான்; இவர் வாயைப் பிளந்துகொண்டு வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்.

கடற்கரையில் காற்று வாங்கச் செல்கிறான்; ஊற்று நீர்தான் அவன் தாகத்தைத் தீர்க்கிறதே தவிரப் பரந்த கடல் பயன்படுவது இல்லை. அஃது உவர்ப்பு; செல்வம் படைத்தவன் கண்ணுக்குத் தெரியலாம்; அவனிடம் சென்று கை நீட்ட இயலாது. இவனைப் போன்ற மாத வருவாய்க் காரன்தான் உதவிசெய்ய முன்வருவான்.

அதோ அவன் பொருள் சேர்த்துச் சேமித்து வைத்திருக்கிறான்; அவன் 'எனது' 'எனது' என்று சொல்லிப் பெருமைப் படுகிறான்; அவன் அதை அனுபவிப்பது இல்லை. நானும் அதை எனது என்று சொல்கிறேன்; நானும் எடுத்து அதனை அனுபவிக்கப் போவது இல்லை. அவனுக்கும் எனக்கும் வேறுபாடே இல்லை.

அடுக்கிய செல்வம் முடக்கி வைத்து அதனைக் காத்துப் பூதம் போல் விழித்துக் கிடக்கிறானே அவனைவிட எந்தக் காசும் இல்லாமல், தூசு தட்டத் தேவை இல்லாமல் நிம்மதியாக இருக்கிறானே அவன் வாழ்க்கை நிம்மதி; அவன் யாருக்கும் கைகட்டிக் கொண்டு பதில் சொல்லத் தேவையில்லை. உழைப்பு இல்லை; அதனால் ஏற்படும் உளைச்சல் இல்லை. செல்வனும் எதுவும் துய்க்கப் போவது இல்லை; இவனும் எதுவும் கொண்டு மகிழப் போவதில்லை; அவன் பணம் படைத்தவன்; இவன் குணம் படைத்தவன்.

சேர்த்து வைத்தது கோடி ஐந்து; என்றாலும் ஓடி எடுத்து விளையாட முடியாது; சொந்தம் என்று கூறிக் கொள்ளலாமே தவிர அதில் எந்த பந்தமும் காட்ட முடியாது. அசையாத சொத்து; ஐந்து பத்தாகிறது. அவன் செத்து மடிந்தான்; பாகத்தர் வந்து அதனை எடுத்துப் பாதுகாக்கின்றனர். அவர்களாவது எடுத்துச் செலவு செய்

கிறார்களா! பூர்வீக சொத்து என்று தார்மீகம் பேசுகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் பேரன் கொள்ளுப்பேரன் இப்படிப் பேர் கொண்டவர்களுக்கே உரிமை சேர்கிறது. அவனாவது துணிந்து எடுத்துத் தருகிறானா? பணிந்து பேசுகிறான்; "முன்னோர் பொருள் அதைப் போற்றிக் காப்பது தன் சீரிய கடமை" என்கிறான். சென்றவர்கள் வந்து தட்டிக் கேட்கப் போவது இல்லை. இவன் யாருக்கு அஞ்சுகிறான்? கஞ்சப் பயல்!

கன்றுக்குப் பசி என்றால் தாய்ப்பசு அதனை அணைத்துக் கொள்கிறது; மடி சுரக்கிறது; பால் அது குடிக்கிறது; கன்று சென்று அதனிடம் முறையிடுவது இல்லை, குறையுற்றுக் கெஞ்சுவது இல்லை. தாயே விரும்பிப் பால் தருகிறது. கன்று முந்துகிறதா; பசு முந்துகிறதா எது எப்படி என்று கூற முடியாது இதுதான் ஈவோர்க்கும் இரப்போர்க்கும் உள்ள உறவு முறை. இரப்போர் தாழ்வு மனம் கொள்ளக் கூடாது. அது அவர்களுக்கு அமைந்த உரிமை; ஈவோர் தருவது அவர்களுக்குப் பெருமை; வற்புறுத்தி வாங்குவதும் அதற்கு அஞ்சி ஈவதும் அற்பர்கள் செயலாகும்.

மாடு மேய்த்துவிட்டுக் கோலைத் தூக்கிப் போட்டுவிட்டுக் கால்மேல் கால்வைத்துக் காட்டு வழியும் மேட்டு வழியும் திரிகிறானே கண்ணனின் கதைக்கு வாரிசு கொண்டாடும் யாதவ குலத்தினன்; மாடு மேய்க்கும் கோன். அவனுக்கு எந்தக் கவலையும் இல்லை. இப்படிப் பலர் செய் தொழில் செய்துவிட்டு எய்தும் பொருளைக் கொண்டு கூட்டல் கழித்தல் சரி செய்து கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். துண்டு விழும் பேரம் அவர்களிடம் இருப்பது

இல்லை. இதோ தேனீ போலச் சுறுசுறுப்பாக வேலை செய்கிறானே அவன் நிலை என்ன? 'ஓய்வு இல்லை; ஒழிச்சல் இல்லை' என்கிறான். பொருள் ஈட்டுவதும் துன்பம்; ஈட்டியதைக் காத்துவைப்பதும் துன்பம். பணக்காரனாகப் பிறப்பது பாபமான தொழில் அரசர் குடியில் பிறந்தால் பெருஞ்சுமை என்கிறான் சேரன் செங்குட்டுவன். "மழை வளம் கரந்தால் வான்பேர் அச்சம்; நாட்டு மக்கள் தவறு செய்தால் அதைவிட அச்சம்" என்கிறான். பொருளதிகாரமே பொறுப்புடைய ஒன்று; அளவாக ஈட்டி அதைச் சேர்த்து வைத்து வளமாக வாழ்வதே அறிவுடைமை; முடிந்தால் பிறர் துன்பத்தையும் போக்குக. இதுவே அறன் எனப்படுவது ஆகும்.

## 29. இல்லானை இல்லாளும் வேண்டாள்

### (இன்மை)

காவி உடை உடுத்தி இந்தப் பாவ உலகினின்று விடுதலை பெற்றவன் ஆயினும் அவனும் நாலு காசு வைத்திருந்தால்தான் நாலுபேர் சுற்றி வருவார்கள். சாதிக்காரர்தான் எதையும் சாதித்து விடலாம் என்று நினைக்கலாம்; என்றாலும் குலம் குப்பையிலே; பணம் பந்தியிலே என்பதை மறந்துவிட முடியாது.

நீர் அதைவிட நெய் நுண்மையது; அதைவிடப் புகை நுழைய முடியாத இடமே இல்லை என்பர். அந்தப் புகையும் நுழைய முடியாத இடத்தில் வாழ வகை அறியாத வறிஞன் நுழைந்து விடுவான்; அவர்கள் பிழைக்க வழி தேடி எங்கும் வட்டமிடுவர், காரணம்? இல்லாத கொடுமைதான்,

காசு நாலு இல்லை என்றால் சுற்றமும் சூழார்; சொந்தம் பந்தம் எல்லாம் தலைகாட்டாது. பண்டம் இல்லை என்றால் வீடு சுத்தமாக இருக்கும். ஈமொய்க் காது. வரப்போக யாருமே இல்லை; காரணம் பருக நீரும் கிடைக்காது என்பதால் அருகே வரமாட்டார். தரித்திரம் எந்தச் சரித்திரமும் படைக்காது.

காசு இருக்கும்போது காக்காய்க் கும்பல் நம்வீட்டைச் சுற்றி வட்டமிடும்; திட்டமிடும். இல்லாத நோயைப் பற்றித் துருவித் துருவிப் பேசி நலன் விசாரிப்பர். "அப்பா சுகமா? அம்மா நலமா?" என்று கேட்பார்கள். காசு இல்லை என்றால் தூசு துடைக்கவும் ஆள் வரமாட்டார் கள். "கால்தூசும் பெறமாட்டான்" என்று அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டார்கள்.

"வண்டாய்ப் பறந்து வாழ வழி அறியாமல் வாடி னால் கண்டுகொள்ளவே யாரும் வரமாட்டார்கள். அதி காரமும் அப்படித்தான். நேற்று அவன் அரசு அதிகாரி. இன்று கோயில் பூசாரி. பொழுது போகவில்லை; கோயிலைச் சுற்றி வருகிருன். குங்குமப்பொட்டு அவன் நெற்றியில் ஒலமிடுகின்றது. அந்த வீடு வெறிச்சிடுகிறது. எல்லாம் இருந்தால்தான் விருந்தினரும் சுற்றத்தாரும்.

இல்லாமை என்ற நிலை ஏற்பட்டால் பிறந்த குலப் பெருமை மாயும்; பேராண்மையும் சாயும்; கல்வியும் ஓயும். எதுவுமே ஒளிவிடாது; யாருமே அவனைப் புகழ்ந்து பேசார். எல்லாம் மங்கிக் கிடந்து செயலிழந்து தன்னை மறந்து வாழ வேண்டியதுதான்.

வறுமை உற்றபோது இவன் வாடி வதங்குகிறான்; அது தெரியாமல் பழகிய சுற்றத்தவர் அவன் வீடு தேடி வந்து விடுகின்றனர். இவன் குரல் கொடுத்துக் 'குடிக்க' என்று மனைவியை அழைக்க, அவள், "பிழைக்க வழி இல்லாத நிலையில் இந்த ஜம்பம் எதற்கு?" என்று கேட்க இந்தச் சிக்கல்கள் எழுகின்றன. உள்ளூரில் இருந்து கொண்டு உதவ முடியாமல் இருப்பதைவிட எங்காவது கண்காணாத தேசம் வெளியூர் சென்று பிழைப்பது தக்கது ஆகும். அங்கே யாரும் வந்து இவன் பெயரையும் சொல்லி அழைக்கமாட்டார்கள். வீட்டுக்கு வெளியே அழைப்பு மணி அழுத்தம் இருக்காது.

வறுமையில் சிக்கியவர்கள் வாழ வகையின்றித் தவிக்கும்போது அவர்களிடம் நற்குணங்களை எதிர்பார்க்க முடியாது. 'வா' என்று வரவேற்கும் பண்பும் 'இரு' என்று சொல்லும் 'இன்பும்' எதிர்பார்க்க இயலாது. பெற்ற குணம் விலகும். கற்ற கல்வி தலை எடுக்காது. அறிவு விளக்கமும் அவனை அணுகாது, அன்றாடம் அடுப்பு எரிய வேண்டும். அதைப் பற்றிக் கவலை; மற்றைய ஒளி அவன் காணத் தயாராக இருக்காது.

ஒரு குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்றால் அந்த 'மகாலட்சுமி' சோறுபோடுவாள் என்று யாரோ சொல்லக் கேட்டு, அவன் அந்த வீடு 'திருமகள் இல்லம்' என்று நுழைகிறான். அந்த வீட்டு மருமகள் சொல்கிறாள் "இன்று போய் நாளை வா" என்கிறாள். உடனே சற்று நேரத்திற்குள் மாமியார் வருகிறாள். "அவள் என்ன சொன்னாள்? என்று கேட்கிறாள். "நாளை வா என்றார்கள்" என்கிறான் வந்தவன். "இந்த வீட்டில் அவளுக்கு என்ன அதிகாரம்? நான் சொல்கிறேன் இந்தப் பக்கமே எப்பொழுதும் வராதே" என்று திருத்தமாகக் கூறுகிறாள்,

உள்ளூரில் இருந்து இப்படி வேதனைப் படுவதைவிட வெளியூர் சென்று நாலு வீடு கேட்டு வயிற்றுப் பசி தீர்த்துக்கொள்வது வகையான வாழ்வாகும். அங்குப் பகை இல்லை; உறவு இல்லை; இந்த நகை இல்லை. பூ இழந்த கொடியை எந்த வண்டும் நாடாது.

பொருளிழந்த வறியவனை எந்தச் சுற்றமும் சூழ மாட்டார்கள். அவர்கள் தனித்து வாழ வேண்டியது தான்; சுற்றம் என்று சொல்லிக்கொள்ளத் தேவை இல்லை. அற்றபோது சற்று விலகி வாழ்வதே மேலாகும்.

## 30. தம் நிலையில் தாழாமை

### (மானம்)

பணம் படைத்துவிட்டாய்; அது உன் உழைப்பால் வந்தது, ஒப்புக் கொள்கிறோம். அதனால் மற்றவர்களைத் தாழ்த்திப் பேச நினைக்கக் கூடாது. மற்றவர்களை வருத்தக் கூடாது. அப்படி வருத்தினால் அது பிறர் மனதைச் சுடும்; காட்டுத் தீப்போல் படும். மானம் உள்ளவர் அதனை நிதானமாக எடுத்துக் கொள்ளமாட்டார். அவர்கள் எரிமலையாக மாற இந்தக் கொடுமையாளர் தாம் காரணம்.

தோலும் எலும்புமாகத் தோன்றி வறுமையில் வாடினாலும் நல்லியல்பு இல்லாதவரிடத்துத் தம் குறைபாடு எடுத்து உரைக்கார். உரைத்தாலும் அவர்கள் என்ன குறைக்கவா போகிறார்கள். குறிப்பறிந்து உதவும் நிறை மனம் உடையவரிடத்துத் தம் குறைகளைக் கூறினால் தவறு இல்லை; அவர்கள் தீர்த்து வைப்பர்; நீ உன் நிலையில் தாழத் தேவை இல்லை.

நீண்ட நாள் பழகியவன்; ''அவன் வேண்ட உடனே அழைத்துச் சென்று சோறும் நீரும் தந்து அவனை மகிழ் விப்போம்; அவன் மிடிமை தீர்ப்போம். அவனும் நம் வீட்டாரோடு பேசி நலன் விசாரிக்கட்டும். உள்ளம் கலந்து உறவாடுவோம்'' என்று இருக்கவேண்டும். செல்வன் ஒருவனைக் காண்கின்றான் பழைய நண்பன் ''செல்வோம் உம் வீட்டுக்கு'' என்றால் ''நில்லாய் முற்றத்தின் கண்'' என்று சொல்லித் ''தன் கைப்பட அவன் தட்டுச்சோறு வைத்து உண்க'' என்பான். நாயினும் கீழாக நடத்தும் முறை இது. உள்ளே அழைத்துச் சென்றால் கள்ளே அனைய காரிகை அவன் மனைவியைக் காமுறுவான் என அஞ்சுறு கிறான். தன் மனைவி மீதே அவனுக்கு நம்பிக்கை இல்லை. வீட்டுக்கு அழைக்காமல் வீதியில் நிறுத்தி நீதிகள் பேசு கிறான் மனித அபிமானம் நேசம் இவை பசையற்று விட்டன. கீழ்மகன் அவன்; அத்தகையவனை நாடிச் செல்வது கீழ்மையாகும்.

''ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு அஃது இழிவு ஆகும்'' என்று மானத்தோடு வாழ்பவன் என்றும் மதிப்பு இழப்பது இல்லை. கை நீட்டி அவன் பிறரிடம் கடன் கேட்பது இல்லை. ''நன்கொடை தருக'' என்று நவின்றது இல்லை உப்புக்கும் மிளகுக்கும் 'அப்பு' என்று அடுத்த வீட்டை அணுகியது இல்லை. கடிகாரம் நேரம் பார்க்கவும் மற்றவர் கை காட்டு என்று கேட்டதில்லை. எழுதித் தருகிறேன் என்று பிறர் எழுதுகோல் அவசரத் துக்கும் அங்கீகரித்தது இல்லை. இவன் இப் பிறவியில் இன் பம் பெறுகிறான்; மறுபிறவியிலும் நல்வாழ்வு அடை கிறான். 'யாமார்க்கும் கடன் அல்லோம்'' என்ற இறு மாப்பு அஃது அவனுக்குச் செம்மாப்பு.

குறுக்கு வழியிற் சென்று செருக்கோடு வாழத் தருக்கு உடையவர் நினைக்க மாட்டார்கள். பாவமும் பழியும் தரும் என்றால் அந்த வழி நோக்கிச் செல்லார். அதைவிட ஒரு முழங் கயிறு; மூட்டைப் பூச்சி கொல்லி; இன்னும் இத்தகைய வகையறாக்கள் அவற்றைத் துணை தேடுவர். சாவு ஒரு நாள் நிகழ்ச்சி. அதற்குப் பிறகு நிலையான புகழ்ச்சி; மானத்தோடு வாழ்ந்தான் என்று எங்கும் தொடர்ந்த பேச்சு. பழி அது என்றும் நிற்கும். நினைத்து நினைத்து மனம் அழிய வேண்டியதுதான்; இன்பம் என்று மகிழ்ந்து நல்கிய பிறர்க்கு இடையூறு செய்து வாழ்கின்ற மடையர்கள் என்றும் கடையரே.

வளம் மிக்க இந்நில உலகில் கோடிக் கணக்கில் குவித்து வைத்து அதனால் அவன் ஈசுவரன் என்று பாராட்டப்படு கிறான். நாடிவரும் ஏழையரைக் கண்டால் அவன் கை முடங்குகிறது; குறைகிறது, அழுங்குகிறது. அவன் ஒரு நோயாளி ஆகிறான். இவனா செல்வன்! தரித்திரம் படைத்தவன்; நித்திய தரித்திரன்; பணம் படைத்த பரம ஏழை; இவன் கோடியில் ஒதுங்கிக் கிடக்க வேண்டியது தான். அதே நாலுமுழம் வேட்டி; உண்பது நாழி, அவன் ஏழைதான். இல்லாதவன்தான். அவனிடம் குறை கூறி னால் அவன் நிறைசெய்கிறான். பிறர் துயர் களைகிறான்; இவன்தான் செல்வன்; இந்த நந்நிலம் இவனைப் பெற்ற தால் பெருமை பெறுகிறது. நிலம் அந் நல்லாள் மகிழ் கிறாள். இவர்கள் தரித்திரர்தாம், எனினும் நற் சரித்திரம் படைக்கின்றனர்.

இல்லாத கொடுமை; அதனால் இந்தச் செல்வனிடம் வந்து நின்று தாம் நிலையில் தாழ்ந்து விட்டதை எடுத்துக் கூறுகிறான்; செல்வன் அவனிடம் பரிவு காட்டுவதுபோல்

நடிக்கிறான். ''ஐயோ பாவம் நல்லவர்களுக்கே காலம் இல்லை; நீ யாருக்கும் எந்தக் கொடுமையும் செய்தது இல்லை; உனக்கா இந்தத் தாழ்நிலை. உள்ளபோது கேட்டவர்க்கு எல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்தாயே! உனக்கா இந்தத் தாழ்வு? பாவம்! கிழிந்த வேட்டி குழிந்த வயிறு மெலிந்த தேகம் இந்தத் தரித்திரம் மிகவும் கொடுமை; வறுமை மிகவும் கொடியது. நெருப்பிலும் தூங்கமுடியும்; இந்த வறுமையில் நிம்மதி இழக்க வேண்டியதுதான்'' என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறான். இந்தப் போலிகளை நினைத்தால் நெஞ்சம் குமுறத்தான் செய்கிறது. கொல்லன் உலைக்களத் தீ போலப் பற்றி எரிகிறது. இந்தச் பச்சோந்திகள் பகல் வேடக்காரர்கள்; இவர்கள் செல்வர்கள்; வெட்கம்; வெட்கம்; வெட்கம்.

அவன் கேட்கிறான்; கொடுக்கமுடியவில்லை; அதற்காக வெட்கப்படத் தேவை இல்லை. பிறரை ஏமாற்றிப் பிழைக்கிறாய்; அஃது உன் தொழிலாகிவிட்டது, ஊர் பழிக்கிறது. அதற்கும் அஞ்சவில்லை. அதற்காகவும் வெட்கப்படத் தேவை இல்லை. மொத்தத்தில் தன் குடிப் பெருமை கெடக் கூடிய நிலைக்குத் தாழ்ந்து போவது இழிவாகும். கீழ்த்தரமான வாழ்க்கை வாழ்ந்து மேல்தரமான புகழை அழித்து வாழ்வது வெட்கப்படவேண்டியதாகும்; ஒரு சில குறைகள் இருக்கலாம்; மொத்தமே ஓட்டை என்றால் அந்த வாழ்வு மதிக்கத் தக்கது அன்று. அடியோடு ஆட்டம் கொடுத்தால் அதை உலகம் மன்னிக்காது. மானம் கெட்டவன் என்று அப்பொழுதுதான் முடிவு செய்யும். அங்கு ஒன்று இங்கு ஒன்று கிழிச்சல் என்றால் அது கந்தல் துணி என்பர், அதுவும் மானத்தைக் காக்கும்; மொத்தமே கழிச்சல்; உதவாது என்றால் அதைத் தூக்கி எறிவது தவிர வழியில்லை; அவர்களை மானம் உடையவர் என்று கூற இயலாது.

மதம் மிக்க யானை அதனைக் காட்டுவேங்கைப் புலி அடித்து வீழ்த்துகிறது; அஃது இடப்பக்கம் விழுந்தால் வேங்கை தன் வலிமைக்கு இழுக்கு என்று அதன் இறைச்சியைத் தொடாது; பசி எடுத்தாலும் அதனைச் சுவைக்காது; செத்து மடியுமேயன்றிச் சத்து அற்ற அந்தச் செத்தையைக் கருதாது. சுவை குன்றிய உணவாக அது மதிக்கப் படும். "வீரம் குறைந்தது தோல்விக்குத் துவண்டது" என்று அந்த யானை கருதப்படும்.

யானை மிகப் பருத்த ஒன்றுதான்; அதை மிச்சம் வைத்து உண்டாலும் நாலு வாரம் தின்னலாம்; எனினும் அதைத் துச்சமாக மதிக்கிறது வேகம் உடைய வேங்கை அதே போல மானம் உடையவர் விமானம் மீது ஏறி இந்த உலகத்தையே வளைப்பதாயினும் தம் நிலையில் தாழ்ந்து அதனைப் பெறார். வானமே தம் காலில் வந்து விழுந் தாலும் அதனைத் தானமாகப் பெறார்; ஞானவான் களாக வாழ்வர்; நிதானம் தவறமாட்டார்கள்.

## 31. இரவலரின் அவலம்

### (இரவச்சம்)

இரத்தல் இழிவுதான்; என்றாலும் அதுவும் தேவை யாகிறது. ஆனால் அவர்கள் படும் இன்னல் மன உளைச்சல் அதற்கு இல்லை குறைச்சல்.

ஆணவம் பிடித்தவர்கள் பணத்தை ஆளுபவர்கள்; "இந்தப் பிச்சைக்காரர்கள் நம்மால்தான் பிழைக்கி றார்கள். துப்புக் கெட்டவர்கள்; அதனால் இவர்கள் துய ரத்துக்கு ஆளாகின்றனர். உள்ளவர் கை மடங்கினால் இல்லை என்பார்க்கு இல்லை வாழ்நிலை" என்று ஆண

வத்தோடு அறை கூவல் விடுபவர் உளர். செல்வத்திமிர்: அதனால் அவர்கள் இப்படிச் செருக்கோடு பேசுகிறார்கள். மருண்ட மனம் உடையவர்கள்; இவர்களிடம் தெருண்ட மனம் உடையவர் செல்லுதலைத் தவிர்ப்பர். உலகம் பரந்தது; உள்ளவருள் உயர்ந்தவரும் இருப்பர்; அவர்கள் உதவாமல் இரார்.

இரப்பதற்கு அஞ்சி இழிவான செயல்களில் இறங்குவர்; பழிதரும் பாவங்களையும் துணிவர்; உயிர் வாழ்க்கை உயர்ந்ததுதான்; தவிர்க்க இயலாததுதான்! அதற்காக மனிதன் தாழ்ந்தாபோக வேண்டும் சாவு என்ன கசக்கும் எட்டிக்காயா? ''உறங்குவது போன்றது இறப்பு; உறங்கி விழிப்பது போன்றது பிறப்பு'' என்பது வள்ளுவன் வாக்கு; பிறப்பும் இறப்பும் அதிசய விளைவுகள் அல்ல; அவை மனிதனுக்கு ஏற்படுகின்ற சிறு விபத்துக்கள்; அவற்றைத் தாங்கி எறியத் துணிவு இருந்தால் இரந்தும் உயிர் வாழத் தேவை இல்லை; மறந்தும் அவர் இழிதொல்களை ஏற்கத் தேவை இல்லை. மானம் பெரிது; உழைத்து வாழ முடியும்; நம்பிக்கை தேவை. உள்ளம் உறுதியாக இருந்தால் தலை நிமிர்ந்து வாழ முடியும். பிச்சை எடுக்கத் தேவை இல்லை.

இரக்கின்ற இழிவோடு அரிக்கின்ற வறுமையால், ''அன்பு சுரக்கின்ற இல்லம்'' என நினைத்து அவன் அடி எடுத்து வைக்கிறான். ''ஏன்'டா, தடிகடா மாதிரி இருக்கிறாய்! எங்காவது வேலை செய்து பிழைக்கக் கூடாதா?'' என்று எக்களிப்பால் கேட்கிறான். எழுபது லட்சத்துக்கு முதலாளி; வேலை கிடைத்தால் அவன் ஏன் உன் வீடுதேடி வருகிறான். அவன் வந்தது அறிவுரை கேட்க அன்று; பரிவுரை பங்கீடு பெற அன்று, 'பண உதவி' அதுதான் எதிர்

பார்க்கின்றான். கடிந்து பேசுவது மடத்தனம்; படிந்து பரிவு காட்டுதல் பெருந்தனம்; மதியாதார் வாசல் மிதிப்பது மிகவும் வேதனைக்குரிய செயல் ஆகும். இடன் அறிந்து கேட்க வேண்டும். வந்த பிறகு கடன் அறிந்து உதவ வேண்டும். இதுவே மனித இயல்; பண்பாடு; உடன்பாடு; அதற்கப்புறம் அவர்கள் பாடு.

திருமகள் செல்வச் செருக்கு உடையவள், அவள் எந்த இடத்திலும் நிலைத்து இருக்க மாட்டாள்; அறிவாளி; உழைப்பாளி; சேர்ப்பாளி இவர்களிடம்தான் தங்கிக் கலகலப்பாள்; சோர்வு இருந்தால், சோம்பல் காட்டினால் அவள் சொகுசாக அவனை விட்டு நீங்கி விடுவாள். பணத்தை வைத்துக் காப்பாற்ற முயலவேண்டும். பொருள் கைவிட்டுச் சென்றபின் கையறவு பாடினால் பயன் இல்லை. அவன் என்னவோ திட்டமிட்டே செலவு செய்தான், கஷ்டப்பட்டே வாழ்க்கை நடத்தினான். தெய்வம் கை கொடுக்கவில்லை. அது இவனைக் கைவிட்டு விட்டது இந்த இரண்டு காரணங்களால்தான் வறுமை வரவேற்புச் செய்கிறது. விரும்பியா ஒருவன் இரக்க வருகிறான். இரக்கமற்றவர் அதனை எண்ணிப்பாரார், எந்த நிலையிலும் பிறர் கையேந்தி வாழாமையே மேன்மைக்கு வழியாகும், ஊக்கம் அதனைக் கைவிடக் கூடாது; வறுமைக்குத் தாக்குப் பிடிப்பது வளர்ச்சியைத் தரும்

கேட்டால் மறுக்க மாட்டார்கள்; கேட்டு இல்லை என்று சொன்னது இல்லை. திண்ணிய அன்பினர்; கண்ணியம் மிக்கவர் என்றாலும் பூவைக் கசக்கி முகர்ந்தால் பூவும் தன் மணம் கெடும். அதனை விலகி இருந்தே ரசிக்க வேண்டும். வேறு வழி இல்லை; அவர்களை அணுகித்தான் அவசியத்தை ஈடு செய்ய வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டால் உள்ளம் வேதனை அடையாமல் இருப்

பது இல்லை. மனம் உருகுகிறது; வேகிறது; வேதனைப் படுகிறது. முன்பின் பழகாத ஒருவனிடம் சென்று துணிந்து கேட்டுப் பெறுவார் நிலை எண்ணிப்பார்க்கவே அச்சமாகிறது. அந்த அப்பாவிகள் எவ்வளவு துன்பப்படு வார்கள் ; எண்ணிப்பார்க்க வேண்டியது. இரத்தல் அச்சம் தருவது; இது கொடியது, வாட்டம் தருவது,

அவசரப்பட்டுப் பிறர் கையேந்தும் நிலைக்குச் சிலர் சென்று விடுகின்றனர். கடன் கேட்கத் துணிகின்றனர். நன் கொடை என்று நவில்கின்றனர். பிறரிடம் கைநீட்டிப் பெற்று அப்படி என்ன உனக்கு ஆடம்பரவாழ்க்கை கேட்கிறது? கேட்டால் என்ன சொல்கிறான். ''காருக்கு பெட்ரோல் தேவை; டி.வி. இல்லாமல் பொழுதுபோகாது, பட்டுப்புடவை இல்லை என்றால் பத்துக் கலியாணத் துக்குப் போக முடியாது. நகை இல்லை என்றால் புன் னகை எதிர் ஒலிக்காது'' என்று பேசுகிறார்கள். சிக்கன மாக வாழ்க; சீராக வாழ்க; இந்த இன்பத்துணைகள் இல் லாமல் வாழ முடியும். இன்பம் சுமையாகக் கூடாது. சில சமயம் துன்பங்கள் சுகத்தைத் தரும். சில தேவைகளை மறுத்து வாழ்ந்தால் மகானுபவனாக வாழ முடியும். கவலை நீங்கும். பற்றுகளே பற்றாக் குறைக்குக் காரணம் ஆகின்றன

மானிடர் புதிதாகப் பிறந்து கொண்டே இருக்கின் றனர். பிறப்பில் புதுமை இருக்கிறது. பழையன மறை கின்றன. புதியன தோன்றுகின்றன. மனிதன் புதியவன்; ஆனால் அவன் பண்பில் செயலில் எந்த வகையிலும் மாறாமல் இருக்கிறான். கஞ்சத்தனம் என்பது அவ னோடு தோன்றுகிறது; மனித நேயம் அதனை அவன் மறந்துவிடுகிறான்; பிறர் துன்பம் கண்டு துடிக்கும்

தாய்மை அவனிடம் அமைவது இல்லை. மனிதன் மனிதனாகவே இருக்கிறான். வானம் மாறிவிட்டது. ஆனால் மனிதன் மாறிப் பிறக்கக் கூடாதா? மேன்மைக் குணம் பெறக்கூடாதா? ''மனிதன் இவன்'' என்ற பாராட்டுக்கு உரியவன் பிறக்காமல் போகமாட்டான். ஒருவன் தருக என்று கேட்க வருகிறான் என்றால் 'பெறுக' என்று தருவது இல்லை; அவன் மனம் கருகக் கடிந்து பேசிவிடுகிறார்கள்.

ஏன் வருகிறான்? எதனால் வருகிறான்? எப்படி வருகிறான்? எவ்வாறு வருகிறான் சிந்தித்துப் பார்க்க வேண்டியது. அதைச் சிந்தித்துப் பார்க்கச் சீர்மை இல்லை. இது ஒரு விஞ்ஞான உண்மை; சில உந்துதல்கள் காரணம் ஆகின்றன. 'இல்லாமை' அவனை வந்து நெருக்குகிறது. என் செய்வான்? படித்தவன்தான், பண்பாளன்தான், அறிந்தவன்தான். வேறுவழி இல்லை தாழ்ந்து விடுகிறான். கூனிக்குறுகி அவன் உன் முன்வந்து நிற்கிறான். ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் அவன் மனம் இடித்து உரைக்காமல் இல்லை. இதை உணராமல், 'இல்லை' என்று ஒரே சொல்லில் அவனை அனுப்ப நினைக்கிறார்கள்! என் செய்வான்? அவன் எப்படி வாழ்வான்? உயிர் அதனைப் போக்கும் சுருக்குக் கயிறு; அந்த மறுப்புச்சொல் பொறுப்பற்ற செயல்; கொலைஞர்கள் இவர்கள்.

அலிபாபாவும் நாற்பது திருடர்களும் கதை தெரியுமா? ஒருவன் முந்திக் கொண்டான். தங்க நாணயங்கள் சேர்த்துக் குவித்துக் கொண்டான். அடுத்த வீட்டுக் அவன் பிந்திச் சென்றான். கால் கை பிடிபட்டு உதை பட்டான். அவரவர் அதிருஷ்டம் அது. வாய்ப்புக்கள் சிலரை வாழவைக்கின்றன. சிலரைத் தாழ்த்துகின்றன. ஏழையும் வாழ்கிறான், செல்வனும் வாழ்கிறான். ஏறக்

குறைய ஒருவனுக்கு ஒருவர் உதவிசெய்து கொண்டுதான் வாழவேண்டும். இல்லாதவர் இருப்பவனைக் கேட்டுப் பெறுவது தவறாகாது. அவசியம்; இதில் ஆவேசப்படத் தேவை இல்லை, அவசரத்திற்கு உள்ளவனைக் கேட்பது இழிவு அன்று; ஆனால் அந்த மடையன் அதை உணர்வது இல்லை; 'ஈக' என்று கேட்டுவிட்டாலே ஈனமாகப் பார்க்கிறான். செல்வச் செருக்கு அவன் ஆணவத்தைத் தூண்டுகிறது. அவன் நல்ல குணங்கள் மறைகின்றன. அடுத்த வீட்டுக்காரனாக இருந்தாலும் கொடுக்கல் வாங்கல் தவிர்ப்பது நல்லது; உறவு கெடாது. ஏதோ பகை வெறுப்பு இல்லாமல் வாழ முடியும். கேட்பது தவறு அன்று. தராதவன் அவன் கருமி; அதனால் விலகி நிற்பது நல்லது.

வைர அட்டிகை கதை தெரியுமா? திருமணத்துக்குச் செல்லப் பக்கத்து வீட்டுக்காரியிடம் 'வைரச்சரடு' இரவல் கேட்டாள். அங்கே அதைத் தொலைத்து விட்டாள். என் செய்வாள்? கடன் உடன் வாங்கிப் புதிய வைரச்சரடு வாங்கி எதுவும் விளக்காமல் பக்கத்துவீட்டுக்காரியிடம் திருப்பிக் கொடுத்துவிட்டாள். இந்தக் கடனுக்காகக் காலமெல்லாம் உழைத்தாள், ஓடாய்த் தேய்ந்தாள். பக்கத்து வீட்டுக்காரி கேட்டாள். 'நீ பேரழகியாக இருந்தாய். இன்று சீர் கெட்டு விட்டாயே ஏன்?'' என்று விசாரிக்கிறாள். ''எல்லாம் வைரச்சரடுதான்'' என்று விளக்கம் கூறினாள்.

''அடிப்பாவி அது வைரம் அன்று; வெறும் போலிக் கல்'' என்றாள். அதிர்ச்சி ஏற்பட்டது. ''இரவல்

வாங்குவது எவ்வளவு தீது" என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டாள். பக்கத்து வீட்டுக்காரி அந்த வைர அட்டிகையைத் திருப்பித் தந்தாள்; அஃது அவளுக்கு அழகு சேர்க்கவே இல்லை. ஒரு சிலர் கொடுத்தும் கெடுத்து விடுகின்றனர். இயன்றவரை பிறரைக் கேட்காமல் இருப்பது நல்லது. உறவுகள் நீடிக்கும். இல்லை என்று மறுத்தாலும் அவர்கள் வேதனைப்படுவர். என் செய்வது?

## 32. அவை அறிந்து பேசுக

### (அவை யறிதல்)

அறிவு மிக்கவர் அங்கு ஆய்வு நடத்துகின்றனர். கூட்டம் அது என்று நாட்டம் கொண்டு கண்டவர் நுழைகின்றனர். நுணுக்கமான செய்திகளை அவர்கள் கூரிய அறிவு கொண்டு அலசி விவாதிக்கின்றனர். ''முட்டை முதலா ? கோழி முதலா ?'' என்று தேவையற்ற கேள்வியைக் கேட்டு அதற்கு ஒரு பக்கம் நின்று வாதாடுகிறான். இதைப்பற்றி யாருமே முடிவு கண்டதில்லை. வீண் தருக்கம் அடுத்த கேள்வி ''பெண் தொடக்கமா ஆண் ஆரம்பமா ?'' இவை நம் அறிவுக்கு அப்பாற்பட்டவை. ''கடவுள் எப்பொழுது தோன்றினார் ?'' இது குறுக்குக் கேள்வி. அவையிற் கூடிய புலவர்கள் நவையற்ற செய்திகளைப் பேசுகிறார்கள். இவர்கள் கவைக்கு உதவாதவற்றைப் பேசி அவலத்தை உண்டாக்குகிறார்கள். கூட்டம் கலவரத்தில் முடிகிறது. அவைக்கண் கற்றோர் தேவையற்றவரை அனுமதிப்பது அமைதியைக் கெடுக்கும். அசதியை உண்டாக்கும். பெரிய விஷயங்களைச் சிறியவர் முன் பேசுதல் கூடாது.

கூட்டம் இருவகைப்படும். ஒன்று சிறப்புக் கூட்டம்; மற்றொன்று பொதுக்கூட்டம். எதிலும் சில வரை முறைகள் உண்டு; தலைவர், பேச்சாளர் என்ற பாகுபாடு உண்டு. நன்றி நவில நல்லவர் ஒருவர் நாலு வார்த்தை பேசி முடிப்பர். தலைவர் முன்னுரை பேசி முடிவுரை தருவர். பேச்சாளர் அவர்தான் தலைப்பை ஒட்டித் தலையைச் சுற்ற வைப்பார்; அவையில் அமர்வோர் அடக்கமாக அமர்ந்து சொல்வன கேட்டு அறிய முற்பட வேண்டும். புரியாமல் இருந்தால் வெளியே செல்வது கண்ணியம்; அயராது அசையாது அமர்வது நாகரிகம்; வாயைத் திறக்காமல் இருப்பது அவை அறிந்து செயல்படுவது ஆகும்.

பள்ளியிலேயும் பட்டி மண்டபங்களிலேயும் சிலர் செய்யுட்களை மனப்பாடம் செய்து கடல் மடை திறந்தது போலக் கனத்த சொற்களில் அடித்துப் பேசுவர். கம்பனைக் கரைத்துக் குடித்துவிட்டவர் போல் இரைத்துப் பேசுவர். இவர்களைக் கல்விக் கடல் என மதித்துக் கரகோஷம் செய்து ஆரவாரித்துப் பாராட்டுவர்.

பட்டி மன்றத்துக்கு என்றே சில படைகள் திரண்டு எங்கும் 'வெட்டி'ப் பேச்சுப் பேசுவதையே புலமை என்று காட்டி வருகின்றனர். இவர்களில் பலர் பதிவுத் தட்டுகள். ஆழ்ந்த புலமை உடையவர் என்று கூறமுடியாது. ஆனால் சொல் விற்பன்னர்; சுகமாய்ப் பேசுவர். அதற்கு இப்பொழுது கூட்டம் மிகுதியாகக் கூடுகிறது. அறிவுக்கு விருந்தாகின்றது. வரவேற்கத்தக்க வளர்ச்சி என்றே கூறவேண்டும்.

கல்வி கற்றவர் ஆறி அடங்கி ஒரு சில சொற்களே பேசுவர்; ஓசை எழுப்பி மக்களை மகிழ்விக்கத் தெரியாதவர்கள் இவர்கள். இவர்களே சான்றோர் என மதிக்கப்

படுவர். இவர்கள் பேசக் கூட்டம் கூடாது. நாட்டமும் செலுத்தார். ஆரவாரம் மிக்கது இந்த உலகம்; அறிவு நாடி அணைதல் மிகவும் குறைவு. தப்பித் தவறி முரடர்கள் மேடை ஏறி விட்டால் கரடு முரடாகப்பேசிக் கூட்டத்தைக் கெடுத்து விடுவர். அவையை அடக்கி அமைதி காத்து அழகாகப் பேச வழி வகுப்பதே கற்றோர் அவை; எனவே அவை அறிந்து நாடுக; அறிவு தேடுக.

எந்த அவையாக இருந்தாலும் யாரும் பேசிவிட முடியாது. பஞ்சாயத்துக் கூட்டம் என்றாலும் வரன் முறை உண்டு; பண்ணையார் பேசுகிறார் என்றால் மற்றவர்கள் திண்ணையராக அமர்ந்திருக்க மாட்டார்கள். கேள்விகள் தொடுப்பார்கள். பிறரைப் பேசவிட்டுக் கருத்துக்களைத் திரட்டி எதிர் புதிர்களை எடுத்துக் காட்டித் தீர்ப்புகள் செய்வது தக்கது ஆகும். ஊருக்கு வேண்டிய நன்மைகளை நயமுடன் பேசித் தீர்மானங்கள் முடிக்க வேண்டும். கூட்டத்தில் குழப்பம் விளைவித்துத் தம் பண வலிமை, ஆள் வலிமை காட்ட முனைவாரும் உளர்; அவர்களை அங்குப் பேச இடம் தரக்கூடாது. இவை நடைமுறையில் கொள்ளத் தக்கன.

உள்ளீடு இல்லாதவர்கள்; சுயசிந்தனை இல்லாதவர்கள்; தம் அறிவால் விளக்கம் தர முடியாதவர்கள் தம் ஆசிரியர்களின் பெருமையைப் பேசி அந்த ஒளியில் குளிர் காய்கிறார்கள். இவர்கள் பட்டம் வாங்கியவராக இருக்கலாம்; ஆனால் சுய சிந்தனை, சுய அறிவு எதுவுமே இல்லாதவர்கள். ஒரு சிலர் திருக்குறளை ஒப்புவிப்பார்கள். நூல்பல கற்றவர் என்பது விளங்கலாம். ஆனால் அவர்களை நுண்ணறிவு உடையவர் என்று கூற இயலாது. இவர்கள் கற்றவர்கள் என்று கூறிக்கொள்ளலாம்; அறிவாளிகள் ஆகார்.

சட்டசபைகள் ஜனநாயக அமைப்பால் உருவானவை. மக்களால் மதிக்கத் தக்கவர்கள் இவர்கள் என்று தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள். அவைக்கு ஒரு தலைவர் உண்டு; அமைதி நிலைநாட்டவே அவர் அமர்ந்திருக்கிறார்; என்றாலும் 'அமளிகுமளி' என்று ஒரு சில செய்திகள் வருகின்றன. ''மைக்குகள் கைக்கு வந்தபடி தாக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. சட்டைகளைக் கிழித்துக் கொண்டு எதிர்க்கட்சிக்காரர்களும் புதிர்க் கட்சிக்காரர்களும் வெளியேறினர். காக்கிசட்டை அணிந்த காவல் நிலையத்தார் ''ஹாக்கி விளையாடினர்'' என்று இப்படித் தாக்கிச் செய்திகள் வராமல் இல்லை. அவை நடைமுறை எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு விடை தருவன ஆகும். எப்பொழுதோ சில சமயம் இவ்வாறு நடைபெறுகின்றன என்றாலும் அவை சரித்திரத்தில் இடம் பெற்று விடுகின்றன.

கற்றோர் அவை இதுபோன்ற நிலைக்கு மாறக் கூடாது. கற்றவர் அறிவின் பிரதிநிதிகள்; ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். இதையே 'அவை அறிதல்' என்று உணர்த்தப்படுகிறது.

கல்லாத மூடர் சிலர் அழகுபடப் பேச முடிகிறது என்பதால் அவர்களும் கவி அரங்கு ஏறி விடுகிறார்கள். அந்தக் கவிதைகள் தனி மனிதர் புகழ்ச்சிகளாக அமைகின்றன. அதனால் அவை சிறப்புப் பெறுவது இல்லை. மானுடம் பாடுபவனே மகாகவி; தனிமனிதர் துதிபாடுபவர் பழங்கால அரசு அவைக் கவிஞர்; மக்கள் கவிஞர் அல்லர். புகழ்ச்சிக்கே கவிதை என்ற நிலை மாறிப் புதுமைக்குக் கவிதை என்ற நிலைபெற வேண்டும். உணர்வுக்கு முதன்மை தருவது, உள்ளத்துக்கு உவகை ஊட்டு

வது, பள்ளத்தில் கிடப்பவரைத் துள்ளி எழச் செய்வது. இந்த அடிப்படையில் இவர்கள் எழுத்து எழுச்சி அமைந்தால் பாராட்டப்படுவர். வெறும் சொல்லடுக்குகள் கவிதை ஆகாது; இவர்கள் அவை ஏறுவதால் அறிஞர்கள் அங்கு இடம் பெறுவது இல்லை. கற்றவர்கள், சிந்தனை மிக்கவர்கள்; கற்பனை உள்ளவர்; இவர்களே அவைஏறிக் கவிதை அரங்கேறத் தகுதி படைத்தவர் ஆவர்.

வெறும் சொல்லடுக்குகள் வேசியர்தம் புனைவு ஆகும். கற்ற அறிஞர் சொற்கள் கருத்து ஆழம் மிக்கவை. காசுக்கு என்று கவிதை பாடி ஓசைகளை எழுப்பித் தம்மைக் கவிஞர்கள் என்று பேட்டி அளித்துக் கொண்டு இருக்கின்றனர். இன்று ஓசைதான் கவிதை என்ற மோசமான நிலையை அடைந்துவிட்டது. விளக்கமாகக் கூறட்டுமா! திரைப் பாடல்கள் வெறும் இரைச்சல். கவர்ச்சிக் கன்னிகள் இவர்களை வைத்து ஆடவைத்து ஆபாசத்தை விற்பனை செய்கின்றனர். இப்படி எழுதுகிறது திரைப்பட விமர்சனங்கள். கவிதை ஒன்று இரண்டு சில கருத்துக் கொண்டவை. பல ஆட்டுக்கு ஏற்ற ஓசைத்தாளங்கள்; ஒரே கூளங்கள். இவை பாடல்கள்; மறுக்கவில்லை; கவிதைகள் ஆகா.

விளக்க உரை செய்தால் அதற்கு விருத்தி உரை என்று பெயர். தொல்காப்பியப் பாயிரத்துக்கு என்றே ஒரு விருத்தி உரை உள்ளது. இவ்வளவும் கூறவல்லவன் தமிழ்ப் புலவன். புலமை பெற்று உயர்பவனே அவை அறிந்து பேச வல்லவன் ஆகிறான்.

நூல்பல கற்றவராக இருக்கலாம், நுண்ணறிவு படைத்தவராக இருக்கலாம். அவர்கள் நிறைகுடமாக இருக்க வேண்டும். வாதங்கள், பிரதிவாதங்கள் அவை

யின்கண் நடைபெறலாம். அவற்றிற்கு அஞ்சாமல் தக்க விடை தரும் தகவு அமைய வேண்டும்.

ஆசிரியத் தொழில் செய்வோர் மாணவர் தரமறிந்து நிலை அறிந்து அவர்கள் வினா அறிந்து விடைதரல் வேண்டும். 'சுட்டுப் போட்டாலும் படிப்பு வராது. குட்டிச் சுவராகப்போ' என்று சாபம் கொடுப்பவர் ஆசிரியர் ஆகார்.

கல்வித் தகுதி மட்டும் போதாது; பண்பாடு கூட்டல் தேவை. கல்வி மனப்பழக்கம்; பண்பாடு செயற்பழக்கம் அது சிலசமயம் 'குடி'ப்பழக்கத்தாலும் அமைவது. அதாவது பிறந்த குடியின் பின்னணி, சார்பு, வளர்ப்பு இவையும் கற்றவனை மதிக்கத்தக்கவனாக ஆக்குகிறது. எனவே கல்வியோடு பண்பும் கலந்தால் அவையின்கண் அவனை அவனைவரும் பாராட்டுவர். கல்வி கற்றவர் என்று கருதுவர்.

## 33. அறிவு குறைந்தவர் அவதி

### (புல்லறிவாண்மை)

நூல்பல கற்கிறாய்; நுண்ணறிவு பெறுகிறாய் என்று கூறமுடியாது. நூல் ஒரு பாற்கடல்; அதனைக் கடைந்து எடுக்கும் அமுதம் அறிஞர்களின் அனுபவ மொழிகள். அருள் அறமும் மனித நேயமும், மாண்பும் உடையவர்கள் சிந்தித்துக் கூறும் சிந்தனைகள். அவர்கள் வாயில் வரும் சில சொற்கள் அவை திருக்குறள் போன்றவை. அரிய கருத்துகள்; இவற்றை நல்லறிவுடையவர் கேட்டு அறிந்து

பயன்படுவர். அறிவு குறைந்தவர் அவை செறிவு மிக்கன என்பதால் அவற்றை வாங்கும் ஆற்றல் அற்று அவை தமக்கு ஏலா என்று புறக்கணிப்பர். அமுத மொழிகளை அறிவதை விட்டுக் குமுத ஏடுகளைப் புரட்டிக் கொண்டு, "இப்படத்தில் எத்தனை சன்னல்கள் இருக்கின்றன?" என்ற கேள்விக்கு விடைகண்டு கொண்டு இருப்பர். இன்று வினா விடைகள் நடிகையின் நயனங்களைப் பற்றியும் நடிப்பு நளினங்களைப் பற்றியுமே அமைகின்றன. அறிவு குறைந்த சாமானியர்களைக் கவர அவர்கள் எடுத்தாளும் உத்திகள் இவை. இதில் பங்கு கொள்பவர் நிறை அறிவுடையவர் அல்லர்.

அறிவு குறைந்தவர்களுக்கு ஆழ்ந்த சிந்தனைகளில் பிடிப்பு ஏற்பட வாய்ப்புக் கிடையாது. அறிஞர்களிடம் பழகுவார்கள் ஆனால் அவ்வறிவில் நாட்டம் காட்டமாட்டார்கள். குழம்பைத் துழவும் அகப்பைக்கு "அதன் சுவை எப்படி ?" என்றால், அஃது எத்தனை படி?" என்றுதான் கேட்கும். நல்லது கேட்க நயம் அறியும் நுட்பம் தேவைப் படுகிறது.

அறிவு விவாதங்கள் தொலைக் காட்சியில் வைத்தால் உடனே அவற்றை மாற்றி வைத்து விட்டு அநாகரிக ஆட்டங்களை நாடுவர் பலர்; அவளை அவன் பிடிக்க எடுக்கும் ஓட்டம் அது ருசுவாகிறது. அறிவின் நாட்டம் அவனை இழுக்க மறுக்கிறது. எலும்புத் துண்டைக் கடித்து வாயைப் புண்ணாக்கிக் கொள்ளும் நாய்க்குப் பால் ஊற்றிய சோறு போட்டால் அதில் அக்கிரகாரவாசனை வீசுவதால் அகன்று போய் விடுகிறது. சாக்கடை மொழி பழகிய அதன் செவிகள் வேறுவிதமாகக் குரைக்கப் பழகியது இல்லை,

அறக்கருத்துகள் ஆயிரத்துக்கு மேல் அறிவித்தார் வள்ளுவர். அதற்கு மேலும் நூற்று முப்பது தேவைப் பட்டது. ஏன் இந்தக் கூட்டல்? ஆயிரம் அது அழகான எண்; திருக்குறள் எத்தனை என்று கேட்டால் யாருமே இன்று சரியாகச் சொல்ல முடிவது இல்லை. சிறிது அவர் குறைத்துக்கொண்டு இருக்கலாம் என்பார். ஏன் ஒரு குறளைக் கூடப் படிக்கத் திரு அருளாளர் வரமறுக்கிறார். குறள் வகுப்பு என்றால் ஒதுக்கிவிடுகிறான். நல்லது கேட்பது அதற்கு அவன் அஞ்சவில்லை. கேட்டுவிட்டு அதனால் அறம் வழுவாமல் வாழ வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. குறளைப் படிக்கலாம்; உரை காணலாம். ஆனால் அதன்படி நடக்க இயலாது. அதனால் இஃது அவன் புறக் கணிப்புக்கு உள்ளாகிறது. அறத்தின் திசையையே பார்க்க மறுக்கும் மறக்குடி மாக்கள் இவர்கள். எக்கேடு கெட்டால் என்ன? வாழ்ந்தால் என்ன? செத்தால் என்ன? வாக்குரிமை பெற்றுவிட்டுச் சாவடிக்கு நடக்கத் தயங்கும் சோம்பேரிகள் இவர்களுக்குக் குடி உரிமை வழங்குவது தேவை இல்லை; அதற்கு அவர்கள் அருகதைஅற்றவர்கள்.

தாடி வளர்த்துவிட்டான்; கேட்டால் ''நாடி தளர்ந்து விட்டது'' என்கிறான். வீட்டில் குழந்தைகள் சத்தம்போட் டால் இவன் கத்தி அடக்குகிறான். குப்பை கிழித்துப் போட்டால் சுத்தம் சோறும் போடும் என்கிறான். சிரித் துப் பேசினால் சீரழிந்து போவாய் என்கிறான். புகை யிலை விரித்தால் போச்சு பெண் சிரித்தால் போச்சுஎன்று கட்டுப்படுத்துகிறான். விடுமுறை விட்டால்கூடப் பாடம் படி என்று பையனை வற்புறுத்துகிறான். சிரிக்கவே அந்த வீட்டில் இடம் இல்லை. முகத்தை மூஞ்செலியாக்கி வைத்துக் கொள்கிறான். கேட்டால்,'' வம்பு தும்புக்குப் போகமாட்டேன். நான் உண்டு என் வேலை உண்டு;

பெண்டு உண்டு; பிள்ளை உண்டு அவர்கள் எனக்குக் கற் கண்டு. வேறுஎதையும் நான் கண்டு கொள்வதில்லை" என் கிறான். ஒட்டைக் கார் அதை ஓராயிரம் முறை துடைத் துக் கொண்டு இருக்கிறான். நாலு சுவர் அதன் நடுவில் இவன் நாயகன். தனிமனிதன் சே! கொஞ்சம் சிரிக்க மாட் டான்; விடு அவனை, வேறு பேச்சைத் தொடு.

வாலிபமுறுக்கு; பணச் செறுக்கு; அதிகாரம் எல்லாம் இருக்கு; இப்பொழுதுதான் நீ நினைத்ததை முடிக்க முடியும். ஆனால் நினைப்பது யாது? செய்யத் தக்கது யாது? இன்று பொதுவாழ்வில் எத்தனையோ தேவைகள் இருக்கின்றன. ஆட்சியாளரை நம்பி அங்குமிங்கும் பொருள் திரட்டிச் சில நன்மைகள் கருதித் திரட்டிய நிதி; அஃது அதோகதி; பறிகொடுத்து விட்டான் நடுத்தெருவில் நின்று நலியும் இளைஞர்கள் செல்கதி இன்றித் தவிக்கின்றனர். படித்தவன் அதற்குப் பிறகு முடித்தபிறகு, ''ஏன் படித்தாய் மகனே! இருந்த பணம் இருந்திருந்தால் விருந்துடன் நன்றாகச் சாப்பிட லாமே'' என்று வருந்தும் இளைஞர் ஏராளம்; பெண் ணைப் பெற்று வளர்த்து அவளைக் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதுபோல காசு குறைவாகக் கேட்டவனுக் குக் கட்டிக் கொடுத்துவிட்டு அவள் கட்டுக் கழுத்தியாக வீடுவந்து சேர்க்கிறாள். 'வாழடா வெட்டி' என்று அவள் எட்டி உதைக்கப்படுகிறாள். அவள் வாழ்வு எட்டிக் காய் ஆகிறது. எவ்வளவோ அறங்கள் செய்யலாம். அதற்கு நீ சிந்தை செலுத்து; என்ன செய்வது? பொழுது கழியவில்லை என்று புலம்பிக் கொண்டிருக்கிறாய் வேலையா இல்லை; வேண்டியது இருக்கிறது. விவரம் அறிந்து செய்து முடி; இந்த வயதில் நீ நல்லதை நாடா

விட்டால் முதுமையிலா நாடப் போகிறாய்? எட்டு அடி எடுத்து வைக்க நீ தட்டுத் தடுமாறும் காலம்; நீ கட்டிய வளும் கருதாள்; ஒட்டி உறவாடிய சின்ன வீட்டாளும் சீண்டாள். யாருமே வேண்டார். இளமையில் கல்; வள மையில் அறத்தோடு வாழ்க! உயர்க.

பிடித்து வைத்த பிள்ளையார் என்று அசையாமல் எதற்கும் இசையாமல் இருக்கும் இந்தப் பிள்ளை யார்? கொட்டாப் புளிபோல இருக்கிறான். கொடுக்காப்புள்ளிக் காய் போல் கரிக்கிறான். எப்பொழுதாவது சிரிக்கிறானா என்றால் சிரிப்பது இல்லை. வசதி இருந்தும் வாழ மறுக் கிறான். அவனாக இன்பம் அடையமாட்டான். சரி இல் லாதவன் அவனுக்குக் கூழுக்கு உப்பு இல்லை என்கிறான்; மகளுக்கு மணம் முடிக்க அதுவே அன்றாடம் அவன் வீட்டுப்பட்டிமன்றப் பேச்சாக அமைகிறது. அவசரத்துக்கு ரூபாய் ஐந்து என்று கேட்டால் அதை எடுத்துவிட்டால் திருப்பிப்போடுவது எப்படி? அப்படியே போய்விடும் என்று அஞ்சுகிறான். காசு என்றால் வேசியர்கள் கெட் டார்கள் அலைகிறான்.

நல்ல வழிகளில் அவர்கள் நடத்தை இயங்காது. 'குட்டி' என்கிறான்; 'புட்டி' என்று தேடுகிறான். 'வட்டி' என்று அதில் வாழ்கிறான். கட்டி என்று பொன்னைத் திரட்டிவைக்கிறான். மொத்தத்தில் அவன் ஒரு மகாமட்டி யாகச் செயல்படுகிறான். சும்மா இரு சொல்லற என்றால் 'அம்மா! அது தன்னால் இயலாது' என்கிறான். ஓயாப் பேச்சு; அவன் விடும் மூச்சு ஆசைத் தீயாக இருக்கிறது. வேலை இருக்காது; ஆனால் வீணாகத் திரிவான் பொய் சொல்வது அவனுக்குப் பொழுதுபோக்கு. கேட்டால் நான் கவிஞன் என்கிறான், 'கவிதைக்குப் பொய் அழகு,

என்று புதுக் கவிஞன் ஒருவன் பாடிவிட்டான், அதனை இவன் சான்றாகக் காட்டுகிறான் பொய் சொல்வதற்கு.

காசு மிகுந்து விட்டால் அவனால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள இயலாது. பேரன் பேர்த்தி எடுத்து விட்டான்; பேரமைச்சன் என்ற நிலையையும் எட்டிப் பிடித்தான் என்றாலும் அவன் அடங்கிக் கிடக்கவில்லை. பேரழகியைக் கைப்பிடித்தான். அஃது இந்த நாட்டுப் பெரியவர்கள் விவகாரம். அப்படி வாழ்ந்த முதியவன் ஒருவன் கன்னி ஒருத்தியை கைக்கு அடக்கமாக இருக் கட்டும் என்று கலியாணமும் செய்து கொண்டான்.

அவள் அதிர்ஷ்டக்காரி; மூப்பு வந்து அவனைக் கிடத்தி விடுகிறது. செல்வத்துக்கு எல்லாம் அவள்தான் வாரிசு; அதற்குத் தேவையில்லை யார் சிபாரிசும். வயித்தி யன் சொல்லிவிட்டான். வேண்டியவர்களுக்குச் சொல்லி அனுப்புக என்று. அதற்குப் பொருள் தேவைப்பட்டவர் களை வரச் சொல்லி அனுப்பி வைத்தாள். காணார், கேளார், கால் முடப்பட்டோர் இந்த வரிசைக்காரர்கள் அந்த வீட்டை நோக்கி முற்றுகையிட்டனர். சேர்த்து வைத்த பொன்கட்டி அது வைத்திருந்த பெட்டி 'புதுசு விடம்' தந்திருந்தான். அவன்பால் 'மவுசு' குறைந்தது; "தருமம் செய்தால்தான் அந்தப் புண்ணியம் கூட வரும்" என்று தம்பூராக்காரர்கள் தப்பட்டம் அடித்துப் பேசி யதைக் கேட்டிருந்தான். அந்தப் புண்ணியத்தை ஈட்ட அவன் அந்தப் பொன்னைக் காட்ட அவள் அறிந்து கொண்டாள். "இந்தக் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டேன். இளமையை அவனுக்கு அடகு வைத்தேன். "என்று குமுறு கிறாள்.

அவன் படகு "திசை மாறுகிறது" என்பதை அறி கிறாள். அவன் பரிபாஷை அவளுக்கு மட்டும்தான் புரிந்

தது. மற்றவர்கள் அதை அறிய முடியாமல் ஆர்வம் காட்டுகின்றனர். "ஐயா விளாம் பழமா கேட்கின்றீர்; அஃது உடம்புக்கு ஆகாதே" என்று அன்புடையாளைப் போலப் பேசி அவன் பேச்சை மாற்றுகிறாள். அவர் மறு படியும் கையை உருட்டுகிறார்; அவள் 'கடலை உருண் டையா? அஃது உடலுக்கு ஆகாதே' என்கிறாள். அவர் "எள்ளுருண்டை" என்று எரிச்சலோடு சொல்லி வினவு கிறார். "இது நள்ளிரவு எங்கே போவது?" என்று மழுப்பு கிறாள். இழுப்பு வருகிறது; திரை மூடப்படுகிறது. அவ னால் நினைத்ததை முடிக்கவில்லை. வாலிப வயதில் வாயதா கேட்காமல் எந்த நல்ல காரியத்தையும் செய்து முடிப்பதுதான் அறிவு; அதுவே வாழ்க்கையின் விரிவு.

## 34. "செம்மாக்கும் கீழ்"

### (பேதைமை)

கரை ஏறக் கருதாது கறைபடிந்த வாழ்வில் நிறைவு காண்கிறாய்; 'கதகதப்பும்' 'மிதமிதப்பும்' சூடு பிடிக் கின்றன. இன்ப வாழ்வில் நீந்தி விளையாடுகின்றாய் அலைகள் எழுச்சியும் வீழ்ச்சியும் தருகின்றன. இன்பம் ஒரு மயக்கம்; அவை நிலைக்கும் என்பது அறியாமை; ஆமையை வெந்நீரில் போடுகிறார்கள்; குளிப்பாட்ட அன்று; மகிழ்வூட்ட அன்று. அது செந்நீரில் வெந்து சாக. அந்த நீர் மிதமான சூட்டில் இதமான இன்பம் அனுபவிக் கிறது அந்த ஆமை; வெத வெதப்பு அதற்கு மிதமிதப்புத் தருகிறது. இன்பம் நிலைத்தது என்று இறும்பூது அடை கிறது. அய்யோ பாவம்; சூடு மிகுகிறது; துடிக்கிறது; உயிர் வெடிக்கிறது. தன்னை இழக்கிறது, அழிவு பெற்று விட்டது. இதுபோல உன்நிலைமை ஆகக் கூடாது. பத

மாக இருக்கும் போதே ஒருவிதமாகக் கரை ஏறுக. கறை மாறுக; விடுதலை பெறுக; இன்பக் கேளிக்கைகளில் ஆழ்ந்து அழிந்து போகாதே.

கடமைகள் காத்துக் கிடக்கின்றன. உடமைகளை இப்பொழுது விடமுடியாது. பெரியவனுக்கு மணம் முடித்தேன்; மகளுக்கு மாப்பிள்ளை; பேரனுக்கு புதுப் பள்ளி; வீடுகட்டியாக வேண்டும் எல்லாம் அரை குறை யாக இருக்கிறது. இன்னும் செய்ய வேண்டியவை பாக்கி கள் நிறைய இருக்கு. எப்படி இதனை விட்டுவிடமுடியும்? பந்த பாசங்கள் வாழ்க்கையின் நேசங்கள். அறம். துறவு, கருணை, அருள் இவை எல்லாம் தள்ளிப் போடுகிறான். ''என் தாய்க்கு நான் கொள்ளிப் போடவேண்டி இருக் கிறது'' என்று சாக்குப் போக்குக் கூறுகிறான். இவன் செய்கை எப்படி இருக்கிறது?

கடலிலே ஒருவன் முழுகி நீராடச் சென்றானாம். "அலைகள் ஓயவில்லை; அலைகள் அடங்கட்டும், நீரில் இறங்குகிறேன்" என்றானாம். அலையும் ஓயப் போவது இல்லை. இவன் நீரில் இறங்கப் போவதும் இல்லை. இல்லில் அகப்பட்டுக் குடும்பச் சுமையை விடமுடியாது. கடமைகளும் தீராது. இவன் அறவாழ்வில் அடிஎடுத்து வைக்க முடியாது. இவர்கள் எல்லாம் சமுசார பந்தத்தி னின்று விடுபட முடியாது.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவு இலார்' என்பர் வள்ளுவர். கல்வி நூல் பல கற்றவர், உயர்குடியில் பிறந்தவர் தவஒழுக்கம் கொண்ட வர், அறிவு முதிர்ச்சி உடையவர் இவ்வளவு இருந்தும் நடைமுறை உலகை அறிந்து வாழ வழி அறியமாட்டார்.

வீட்டில் மனைவி மக்களோடு போராட்டம். அவர்களை அடக்கி ஆள நினைத்தான். தன் போக்கின்படித்தான் அவர்கள் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். தொழில் துறையில் எல்லாம் தனக்குத்தான் தெரியும் மற்றவர்கள் கற்றுக் குட்டிகள் என்று கூறி அவர்களை அடக்கி வைக்கிறான். பிறர் உரிமைகளை மதிக்க மறுக்கிறான்; இவன் வாழ்வு தோல்வியுறுகிறது; மனம் உளைகிறான் களைப்புதான் ஏற்படுகிறது.

உலக நடை இது என்று அறிந்து செயல்படுபவர் அறிவு குறைந்தவராயினும் அவர் வெற்றி பெறுவார். அவரால் மற்றவர்களுக்கு இல்லை தொல்லை. விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் தான் எதையும் சாதிக்க முடியும். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதித்தால் அது சாதனை ஆகாது; மற்றவர்களுக்கு அது வேதனையாகும்.

"கல்லாதவரே மிகவும் நல்லவர். ஏன் எனில் அவர்கள் மிகையாகச் சொல்லாதவர்கள்" என்று கூறுவது வழக்கம். இவை எல்லாம் புகழ் மொழிகள் அல்ல; இகழ் மொழிகளே. அதே போல நாலடியார் நாலு வார்த்தைகள் பேசுகின்றன. கல்லாதவரை இவ்வாறு கூறி ஏசுகின்றன. கல் கல்லாதவரைவிட மேலானது. அது இருக்க, கிடக்க, நடக்க, வீடுகட்ட எல்லாவற்றிற்கும் உதவுகிறது. என்று கூறுகிறது. இதற்கு 'மலைப்பிஞ்சு' என்று அழகான சொல்லும் உள்ளது. கூட்டத்தைக் கலைக்க எதிரிகளைத் தாக்க இந்தப் பிஞ்சுகள் பயன் படுகின்றன. கல் சடப்பொருள், திடப்பொருள் என்றும் அறிவு ஜீவியாக இருக்க வேண்டிய மனிதன் கல்லாதவனாகக் கிடந்தால் அவனுக்கும் கல்லுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? அவன்

மானிடனாகப்பிறந்தும் உயர்வு பெறத் தகுதியற்றவனாகி விடுகிறான். அறிவு அற்ற நிலையில் அவன் கல்லைவிடத் தாழ்ந்தவன் ஆகின்றான்.

நாவிற்கு நரம்பு இல்லை என்றால் அது ஒரு வரம்புக்கு உட்படாது. தம்மினும் எளியவர் தம்மிடம் வேலைக்கு அமர்ந்தால் 'இடு எடு' என்று 'கெடு பிடி' காட்டுவது இன்று நடை முறை. ஆகாத பெண்டாட்டி அவள் கால் பட்டால் குற்றம், கைப்பட்டால் குற்றம், என்பது பழ மொழி. தாம் இட்ட பணிகளைச் சற்றுப்பிசகாகச் செய்து விட்டால் அவர்களை நோக்கிக் கெடு பிடி; திட்டு வசவு 'நா காக்க' என்று கூறியது இவர்களையும் நோக்கியே. பணி செய்பவர் அவர்கள் அடிமைகள் அல்லர்; மிடிமைக் காக அவர்கள் பணி செய்கின்றனர். ஆட்களைக் கனிவாக நடத்துவது கண்ணியம் ஆகும்; அது நன்மை தரும்.

சில முரடர்கள்; கல்லாத கசடர்கள்; அவர்கள் தீமை செய்தே பழகி விட்டவர்கள் அவர்களைத் திருத்தலாம் என்று திருக்குறள் கொண்டு செல்கிறாய்; அதை நீ தான் படித்துக் கொண்டிருக்க முடியும். அவனுக்குப் பொருள் விளங்காது. தனி மனிதன் மட்டும் அன்று. இனித் திருக்குறளைப் படித்தால் பயன் இல்லை என்று சமூகம் பேசி வருகிறது. ஆட்சியில் உள்ளவர்கள் இன்று ஊழலில் உழல்கிறார்கள் என்று உலகம் பேசுகிறது. துணிந்து எதிர்க்க முடியுமா ? நீ தோல்வி தான் காண்பாய். சில அநீதிகள் கால் ஊன்றிவிட அவற்றையே மூலதனமாக வைத்து இன்று நிறுவனங்கள் நடைபெறுகின்றன. எதை யுமே மாற்ற முடியாது என்ற நிலைக்கு வந்து ஆகிவிட் டது. கல் பாறையை அகற்ற நீ கை கொடுத்தால் உன்

கைதான் நசுங்கும்; பாறை அசங்காது. அதை அகற்றக் கடப்பாறை தேவைப்படும். அதைவிட இயந்திரத் தூக்கி தேவைப்படும். ஒரு பிரளயம் வந்தால் தவிர இந்தக் குப்பைகளை ஒழிக்க முடியாது அதனைப் புரட்சி என்று பேசுகிறார்கள். அதிலும் இன்று நம்பிக்கை அற்று விட்டது. நக்சலைட்டுகள். பயங்கரவாதிகள் இவர்கள் உருவாகிவிட்டனர். இன்று இவர்கள் புதுப் பிரச்சனைகள் ஆகிவிட்டனர்.

அதோ அது யார் வீடு; 'அமைச்சர் இல்லம்' என்று அழகு தமிழில் அறிவிக்கின்றனர். அங்கே ஒரே கூட்டம் ஏன்? மனு நீதிச் சோழனிடம் சென்று நீதி கேட்க அன்று; அநீதியை விலைக்கு வாங்க; தவறான வழிகளில் சலுகைகளைப் பெற. நியாயத்துக்கே அங்கு விலை பேசப்படுகிறது. அது நிதித்தலம் என்று பேசிக் கொள்கிறார்கள். போன காரியம் வெற்றியா? இல்லை என்று வெறுங்கை காட்டுகிறார்கள். அங்கே நெருங்கிக் குழுமி இருந்தனர். நல்லதும் அங்கே நடைபெறுவதும் இல்லை. கெடுதலும் இல்லை; ஏன் அங்குச் சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள்? அதற்கு விடை நாலடியார் கூறுகிறது, நெய் இருக்கும் பாத்திரம்; மூடி இறுகத்தான் உள்ளது; எதுவும் கிடைக்காது என்றாலும் அதைச் சுற்றி எறும்புகள் ஏறிக் கொண்டும் இறங்கிக் கொண்டும் இருக்கின்றன. இந்த எறும்புகள் நிலைதான் அதிகாரமும் பணமும் உடையவர்கள் இல்லமும் அதைச் சுற்றி வரும் கூட்டமும்.

எல்லாம் இருக்கிறது என்றாலும் எதுவும் இல்லாதவனாக வாழ்கிறான். வசதிகள் எது இல்லை? இன்றைய மின் அணு இயந்திரங்கள் எல்லாம் நிறைந்து விட்டன. அரைக்க, வெளுக்க, துடைக்க, எடுக்க, பிடிக்க இவற்

றிற்கு எந்திரங்கள் அல்லது எடுபிடி ஆட்கள். அவர் மனைவி ஊதிவிட்டாள். எடை கூடிக் கொண்டே இருக்கிறது. அவள் நடை அதன் இயக்கமும் தடை. பிள்ளைகள் செல்வம் கொடுத்துச் செழிப்பில் கெட்டுவிட்டார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். சொன்ன பேச்சுக் கேட்பதில்லை. பணியாட்கள் நாடகக் குழுவில் இருந்து வந்தவர்கள் போல் நடந்து கொள்கிறார்கள். எங்கும் எதிலும் உண்மை இல்லை; அதைவிட அவனிடமே எந்த நன்மையும் இல்லை. நல்லதே செய்து அறியமாட்டான். நாலு பேர் வாழ வழிவகை செய்யமாட்டான். எச்சில் கையாலும் காக்கையை ஓட்டமாட்டான். மிச்சம் மீதி எதுவும் பணியாட்களுக்கும் தரமாட்டான். 'இல்லை' என்ற சொல்தான் அங்கு எதிரொலிக்கிறது. அவன் மனத்திலும் மகிழ்வு இல்லை; அதற்கு யார் பொறுப்பு? அவனே தான். மற்றவர்களை மகிழ்விக்க நினைக்காதவன் அவன் மட்டும் எப்படி மகிழ்வோடு இருக்க முடியும்? அலுப்புத்தான் அவர்கள் நிலுவையாக நிற்கும்.

விரும்பி உன்னிடம் வருகிறார்கள்; உன் சிறப்புகளைப் பேசிப் பாராட்டுகிறார்கள். நீ நடிகனாக இருந்தால் அவர்கள் ரசிகர்கள்; எழுத்தாளனாக இருந்தால் வாசகர்கள்; ஆசிரியனாக இருந்தால் அவர்கள் மாணவர்கள்; தலைவனாக இருந்தால் அவர்கள் தொண்டர்கள். மதிக்க வந்தவர்கள் அவர்களை அவமதித்து அனுப்பி விடுகிறாய்; பிறகு நீ தனிமையில் வாடுகிறாய். காரணம் நீ பிறரை மதிக்காமைதான். நீ உண்மையில் மகாமேதாவி என்று கர்வப்படுகிறாய். தலைக்கனம்; அதனால் உனக்குத் தலைவலி ஏற்படுவது தவிர்க்க முடியாது.

தகுதி என்பது உன் மதிப்பீட்டால் வருவது அன்று; மற்றவர்கள் பாராட்டால் பெறுவது. நீ எந்தத் துறையில் இருந்தாலும் உன்னைப் பாராட்டிப் பேச நண்பர்கள் தேவை; ரசிகர்கள் வேண்டும்; விமரிசகர்களும் தேவை. விமரிசனம் கண்டு எதிர்த்து வீரவசனம் பேசுகிறாய்; அதற்குப் பொது வாழ்வில் கால் வைக்கக் கூடாது.

குறைகளும் நிறைகளும் உரையில் எடுத்துக் காட்டுவர். நடுநிலைமையில் இருந்து அவற்றை ஆய்ந்து உன்னை நீ வளர்த்துக் கொள். கலைத்துறைக்கே இது மிகவும் அடிப்படை.

கவிதை ஒன்று எழுதிவிட்டால் தன்னைக் கண்ணதாசன் என்று கூறித் தலை கனக்கின்றான். கதை ஒன்று எழுதிவிட்டால் காண்டேகர் வாரிசு தான் என்று அளக்கிறான். நாடகம் ஒன்று எழுதி விட்டால் தன்னைப் பம்மல் என்று விம்மிதத்தோடு பறை சாற்றுகிறான். அழகிய உரைநடை எழுதிவிட்டால் தன்னைப் புதுமைப் பித்தன் என்று பிதற்றுகிறான். இப்படி ஒவ்வொரு துறையிலும் தனக்கு விஞ்சியவர் இல்லை என்று தறுக்குபவர் பலர். இவை வீண்செருக்கு; பாராட்டு என்பது பிறரிடமிருந்து பெறுவது. உன்னையே நீ உயர்த்திப் பேசுவது தற்புகழ்ச்சி என்று கூறுவர். இப்படியே உன்னை நீ புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தால் உன்னைப் பாக்கத்து மருத்துவமனைக்குத் தள்ளிச் சென்றுவிடுவர். பத்துப்பேர் வந்து மருத்துவம் பார்த்தாலும் உன் பித்த நிலையை மாற்ற முடியாது. எதுவும் மிகையாகக் கொண்டால் அது பிறர் நகையாக மாறிவிடும்.

உனக்குத் தகுதி இருக்கிறது; மேலும் உழைத்து உயர்வு அடைக. நீயே உன்னைப் பற்றிப் பேசாதே. அஃது உனக்கு கேடாக முடியும்; போட்டிகள் பெருகும். உன்னை வீழ்த்த மற்றவர்கள் முயல்வர். அடக்கம் அழகு தரும்.

## 35. தாழ்ச்சி நீக்குக

### (கீழ்மை)

தட்டு ஒன்று தேடி அரிசியும் பொட்டும் வைத்து ஊட்டினாலும் கோழி குப்பையைத் தேடிச் சீச்சி அதைக் கிளறிப் புழுவும் பூச்சியும் தின்பதிலேயே நாட்டம் செலுத்தும், நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது வாலைக் குழைத்துக் கொண்டு புழைக்கடைக்குத் தான் போகும். பிச்சைக்காரி அவளை வீட்டுக்கு அழைத்துத் தட்டு நிறைய சோறு போட்டாலும் அவள் மாடத்தில் அங்கங்கே ஓர் உருண்டை வைத்துவிட்டு ''அம்மா தாயே'' என்று கேட்டு மறுபடியும் ஒன்று சேர்த்துத்தான் சாப்பிடுவாள். இப்படி ஒரு பழைய கதை. எவ்வளவு நல்ல நூல்களைத் தந்து 'படி' என்று கொடுத்தாலும் கீழ்மக்கள் அவற்றைப் புரட்டிப் பார்க்க மாட்டார்கள். குப்பைக் கூளங்களையே அற்ப காசுக்கு வாங்கி மனத்தை அழுக்காக்கிக் கொள்ளுவர்; மாதம் ஒரு நாவல் இவற்றையே விரும்புவர். கொலை, கொள்ளை விறுவிறுப்பாகப் படித்துச் சுறுசுறுப்பாகப் படிப்பதில் ஆர்வம் காட்டுவர். 'ஆபாசம்' அவர்களை இழுத்துப்பிடிக்கிறது. இஃது இன்று இளைஞர் மனம் கெடுவதற்குத் துணை செய்கின்றது. மட்டமான உணர்வுகளைத் தூண்டும் காதற் கதைகளைப்

படித்துக் காம உணர்வுக்குத் தீனி போடுவர். இன்று சிந்தனையைத் தூண்டும் எழுத்துத் தேவைப்படுகிறது; அந்தப் பக்கம் இவர்கள் திரும்புவது இல்லை.

அருமையான நூல்; அதை விவரித்து அதில் உள்ள விழுமிய கருத்துகளை எடுத்து உரைக்கக் கற்றவர் அழைத்தால் மற்று அதனைச் செவி மடுக்க அஞ்சுகிறான். கருத்துள்ள செய்திகளை எடுத்துச் சொன்னால், "அவை தேவை இல்லை" என்கிறான் "தூக்கம் வருகிறது என்னை விட்டு விடுங்கள்" என்று கூறித் தப்பித்துக் கொள்கிறான். அதிகமாகப் பேசினால் அவன் வம்புக்குஇழுத்து வாதங்கள் புரிகிறான்; "மேலோர் கூறிய கருத்துக்கள் எல்லாம் தீயவை" என்று கூறுகிறான். "மக்களை அடிமைப் படுத்த மடையர்கள் எழுதியவை" என்றுவாதாடுகிறான். "வேலை வெட்டி இல்லாத புலவர்கள் எழுத்தாணி கொண்டு எழுதியவை எல்லாம் இன்று நூல்கள் என்று படிக்கிறார்கள். இவர்கள் எழுத்து மகிழ்ச்சியை மட்டுப் படுத்துவன; இன்பமாக வாழவழி கூறாதவை" என்று வாதிடுகிறான். "காம சாத்திரம் தந்தால் அதைத் தான் படிக்கத் தயார்" என்று கூறுகிறான். தனக்கு அத்தகைய நூல்களே பிடிக்கும் என்று கூறுகிறான். வாயைத் திறந்தாலே உப்பங்கழி நாற்றம் வீசுகிறது. என்ன செய்வது?

சில சமயம் எதிர்பாராத வகையில் எங்கிருந்தோ செல்வம் வந்து குவிந்து விடுகிறது. அதனால் வாழ்க்கைத் தரம் மாறி விடுகிறது. நேற்றுவரை கலகலப்பாகப் பழகியவன் இன்று சலசலப்புக் காட்டுகிறான். பேசுவதற்கு நேரம் இல்லை 'பிசி' என்று சொல்லிவிட்டுப்போகிறான்

மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள், ''புதுப்பணக்காரன் அப்படித்தான் இருப்பான்'' என்று விமரிசிப்பதைப் பார்க்கிறோம். பணக்காரர்களில் இருவகை உண்டு என்று தெரிகிறது. பழையவர் பண்புடையவராக இருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எல்லாம் வெறும் தோற்றம் தான். பணத்துக்கும் குணத்துக்கும் தொடர்பே இருப்பது இல்லை. பண்பட்டவர் செல்வம் பெற்றாலும் தம் இயல்பில் மாறுவது இல்லை; பழகியவரிடம் அன்பும் நண்பும் பாராட்டுவர்; பண்படாத கீழ்மையோர் ஒசி டீக்குச் சுற்றிய நாளில் காசில்லாமல் இருந்தபோது எப்படிப்பிறர் கையேந்தி வாழ்ந்தார்களோ அப்படித்தான் செல்வம் வந்தபோது பிறரைச் சுரண்டியே வாழ்கின்றனர். அவர்களிடமிருந்து எந்த நன்மையும் வெளிப்படுவது இல்லை.

பொன் தட்டிலே சோறு போட்டு ஊட்டினாலும் சொறிநாய் அஃது ஊர் சுற்றி எச்சில் இலைக்குத் தாவிச் செல்லும். எங்காவது விருந்து உண்டு அவர்கள் போடுகின்ற எச்சில் இலைக்குப்பை அங்கே மிச்சிலை நோக்கி வெறிபிடித்துச் செல்லும். அதுபோல ஒரு சிலருக்கு நல் வாழ்வு அமைத்துக் கொடுத்தாலும் அவர்கள் அந்தப் பழைய கும்பலை விட்டு வரமாட்டார். சூதாடும் களம், மாது ஆடும் களம் இப்படிக் களம் காணும் வீரராகவே செயல் படுவர்; உளங்காணும் முறையில் உவகை பெறவே விழைவர்.

அடுக்கிய கோடி தன்னை வந்து மிடுக்கினாலும் தகைமை சான்றவர் அதனை வெளிக்குக் காட்டார். அவர்கள் தம் செல்வச் செருக்கால் தலைக்கிறுக்கு அடைவதில்லை.

ஒன்று மில்லாதவன் முன்னையை விடக் கொஞ்சம் கூடுதலாகச் சம்பாதித்து விட்டால் அவனுக்குத் தலை கால் தெரிவது இல்லை. வீட்டில் மனைவியை அதிகாரம் செய் வான்; வெளியே அளவுக்கு மீறிய ஆடம்பரம் தலை காட்டும்; அவனைப் பிடிக்கவே முடியாது.

ஒருவன் காலுக்குச் செருப்பு வாங்கச் சென்றான்; அவன் நடக்காத கடை இல்லை, பார்க்காத செருப்பு இல்லை; ஒன்று கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. எவ் வளவு விலை உயர்ந்த செருப்பாக இருந்தாலும் என்ன ? அதைக் காலில் தான் போட்டுக் கொள்ளப்போகிறான். கண்ட இடத்தில் நடக்கப் போகிறான். தேவைக்கு மேல் ஆடம்பரம் விரும்புவர் பலர் உள்ளனர். இன்று அது நாகரிகம் ஆகிவிட்டது. பணம் கொஞ்சம் வந்துவிட்டால் இப்படி வீண் ஆடம்பரத்துக்குச் செலவு செய்கின்றனர். இவர்கள் மேன்மை என்று இவற்றைக் கருதுகின்றனர்; இது தாழ்மை என்றே கருதப்படும்.

ஒரு சிலர் 'சிடு சிடு' என்று சிற்றம் காட்டுவர்; அவர் களுக்கு அமைதியாக நடந்து கொள்ளவே தெரியாது. எரிச்சல் எதிலும் உளைச்சல்; அதுமட்டும் அன்று; கருணை காட்டமாட்டார்கள். பிறர் துன்பப் பட்டால் அதைக் கண்டு மகிழ்வர். எடுத்ததற்கு எல்லாம் சினம் கொள்வர்! இவர்கள் கீழ்மைக் குணம் படைத்தவர் ஆவர்.

பழமை பாராட்டும் பண்பு சான்றோர் பால் காணப் படும். சிறு வயதிலிருந்து தெரியும், நல்ல பழக்கம்; அத னால் சில நன்மைகள் தேடி இவரிடம் வந்தால் தம்மா லான உதவிகளைச் செய்வர். இவர்கள் சால்பு உடை

யவர்; கீழ் மக்கள் எரிந்து விழுவர்! உன்னை யார் இங்கு வரச் சொன்னது?'' என்று கேட்பர். பழமையைக் கிளறுவதை அவர்கள் உளறுவதை இவர்களால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. மேன்மக்கள் பழமை பாராட்டுவர். கீழ் மக்கள் அதனை மறப்பர்; நண்பரைத் துறப்பர்.

புல்லைக் கொண்டு வந்து போட்டுக் கொழுக்க வளர்த்தாலும் எருது எருதுதான். அதனைத் தேரில் பூட்ட இயலாது. ஏர் உழத்தான் பயன்படும். கீழ் மகனை எவ்வளவு தூரம் மேலுக்குக்கொண்டு வந்தாலும் அவன் அந்த இடத்துக்குப் பயன்பட மாட்டான். உயர்வுகளுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளமாட்டான். யார்யாரை எங்கு வைக்கவேண்டுமோ அங்கு வைத்தால்தான் அவர்கள் செயல் படுவர்.

## 36. கசடு அற வாழ்க

### (கயமை)

கசப்பான செயல்களைச் செய்பவர் கயவர் எனப் படுவர். யார் யார் எத்தகைய கசப்புகளைச் செய்கின்றனர்? நாலடியார் கூறுவன இவை: மகன் இளையன்; என்றாலும் இன்பத்துக்கு வளையான்; கட்டியவளோடு ஒட்டி உறவாடுகிறான். வாழ்க்கை அன்பில் சுழல்கிறது; அமைதி தவழ்கிறது, பிரச்சனையே இல்லை. தந்தை முதியர்; என்றாலும் புது தாரம் வேண்டும் என்கிறார் மனைவி புனிதவதியாகி விட்டாள். இவர் இச்சைக்கு அவள் பச்சைக்கொடி காட்ட மறுக்கிறாள். பணத்திமிர்

'துரு துரு' என்று அவரைத் தவறான செயலுக்குத் தூண்டு கிறது. இது கேட்பதற்குக் கசப்பாகத்தான் இருக்கிறது. அதனால் இது கயமை எனப்படும்.

தவளை நீரிலேயே கிடக்கிறது; என்றாலும் அதன் சொரித் தன்மை நீங்குவது இல்லை. அழுக்கு அகல்வது இல்லை. நூல் பல கற்றவராயினும் பால் விருப்பு அவர் களை விடுவது இல்லை. பெண்பால் அவர் கண் பார்வை சென்று அவளை வம்புக்கு இழுக்க அது விசாரணைக்குரிய செய்தியாக மாறுகிறது. இதுவும் கசப்பான செய்திதான் ஆகவே இது கயமை ஆகும்.

கொடிறு உடைக்கும் கூன் கையர்க்கு அல்லால் படிறு உடையவர் படிய மாட்டார். ஈர்ங்கை விதிரார். "அடித்தால் தான் அம்மியும் நகரும்," "அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவார்" என்பவை பழமொழிகள் பச்சை மரமானாலும் உளி கொண்டு செதுக்கினால் தான் அது நெகிழ்வு தரும். வன்மை உடையவர் அன்புக்கு பணி யார் ; அச்சுறுத்தலுக்கே பணிவார். இஃது அவர்கள் கீழ் மையாகும். கசப்பான செய்தி; அதனால் இது கயமை யாகும்.

மலைநலம் நினைப்பான் குறவன்; நிலம் நலம் நினைப்பான் உழவன்; செய்த நல்வினை நினைத்து நன்றி பாராட்டுவர் சான்றோர். கீழ்மகன் குறைகளையே பேசி இழிவுபடுத்துவான். அவனுக்கு நல்லதே தெரியாது. இதுவும் கசப்பான செயல்; கயமையாகும்.

''புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்வதைவிட உயிர் விடுவது அறம் கூறும் ஆக்கம்'' என்பர் வள்ளுவர். நேரே பார்க்கும்போது ''இந்திரன்'' என்றும் ''சந்திரன்'' என்றும் பேசிவிட்டுச் சற்று மறைந்ததும் அவர்களை இழித்தும் பழித்தும் கூறுபவர் உளர். அதைவிட நேரே; 'டேய்! நீ அயோக்கியன், கீழ்மகன்' என்று கூறிவிடலாம். நீ ஒரு கோழை; அது மட்டும் அன்று அறிவிலி; வீண் பெருமை; மற்றவர்களைக் குறைவாகப் பேசுவதால் நீ மிக உயர்ந்தவன் என்பது உன் கணிப்பு; உன் சொல் கசப்பு அதனால் நீ கயவன் ஆகிறாய்.

கவர்ச்சியாக உடை உடுத்தி அதை வைத்துத் தொழில் நடத்துவது பெண்மைக்கு இழுக்கு. மகளிர் அழகாக இருப்பது பிறரைக் கவர அன்று. பிறர் நேசிக்க; அழகு மகிழ்ச்சியை ஊட்டலாம். அஃது என்றும் இன்பம் தருவது; கவர்ச்சி விபச்சார நோக்கு உடையது. பிறரைக் கெடுக்க முயல்வது; அதனால் அது கசப்பானது; கயமையும் ஆகும்.

''நூறு பிழை செய்தாலும் மன்னிக்க'' என்று கேட்டுக் கொண்டாள் சிசுபாலனின்தாய்; அதுவரை கண்ணன் பொறுத்தான். அதற்குமேல் சென்றபோதுதான் ஒறுத்தான். பிழைகள் நூறு செய்தாலும் சான்றோர் பொறுப்பர். ஒரு நன்மை செய்திருந்தால் அதைப் பாராட்டித் தீமைகளை மன்னிப்பர். கீழோர் எழுநூறு நன்மைகள் செய்து ஒரு சில தவறுகள் செய்துவிட்டால் அவற்றையே எடுத்துப் பேசுவர். இது கீழ்மையாகும்; கசப்பான செய்தி; எனவே கயமையாகும்.

காட்டு யானை அதன் தந்தம் அழகு உடையது; கூர்மைமிக்கது; வலிவுடையது வீட்டுப் பன்றி அதனை ஏன் காட்டு யானைபோல ஆக்கக் கூடாது என்று ஒரு அறிவாளி நினைத்தானாம். அவன் என்ன செய்தான்? வைரக் கற்களைப் பதித்து ஒரு பூண் செய்து அதற்கு மாட்டினான். அப்பொழுதும் அது யானைபோல் ஆக முடியவில்லை. அதன் கம்பீரம் இதற்கு எப்படி வரும்? இது சகதியைத் தேடிக்கீழ்மையில் வாழ்கிறது; மட்டமான மனிதர்களை எவ்வளவு கூர்மைப்படுத்தினாலும் அவர்கள் தம் திட்டங்களில் இருந்து மாறுவது இல்லை. தம் இட்டமான செயல்களையே செய்து சீர் அழிவர்; பேர் கெடுவர். ஊரார் இகழ்வர். இவர்கள் வாழ்வு கசப்புமிக்கது, கயமை உடையது ஆகிறது.

தாமரை இலை நீருக்குள்ளும் அமிழாது, தன் எல்லைக்கு மேலும் நீளாது. 'நீரளவே ஆகுமாம் நீராம்பல்' என்பது பழைய பாட்டு இந்தத் தாமரை ஒரு நிலையில் நிற்காது. தளர்ந்து கொண்டே இருக்கும். தண்டு ஊன்றி நிலைபெறலும் செய்யாது. அப்படியே அழிந்துபோக வேண்டியதுதான். ஒரு சிலர் இப்படிப் பகற்கனவு கண்டு கொண்டே வாழ்க்கையை நடத்துவர். ''இப்படிச் செய்தால் லட்சங்கள் வரும்; அப்படிச் செய்தால் லட்சியங்கள் நிறைவேறும்'' என்பர். இருந்த இடத்தில் இருந்து கொண்டே கோட்டை கட்டுவர். ஒரு சிறு துரும்புகூட எடுத்துப் போடமாட்டார்கள். இதைப் போலவே காலமெல்லாம் பேசிக்கொண்டு எந்த அளவும் உயரமாட்டார். உள்ள நிலையிலேயே இருந்து தேய்ந்து விடுவர். கசப்புமிக்க வாழ்வு; பிறரை ஏமாற்றிக் கொண்டே காலம் ஓட்டுவர். லட்சங்கள் வரும் என்று சொல்லிக்கொண்டே தாம் பிறர் மதிக்க வாழ்வர். இவர்களும் கயவர்களே.

நெட்டி இருக்கிறதே அது கெட்டியான பொருள் அன்று. 'தக்கை' என்றும் கூறுவர். அது நீரில் வளர்வது தான்; மேற்பகுதி கூடப் பசுமை பெற்று இருக்கும். அடிப் பகுதி பசையற்று வறட்சியாக இருக்கும். அதுபோலப் பலர் ஈவு இரக்கம் காட்டாமல் கல்நெஞ்சு உடையவராக வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். வசதிகளுக்குக் குறைவு இல்லை. நினைத்தால் மற்றவர்களுக்கு உதவலாம். ஆனால் உதவமாட்டார்கள். கேட்டால் அவர்கள் தங்களுக்கு உள்ள கஷ்டங்களை விவரித்துக் கூறுவர். ஊதாரித்தன மான செலவுகள் செய்வர். தன் சொந்த நலனுக்கு எது வேண்டுமானாலும் செய்துகொள்வர். மனைவியையும், வீட்டையும் அலங்கரிப்பர். மற்றவை அவர்களுக்குப் பொருட்டு அல்ல. கடின சிந்தையர்; கயவர் இவர்.

## 37. கதம்பப் பூக்கள்

### (பன்னெறி)

அழகான வீடு; தோட்டம்; எடுபிடி ஆட்கள் எல்லாம் இருக்கின்றன. என்றாலும் அது ஏன் அந்த வீடு சோகக் காட்சி அளிக்கிறது? இஃது என்ன சுடுகாடா? மனித வாசனையே இல்லை, இந்த வீட்டு மகாலட்சுமி எங்கே? எல்லாம் இருக்கிறது; வீட்டைப் பராமரிக்க ஒரு கிருக லட்சுமி இல்லை; மனைவி இல்லாத வீடு அது அரண் மனையாக இருந்தாலும் அது வெறிச்சிடத்தான் செய்யும். நண்பர்கள் மட்டும் இருந்தால் அது சகவாசம். மனைவி இருந்தால்தான் அது சுகவாசம்,

"மகளிர் தம் நிறையைக் காத்துக் கொள்ளவில்லை என்றால் சிறைகாக்கும் காப்பு என்ன செய்யும்?" என்றார் வள்ளுவர். அது முற்றிலும் உண்மை. காவல் எவ்வளவு வைத்தாலும் ஒருத்தியின் ஆவலைக் கட்டுப்படுத்த இயலாது. அவள் நினைத்தால் எவ்வளவு காவல் இருந்தாலும் அதை மீறித் தன் விருப்பை நிறைவேற்றிக் கொள்வாள். தவறியவள் திருந்துவது கடினம். அவரவர் மனக் காப்பே தக்க காப்பு ஆகும்.

மனைவி நல்லவளாக வாய்ப்பது அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்; "சற்று ஏறுமாறாக நடந்து கொண்டாள் கூறாமல் சந்நியாசம் கொள்" என்றார் அவ்வையார். ஏன்? யாவரைப்பார்த்து இவ்வாறு கூறினார். 'எறி' என்று கூறி எதிர் நிற்பாள். கணவனை எதிர்த்து அவன் சீற்றத்தைத் தூண்டுபவள்; இவளை 'எமன்' என்று தான் கூறவேண்டும். வேளைக்குச் சோறு சமைக்க மாட்டாள். கேட்டால், "நான் ஏன் சமைக்க வேண்டும்? பெண் என்றால் அடுப்பு ஊதவா? என்று கேள்விகள் தொடுப்பாள்" இவள் இரண்டாவது ரகம்; இவளை என்ன என்று கூற முடியாது! 'தீராத நோய்' என்றுதான் இயம்ப வேண்டும். சமைத்து வைப்பாள்; இலை போட்டுச் சோறு போடமாட்டாள். கேட்டால் "அதுகூட நீ போட்டுக் கொள்ளக்கூடாதா?" என்று அடம் பிடிப்பாள். இவளைப் 'பேய்" என்றுதான் கூறமுடியும். இந்த மூவரும் கொண்டவனைக் கொல்லும் படையாவர்.

ஒருத்தியை மணந்தான்; அவள் அழகி என்பதால்; அவளை அணைந்தான்; அவள் இவனைவிட அழகனைத் தேர்ந்து ஓடிப்போய்விட்டாள். மற்றொருத்தியை உடனே மணந்தான்; அவள் நோயாளி; இவனுக்குச் செலவுவைத்து விட்டுச் சென்று மறைந்தாள். நாள் சில கூட ஆகவில்லை.

'மணமேடை' என்ற விளம்பரத்தைப் புரட்டிக் கொண்டு இருக்கிறான். இவனைப் போல அறிவிலி யாரும் இருக்க மாட்டார்கள். இனிப் பணக்காரி என்று தேடுவான்; அவளுக்கு இவன் 'எடுபிடி' ஆவான். கடைசிவரை இப்படிப் பட்டவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். பெண்டாட்டி இல்லாமல் இவர்கள் வாழமாட்டார்கள். கேட்டால் ''ஒண்டிக் கட்டையாக எப்படி வாழ்வது?'' என்பார்கள்; படட்டும் துயரம்; இவர்களைத் திருத்தவே முடியாது. தவம் செய்து அறிவு தேடித் தனித்து இருந்து அமைதியாக வாழ்வது மிக உயர்ந்த வாழ்க்கை. இது தலையாய வாழ்வு. அடுத்தது மனைவி; பின் மக்கள் இந்த வட்டத்துள் அகப்பட்டு உழல்வது. இரண்டாம் தரமான வாழ்க்கை; இதற்கு இல்லறம் என்று பெயர் கொடுத்துச் சிறப்பிக்கின்றனர். மூன்றாவது உழைப்பு இன்றித் தன் மானம் விட்டு யார் பின்னாலாவது சென்று அடிபணிந்து அடிமையாக வாழ்தல்; இது கடைநிலை வாழ்க்கை.

சாதிகள் இல்லை என்பார்; ஆனால் வீட்டில் இருப்பவள் அவளைத் தன் 'பெண்சாதி' என்று பேசுவர். காய்களில் ஒன்றனைச் 'சாதிக்காய்' என்பர். நாமும் இந்தச் சாதிப் பிரிவினையை ஏன் விடவேண்டும்? இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தவர் என்று தமக்குப்பட்டதை முன்னோர்கள் கூறி இருக்கிறார்கள். அவர்கள் மதம் அது; எமக்கும் அது சம்மதம்; புதுவகை சாதி இந்த நாலடிகாட்டத் தொடங்குகிறது. இஃது உண்மைதானா? இந்தப் பகுப்புப்படி முற்பட்டவர்: இடைப்பட்டவர்; பிற்பட்டவர் என்று இப்படிப் பலவகைப்பட்டவரைத் தம் அறிவுக்கு எட்டியவரைப் பிரித்துக் காட்டுகிறது.

அறிவுப் பசியால் நூல்களை நுணுகி ஆராய்வர்; 'ஏட்டை' வைத்துக் கோட்டை வகுப்பர். இவர்கள்

நூலோர்; அடுத்த சாதி இடைப்பட்ட சாதி; இவர்கள் நடுநிலைவகிப்பவர்; மத்திய தர வகுப்பினர் என்பர். படிப்பு தொழிலுக்கு என்று முடித்துக் கொள்வர். அதற்கு மேல் பத்திரிகைகூடப் புரட்டிப் பார்க்க மாட்டான்; கேட்டால் அந்தப் பழக்கம் இல்லை என்பான். வீட்டில் எல். கே. ஜி. படிப்பவனுக்கு ஏ.பி.சி.டி. கற்றுத் தருவான்; மனைவியின் ஆணை ஏற்றுக் கறிகாய் வாங்கி வந்து நறுக்கிக் கொடுப்பான். இவன் குடுமி களைந்தவிட்ட குடும்பியாய் வாழ்வான்.

மூன்றாவது இன்று உரிமைக்குக் குரல் கொடுக்கும் கடைநிலை வகுப்பாளன் அவன் சோற்றுக்கே தாளம் போடுவான்; அதுவே சுவர்க்கம்; அதற்காகக் காசு ஈட்டக் காலம் எல்லாம் உழைப்பான். உழைப்புத் தெரியும்; வேறு எந்தப் பிழைப்புக்கும் போகமாட்டான். அடி மட்டத்து முழு முட்டாளாக வாழ்வான். இது மூன்றாம் நிலை. இது நாலடியார் வகுப்பு.

நூலைப் போலச்சேலை; தாயைப்போல மகள் என்று உவமை கூறுவர். 'வாலைப் போலத் தலை; தலையைப் போல வால் என்று யாரும் கூறவில்லை. தலை உருட்டு; வால் நீட்டு.

விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று காய்க்காது. இதுவும் இதற்கு நிகரான ஓர் உவமை. மற்றொன்றையும் சொல்லி முடிக்கிறோம். நெல் விதை போட்டால் அதே ரகம்தான். நெல்லூர் அரிசி என்றால் அது வேலூரில் விளையாது. அதுபோல் 'தந்தை அறிவு மகன் அறிவு' என்று நாலடியார் கூறுகிறது. எனவே மகன் அறிவாளி

யாக இருக்க அவன் தந்தையும் ஒரு காரணம் என்பது தெரிகிறது. இது வருணாசிரம தருமத்தின் ஒரு பக்கம். தந்தை சிற்பியாக இருந்தால் மகன் கையில் சிற்றுளி பிடிப்பான்; வித்தியாசம் காலம். சில சில வேறுபாடுகள் இருக்கலாம். அடிப்படையில் அப்பனைத் தோல் உரித்துப் போட்டது போல அவன் மகன் இருக்கிறான் என்று பேசக் கேட்கிறோம், இஃது எப்படி? சிந்தித்துப் பார்க்கவும்.

யார் எப்படி என்று கேட்டால் உருப்படியான பதில் கூறமுடியாது. இன்று வாழ்கின்றவர் நாளை தாழ்வார், சொல்ல முடியாது. இன்று கோடிக்கு உரியவர் நாளை அவர் ஊர் தெருக்கோடிக்குப் போவதும் சகஜம்தான். 'அறிவு மேதை' என்றாலும் ஏதாவது அவசரப்பட்டுச் சில உண்மைகளைத் தெரிவிக்கிறான். உலகம் தாங்காது; அவன் தலைக்கு விலை பேசுவது இன்றைய அறியாமை. யார் எப்படி ஆவார்கள் என்று கூறமுடியாது. குபேரன் குசேலனாக மாறலாம்; குசேலன் குபேரனாக மாறலாம் என்று கூறுகிறார்கள். எதுவும் தலைகீழாக மாற வாய்ப்பு உள்ளது. இதை வைத்துத்தான் இன்றைக்கு இருப்பார் நாளைக்கு இல்லை' என்று பட்டினத்து அடிகள் 'யாரோ நினைவில் இல்லை; கூறி இருக்கிறார்கள். எல்லாம் தலைகீழாக மாற வாய்ப்பு உள்ளது. நிலவரம் அப்படி பங்குச் சந்தை விவரம் இப்படி.

அவன் செஞ்சிக் கோட்டை வாலிபன். இவன் வஞ்சிக் கோட்டை இளையன். இருவரும் ஒரு சாலை மாணக்கர். ஒரே தட்டில் சோறு; கட்டில் மட்டும் வேறுபட்டன. காரணம் சொல்லத் தேவை இல்லை. காலம் அவர்களைப் பிரிக்கிறது; பிரிந்துவிட்டார்கள். ஒருவன் கோட்டையில் அமைச்சர் பதவி; மற்றவன் எல்லாம் நஷ்டப்பட்டு

ஒன்றும் இல்லாமல் படம் எடுத்து போண்டி ஆனவன்; ஆண்டியாகிவிட்டான். அமைச்சன் இவனுக்கு நண்பன். அமைச்சனைப் பார்த்து உதவி கேட்கச் செல்கிறான். பி.ஏ.; பட்டதாரி அல்ல; P.A. என்பதைத் தமிழில் இப்படித் தான் சொல்கிறார்கள். "ஐயாவைப் பார்க்க இயலாது. அதற்கு முன் அனுமதி தேவை" என்கிறான். இவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "நண்பன் நடராசன் என்று போய்ச் சொல்" என்று அனுப்புகிறான். "பார்க்க முடியாது" என்று பதில் சொல்கிறான். அன்று ஓசியில் சிகரெட்டுப் பிடித்த இந்தக் காசி விசுவநாதன் இன்று அமைச்சன்; இவன் மனம் நொந்து வீடு திரும்புகிறான். மனைவி கேட்கிறாள் "வெட்கமில்லையா? நண்பன் என்று அலட்டிக் கொண்டாயே" என்று அவள் நையாண்டி செய்கிறாள். அந்த அமைச்சு நடந்து கொண்டது சரி யாகப் படவில்லை. இவர்களை மாற்றவே முடியாது. பதவியில் உயர்ந்தவர் உதவி செய்யாமல் இருப்பது அவர் களுக்குச் சிறுமை; சீர்கேடு என்று நாலடி நவில்கிறது.

பூச்சூடி வந்த பூவை; அவள் ஊர் புதுவை; அவள் செய்து கொண்டாள் சிலரை வதுவை; அவள் இப்பொழுது விதவை. அவள் திறந்து வைக்கிறாள் கதவை. இன்று அவள் யாருக்கும் உரிமை இல்லை. அவளுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. அவள் அழகில் மயங்குகிறான்; உள்ளதை இழக்கிறான்; பொருள் வற்றிவிட்டது; அவன் சுற்றம் அற்றுவிடுகிறது. அவள் புது வெள்ளம்; அப்படித் தான் இருக்கும். அது விரைவில் வற்றிவிடும். பொது மகளிர் உறவும் புது வெள்ளத்தின் வரவும் ஏறக்குறைய ஒன்றுதான். அவை நீடித்து நிற்பவை அல்ல; எனவே பூவையரைக் கண்டு மயங்காதே; புதுமை கண்டு மருளாதே.

## 38 விலைக்கு எளியர்

### (பொது மகளிர்)

விளக்கு எரிய நெய் தேவை; அணையாமல் இருக்க அவ்வப்பொழுது அது வார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். விலைக்கு உரிய மகளிர் அவர் உறவுக்கு அவ்வப் பொழுது பணம் தேவை. காசு அது இல்லை என்றால் அவள் கால் தூசுக்கும் மதிக்கமாட்டாள். அவள் வேசி; அதைப் பற்றிப் பேசிப் பின் ஏசி எதுவும் பயன் இல்லை. அவள் நேசம்; அது காசு.

காசு இருந்தது; அவள் உறவு மாசு அற்று விளங்கியது. உயிரினும் இனியள் தான் என்றாள். ''மலை உச்சியா கவலை இல்லை அதையும் நச்சி ஏறி வருவேன்'' என்றாள். ''செங்கோடு எனினும் அதனோடு உயர்வேன்'' என்றாள். காசு அழிந்தது; தொட்டுப் பார்த்தாள்; அது ஒலிக்க வில்லை. ''மலை உச்சி'' என்கிறான். ''அய்யோ என் கால் ''வலிக்கும்'' என்கிறாள். ''நடக்க இயலவில்லை; முடக்கு வலி'' என்கிறாள். அடக்கமான பதில். ''அடிப்பாவி நீ உருப்படவே மாட்டாய்.''

''அங்கண் விசும்பில் தேவர்கள் தொழும் செங்கண் மால்'' என்று வந்து செப்புகின்றனர். அவள் ஒப்புக் கொள்ளவில்லை. ''யாராயிருந்தாலும் இங்கே நுழைவுச் சீட்டு நோட்டுக் கட்டு; அதைக் கேட்டுப் பின் அவருக்கு வந்த வழிகாட்டு'' என்கிறாள்.

கட்டிப் பொன் இல்லை என்றால் அவளைக் கட்டித் தழுவ அவள் இடம் தரமாட்டாள்; பட்டு உடை உடுத்திப் பகட்டாக வாழ்ந்தவன். அவன் இன்று தாழ்ந்து விட்டான்

என்றாலும் அவனுக்கு அங்கு இடமில்லை. அழகன்தான் என்றாலும் அவள் சிறிதும் இளகாள். செக்கிழுத்த சிதம்பரம் என்றாலும் அவன் 'செக்'குக்கு வங்கியில் பணம் இருக்கிறது என்றால் அவன் மக்காக இருந்தாலும் அந்தச் 'சக்கு' என்ற அந்தப் பெண் பக்குவமாய் அவனிடம் பழகிப் பணம் பறிப்பாள். அது அவள் குணம்.

பாம்புக்குத் தலை காட்டும்; மீனுக்கு வால்காட்டும். அது விலாங்கு மீன்; வந்தவரை நாளைக்கு என்று நாள் சொல்லி அனுப்பமாட்டாள். முடிவெட்ட அழைத்து உட்கார வைத்துப் படி என்று கொடுப்பாள் அங்கே பழைய நாளிதழ். அவனை மொட்டை அடித்துவிட்டு அனுப்பி கியூ வரிசையில் யார் 'வீயூ' என்று அழைத்து அவர்களை அமர்த்துவாள்; சமர்த்து; சாதுரியம் மிக்கவள்; ஆளுக்கு ஏற்றபடி அவள் தளுக்கு, குலுக்கு; அவற்றைக் கொண்டு அவர்களை மகிழச் செய்வாள். அவள் மகிழம்பூ; அது அவரவர் மனப் போக்குக்கு ஏற்ப வீசும் மணம் என்பர்.

''பொன்னிற் பதித்த கல் நான்; உன்னை விட்டுப் பிரியேன்'' என்றாள். அவளுக்கு அந்த உவமைக்காகவே சரடு ஒன்று வாங்கித் தந்தான். 'அன்றில் பறவை' நான்; என்றும் உம்மை பிரியேன் என்றாள். இப்படி அவள் பேசிய காதல் உரைகள் பல அவற்றில் மயங்கிவிட்டேன். 'அவள் உயிர்; நான் உடல்' என்று அயர்ந்தேன். இப்படி அவள் புதுப்புது உவமைகள் எழுதித் தந்தாள்; அன்று அவள் கவிதை; இன்று அரளி விதை. ஆட்டுக்கிடாய்போல் முறுக்குக் காட்டுகிறாள். இந்தக் கிறுக்கு அவளிடம் காண்கிறேன். அதற்குக் காரணம் அவள் செல்வச் செறுக்கு; அழகுத் தருக்கு; தொழில் மிடுக்கு.

காட்டுப் பசுபோலக் குழைந்தாள்; பழகினாள்; அழகினாள்; கேட்டுப் பொருள் பெற்றுவிட்டாள். இன்று பச்சைக் கொடி காட்ட அவனிடம் பசுந்தாழை இல்லை. அவள் இச்சைப்படி இருந்த மிச்சமெல்லாம் கொட்டி அழுதுவிட்டான். அவன் வாழ்வு பழுது ஆகிவிட்டது. இந்த ஊரார் அவனைத் தொழுது வாழ்ந்தவர்; இன்று புழுதி என்று அவனைத் தூற்றிப் பேசுவர். அவன் வாழ்வு பழுது ஆகிவிட்டது; பாழ்பட்டது அவன் வாழ்வு.

சின்ன மனுஷன் அவன் சீரழிந்து விட்டான்; அவன் வாழ்வு பின்னப்பட்டுவிட்டது. கன்னிப்பெண் என்று அவன் கருத்து இழந்தான்! கவிதைப் பெண் என்று அவள் ரசிகையானாள். இன்று பிறர் கைகொட்டிச் சிரிக்கும் அளவுக்கு அவள் கைக்கு எட்டியவரை அளந்து கொடுத்தான்; பெருமை இழந்தான், சிறியவன் ஆனான்.

உள்ளத்தில் கள்ளம்; உதட்டில் அன்பு மொழி வெள்ளம். இப்படி இருவேறு நிலை. பிறரை மயக்குவது அவர்கள் கலை; அவன் அவர்களுக்குக் கொடுப்பது அதிக விலை; பேசுவது மானம்; நடத்துவது இழி தொழில், ஏசுவது பிறர்செயலை; காசுவது தம் உடலை. அதை அடைய விரும்புகிறான்—இந்த விடலை; அந்த உடல் சிறிது நேரத்துக்குக் காட்சி; விரும்பினால் அஃது ஆட்சி; பலருக்கும் பகிர்ந்து அளிப்பது அவள் மாட்சி, இவள் மனம் பல வகைப்பட்டது. இதற்குத் தேவை இல்லை. சாட்சி.

# 39. வாழ்க்கைத் துணை நலம்

## (கற்புடைய மகளிர்)

### கற்பின் பெருமை

எண்ணிப் பத்துக் காசு இட்டால் இந்திரன் மனைவியும் வெண்ணெய் உருகுவது போல அந்தக் காசு வீசும் கண்ணியவானிடம் செல்வாள் என்று சொல்லுவார்கள். பிறன் ஆடவன் எவனையும் நோக்காத சீரிய பெண்மை உடையவள் பத்தினி எனப்படுவாள். அத்தகையவளே மாட்சிமை நிரம்பியவள். அவளே மனைவி என்பதற்குத் தகுதி பெறுகிறாள். வாழ்க்கைத் துணைவி என்று கூறிக் கொள்ள அவளுக்கு அருகதை உண்டு. மற்றையவர்கள் ஏதோ ஒட்டி உறவாடுவார் என்றுதான் மதிக்கப்படும். கற்பே பெண்ணுக்குப் பெருமை சேர்க்கிறது. அத்திண்மை வாய்க்கப் பெறின் பெண்களுள் அவளைவிடச் சிறந்தவள் வேறு ஒருத்தி உளர் என்று உரைக்க இயலாது.

### சிக்கனம்

குடத்து அளவு நீரே கிடைக்கும் வறுமை உற்ற காலத்தும் கடலே புரண்டு வருவது போலக் கிளைஞர்கள் சுற்றத்தினர் விருந்து என்று வந்தால் அவர்களை அருந்த வைக்கும் மனத் துணிவும் செயற்பாடும் மிக்கவள். மனைவி என்று மதிக்கப்படுவள். விருந்து கண்டபோது என் செய்வது என்று விம்மும்; கம்மிய குரல்கள் அவை அவர்கள் இயலாமையை வெளிப்படுத்தும்.

வீட்டுக்குச் சுவர் வைத்தான்; அது வீண் என்று இடிந்து விழுகிறது. இலைகளை வைத்துக் கூரை வேய்ந்தான். அவை வலைகளாகக் கிழிபட்டுச் சிதறிவிட்டன. ஒழுகல் கூரை; அழுகல் சுவர்கள்; வழுக்கல் தரை. இதில் எங்கே படுப்பது; எப்படி உடுப்பது; எப்பொழுது சமைப்

பது? எப்படி நடத்துவது குடித்தனம்; இங்கு இருப்பது மடத்தனம் என்று தன் துரைத் தனத்தைக் காட்டாமல் சாமர்த்தியமாக ஒன்றி வாழ்வது அது மனைவாழ்வு; ஓட்டைச் சட்டிதான்; கொழுக்கட்டை வேகும் என்று கொழுநனிடம் உரைப்பவளே பழமுதிர் சோலை ஆவாள். மற்றவர்கள் பாலைவனச்சாலை ஆவர்.

**மாண்புகள்**

அவன் எப்படி அவளைத் தேர்ந்து எடுத்தான்? அவள் தகுதிகள் யாவை? பார்க்க லட்சணமாக இருக்கிறாள்; அவள் கணவனை மகிழ்விக்கவே உடுத்துகிறாள். அச்சம். நாணம் இவை அவளிடம் பிச்சை கேட்டு இடம் பெறுகின்றன; ஊரார் மெச்ச அவள் வாழ்க்கை அமைத்துக் காட்டுகிறாள். வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்ன அவனிடம் வேடிக்கையாகப் பேசுகிறாள்; ஊடலும் கொள்கிறாள். உப்புக்கரிக்காமல் பின் உபகாரியாக மாறுகிறாள். கொஞ்சிப் பேசிக் குலவ இடம் அளிக்கிறாள்; காதல் செய்கிறாள். இவள்தான் அவன் தேர்ந்தெடுத்த பெண்; அவள் அன்று மணப்பெண்; இன்று குணப் பெண். வீட்டு மனைவி.

**மனைவியின் கூற்று**

'என்றைக்கும் என் கணவர் எனக்குப் புதியவர்தான்; பழகியவர் என்பதால் உடனே குழைந்து அவர் அழைப்புக்கு இழைவது இல்லை. 'வெட்கம்' அது என்னைவிட்டுக் கெடுவது இல்லை. நாணம் அஃது என்னை விட்டு விலகுவது இல்லை. ஐயா இந்தப் பரத்தையர் இவர்களுக்கு வெட்கம், மானம், சூடு, சொரணை எதுவுமே இல்லை. கண்டவுடன் கருத்து இழப்பர். பொறுத்துப் பழகார். இழுப்புக்கு இழைவார். அவர் அழைப்புக்கு அலைவர். வெட்கக்கேடு; இல்லை இவர்களுக்கு மானம் சூடு.'

## கணவனின் கூற்று

நாணம் மிக்கவள் அவள்; என் நா அவள் நலம் எடுத் துரைக்கிறது. உள்ளத்தில் காதல் உணர்வு உடையவள்; நூல் கற்ற அறிஞர்களின் பேரறிவாக அவள் திகழ்கிறாள். வள்ளல்கள் வாரி இறைக்கும் ஒண்பொருளாக உயர்கி றாள். இன்பத்தை அள்ளித் தருகிறாள். வீரனின் கை வாளாகக் கூர்மைமிக்கவள்; எதையும்திறம்படச் செய லாற்றுகிறாள்.

### பாணனும் தலைவியும் உரையாடுதல்

பாணன் ஒருவன் தலைவியை நாடிச் சமாதானம் செய்விக்க வருகிறான். அவன் பாணன்; பண்ணொடு பாடவல்லவன்; இயையாதவரை இயையும்படி செய்வது அவன் தொழில். ஊடல் தணிக்கஅவன் தூதுவன்; தலைவன் வேண்டுகோளுக்கு தலைவியை இயையும்படிப் பேசி அசைய வைக்க முயல்கிறான். அதற்குத் தலைவி கூறுகிறாள்.

''ஐயா திறமைசாலி; கறுப்புக் கொள்; சிவப்புக் கொள்; அவன் நிற பேதம் பார்க்காமல் இரண்டையும் சம விலைக்குப் பேசி வாங்கிக் கொண்டு வந்துவிட்டதாக அவன் பெருமை பேசினான், இவன் வியாபாரம் செய்யத் தக்கவன் என்று யார் மதிப்பார்கள்?''

''கொள் சிவப்பாக இருக்கிறதே என்று அதனையும் கொள்முதல் செய்துவிட்டேன்'' என்கிறான். பரத்தை யையும், சிரத்தையையும் ஒன்றாக மதிக்கிறார் உம் தலைவர். சிரத்தையோடு வாழ்க்கை நடத்தும் எனக்குத் தரும் மதிப்பையே அவளுக்கும் தருகிறார். இவர் புத்தி அந்த வியாபாரியின் புத்தி என்றுதான் கூறமுடியும். நிறம் இவரை மயக்கிவிட்டது. கறுப்புக்கொள் விருப்பத்திற்கு உரியது. சிகப்புக் கொள் தூர எறிய வேண்டியது. இந்தப் பேதம் கூட அறியாத வேதம் உம் தலைவரது. இந்த நாதம் நம்மிடம் இசையாது, அசையாது? என் மனம் அசையாது.

''பாணனே நீ வீணன்தான்; அளக்கின்றாய்; வளமான வார்த்தைகளைக் கொண்டு. 'அவள் காட்சிக்கு இனியள், யான் மாட்சிக்கு உரியள்' என்றெல்லாம் பேச்சுக்குச் சொல்கிறாய். உடுக்கை அதற்கு இருகை; இடக்கை, வலக்கை; வலக்கைதான் ஓசை பெறுகிறது. தட்டுவது அங்கே; முட்டுவது இங்கே. உறவாடுவது அங்கே. ஒட்டுவது இங்கே. பாணனே! தேவாரம் பாடி மகிழ்வது அங்கே. வீட்டுத் தாழ்வாரம் தேடுகிறார் இங்கே. நிறுத்து உன் ஆரவாரம்; சென்று வருகிறார் அங்கு வாராவாரம்; அதை மறுத்துப் பலனில்லை. நிறுத்து உன் தூது; இதை அவரிடம் ஓது.

''வளம் மிக்க வயல்களை உடைய ஊரன் அவன் என் தலைவன். ஈ வந்து அவனைத் தொட்டாலும் உடனே அதை ஓட்டிவிட்டு மறுவேலை பார்ப்பேன். இன்று தீ ஓட்டியதுபோல அவள் அதுதான் அந்தப் பரத்தை அவனை ஒட்டிக் கொண்டு இருக்கிறார். இதை எப்படி நான் தட்டிக் கேட்காமல் இருக்க இயலும்? பாணனே அவள் தோள் தழுவிய என் கோனைக் கேள் என்று எப்படிக் கொள்வேன். நீ இது முறையா? அவனைக்கேள்.

''என் கணவர் எனக்கு மட்டும்தான் சொந்தம்; அவர் காட்டுவது பந்தம் என்றாலும் அவர் என்னை இழுத்துத் தழுவுவது நிர்பந்தம்தான். வெட்கம் என்னை விட்டுக் கெடுவது இல்லை. அவர் தொடும்போது எல்லாம் எனக்குப்புதுமை; விலகி நிற்பது என் பழமை. அவருக்கும் எனக்கும் உள்ளது கிழமை. இந்த ஊர்ப் பரத்தையர் புதுப்புது ஆட்களோடு வதுவை கொள்கின்றனர். புன்சிரிப்பு; அவர்களுக்கு மத்தாப்பு. கேடு கெட்ட பெண்கள்; தேடினாலும் இத்தகையர்கள் கிடைக்கமாட்டார்கள்.

"வண்டு மொய்க்கும் மலரினான்; அவன் என்னைக் கண்டுகொள்வதே இல்லை. அவன் எனக்கு அருளும் என்று கூறுகிறாய், அது வெறும் மருளே. இன்று நான் அவனுக்கு நுனிக் கரும்பு; பரத்தை அடிக் கரும்பு. அவள் அடியை அவன் விரும்புகிறான். அவன் அவள் மடியைப் பிடித்து விட்டான். இனி நீ இடை வந்து இணைக்க வந்தால் அமையும் உனக்கே வசை. வெல்க பாண! செல்க அவ ரிடம்."—இவை தலைவி கூற்று.

## 40. காதல் பாட்டு

### (காமத்துப் பால்)

பசலை; அது என் நிறத்தை மாற்றும். என் விச னத்தை எடுத்துக்காட்டும். விளர்த்து விட்டேன் என்ப தைக் கிளர்த்திவிடும். அவர் என்னைத் தழுவுவார்; சிறிது நழுவிவிட்டால் உடனே இந்தப் பசலை என்னை இறுகப் பிடித்துக்கொள்ளும். முயங்காத இடத்து இந்தப் பசலை வந்து பாயும். அவரோடு கூடுவது; அதனோடு நிற்பது சுவை தருவது இல்லை. ஊடுவதும் தேவைப்படுகிறது. உப்பில்லாப்பண்டம் குப்பையிலே; ஊடல் இல்லாத கூடல் அதில் நயம் இல்லை, அழகு இல்லை. அறிவுச்சுவை இல்லை. ஊடி விடுகிறேன் அதுவே நீடித்துவிடுகிறது கூடுவதற்கு நேரம் கிடைப்பது இல்லை. வாள் போல் வைகறை வந்து தோள் தோய் காதலரைப் பிரித்து விடு கிறது.

பொருள் தேடிச் சென்ற காதலர் மழைக்காலம் வரும் முன் விழைந்து வருவதாகச் சொற்கள் இழைத்தார். நாள் ஒற்றி என் விரல்கள் தேய்ந்து விட்டன. வழி பார்த்து விழி

கள் பொலிவிழந்து விட்டன. எங்கள் மண நாள் முரசு போல இடி முழக்கம் கேட்கிறது. மழை வருகிறது என்ப தால் ஊரவர் மகிழ்கின்றனர். நான் மட்டும் ஏன் மகிழ முடியவில்லை. மழை நீர் என் கண்ணீராக மாறுகிறது. பிரிவு அரிது; சாப்பறைபோல அது எனக்கு விளங்குகிறது. நெய்தல் பறை இரக்க உணர்வைக் கிளறுகிறது. அது போல இந்த மழை பெய்தல். என் அழுகைக் குரலை அதி கப்படுத்துகிறது. காரோ வந்தது; அவர் தேரோ வர வில்லை; யாரோ என் துயர் அவருக்கு அறிவிப்பர்?

கம்மியத் தொழில் செய்யும் கருமகன்கள் தம் கருவி களை ஒடுக்கிக் கட்டி வைத்துவிட்டனர். உலைக்களத் தீ அணைந்துவிட்டது. அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வீடு திரும்புகின்றனர். மாலைப் பொழுது பூமாலை தொடுத்தாள் தலைவி; மாலை மாலையாகக் கண்ணீர் வடிக்கிறாள். பொன்மாலைப் பொழுதாகக் கழிய வேண்டிய அது புன்மாலையாகிவிட்டது. தன் துணைவர் தன்னோடு இல்லை. இணையில்லாத இன்ப வாழ்வு அவளை விட்டு இரிந்துவிட்டது. கனவுகள் முறிந்து விட் டன. இன்பப் பொழுது சரிந்துவிட்டது. மாலை மயக் கத்தில் அவர் உழன்று வருந்தி அலமருகின்றாள். என் செய்வது? ஆற்றுவது என்பது இயலாத ஒன்று; அவர் வருகைதான் மாற்றம் செய்ய இயலும். அதுவரை? இப் படித்தான் மாலைப்பொழுதுகள் மாலை தந்து அந்த மாலாவை அழச் செய்துகொண்டுதான் இருக்கும். அவள் மட்டுமா? கன்னிப் பெண்கள் கதைகளைக் காவியத்தில் தீட்டினால் இந்த அழுகை என்பது அழியாத அத்தி யாயம். பிரிவு அது பாலை; அவர் வந்து சேர அவள் காத் திருக்கிறாள் அதனால் அது முல்லை; வேறுவழியே இல்லை;

## தலைவன் தலைவியின் பிரிவுக்கு வருந்துதல்

காலையரும்பிப் பகல் எல்லாம் போதாகி மாலை மலரும் மங்கையின் காதல் நோய்; கதிரவன் கால் சாய்க்கின்றான். அதிரவரும் மாலைப்பொழுது கண்டு அவள் கண்கள் நீர் நிறைக்கின்றன, அவள்தன் மெல்லிய விரலால் அதனைச் சிதற அடித்துத் தனிமையில் பதறுகின்றாள். மோனம் அங்குக் குடி கொள்கிறது. விம்முகிறாள்; அவள் குரல் கம்முகிறது. கும்மிருட்டு வந்து குவிகிறது. இதற்கு எல்லாம் காரணம் என்ன? வருகிறேன் என்று குறித்த நாளில் அவர் அங்குச் செல்ல இயலவில்லை. அவர் தோள் மேல் தன் கைவைத்து உறக்கமின்றி இரவு கண்விழித்து என் குற்றத்தையே அவள் எண்ணுவாளோ,என் செய்வது? வினை முடிந்ததும் வீடு திரும்ப விழைகிறேன். நான் வரும் நாள் எண்ணி விரலைச் சுவரில் தேய்த்து நாட்குறி வைக்கிறாள். அவள்விரல் தேய்கிறது. என்னை எதிர்பார்த்துப் பார்த்து அவள் விழிகள் ஒளி இழக்கின்றன.

## தலைவன் தலைவியின் நலம் பாராட்டுதல்

கயல் ஒத்தன அவள் கண்கள்; அவற்றைக் கயல்மீன் என்று கருதிச் சிரல் பறவை அவற்றைக் கொத்திக் கவர அருகில் தத்திச் செல்கின்றன. அந்தோ! அங்கே வில்லின் வளைவை அவள் புருவத்தில் காண்கிறது. களம் கண்ட வீரன் உளம் அஞ்சிப் பின்வாங்குகிறான். அதுபோல் இந்தச் சிரல் பறவையாகிய மீன்கொத்தி அஞ்சிப் பின் வாங்குகிறது. அவள் விழிகள் கயல்மீன் என்றால் புருவங்கள் வில்லின் வளைவு.

# தலைவன் பின் சென்ற தலைவி குறித்துத் தாய் வருந்துதல்

அரக்குப் போன்று சிவந்த ஆம்பல் அன்ன இதழ்களை உடையவள்; பருக்கைக் கற்களை உடைய தெருக்களில் அவள் எப்படித்தான் நடந்தாளோ? இதற்கு முன் கால் சிவப்பு ஊட்டச் செம்பஞ்சுக் குழம்பு பூச அவள் 'பைய பைய' என்று வருந்திக் கூறுவாள். பஞ்சு கொண்டு மெல்லப் பூசினும் அஞ்சும் அவள் மெல்லடிகள். அந்தப் பரற் காட்டை எப்படித்தான் கடந்து செல்கின்றனவோ! தலைவன் உடன் போவதில் காடும் அவளுக்குக் கரடுமுரடு என்று படவில்லை; அதுவியப்புதான்.

# தலைவியின் பிரிவுத்துயர்

ஓலைக் கணக்கர் அவர்களும் தம் பணிகளை முடித்து வைத்துவிட்டு மாலைப் பொழுதில் ஓய்வு கொள்கின்றனர். அத்தகைய புன் மாலைப் பொழுதில் வானத்தைப் பார்க்கிறாள். சிவந்த வானம் அதுவும் கரியப் போகிறது, அந்நேரத்தில் தன்னை மணந்தவன் இப்பொழுது தணந்து தன்னைவிட்டுப் பொருள் தேடப் புது இடம் தேடிச்சென்று விட்டான். அவன் வருகைக்கு ஏங்கும் இவ்வறியவள் சூடிய மாலையை அறுத்து எறிந்துவிட்டு அழுகிறாள். முலை வனப்பு? அதன்மீது கொண்ட வனப்புப் பூசிய சாந்தத்தை ஏசியவளாய்க் கலைத்து மனம் குலைகிறாள். மாலை வருவார் என்று வழி பார்த்தாள். பூப் புனைந்தாள்; பூசிய சந்தனம் பூவைக்கு வெறுப்பைத் தந்தது. அலங்கரித்துக் கொண்டிருந்த அவள் கலங்கியவளாய்க் கலுழ்கின்றாள்,

## தோழியுடன் தலைவி உரையாடல்

''காளை ஒருவன் வழி நடத்த நாளை அவன் பின் எப்படி நடப்பாய் என்று வினவுகின்றாய்! குதிரை ஒருவன் பெறுகிறான்; முன்பின் ஏறியது இல்லை. அதற்காக அந்தக் குதிரையை அவன் கட்டு அவிழ்த்தா விட்டுவிடுவான். அதில் ஏறிச் செல்ல அவன் தானாகக் கற்றுக் கொள் கிறான். 'ஏய் எப்படி முடிந்தது' என்றா அவனைக் கேட்டுக் கொண்டிருப்பர். அப்பொழுதே வரும் வேகம்; அதற்கு ஏற்ற விவேகத்துடன்.'' என்கிறாள் தலைவி.

## பிரிந்த பின் தாய் மகள் செயலை எண்ணிப் பார்த்தாள்

''நேற்று என்னை வந்து என் மகள் மார்போடு கட்டி அணைத்து எனக்கு முத்தமிட்டாள்; புல்லினாள்; தழுவி னாள்; விம்மினாள்; எனக்கு வியப்பு ஏற்பட்டது; அதற்கு அப்பொழுது அறிகுறியாது என்பதை அறியேன். என்ன! இவள் திடீர் என்று சிறு குழந்தையாகி விட்டாளே என்று வியந்தேன், முகத்தில் அவள் வியர்வை முத்து எனத் தெரிந்தது. அவள் என்னைச் சேர்த்து அணைத்துக் கொண்டது ஏன்? காளை அவனோடு மறுநாளை அவள் செல்லத் துணிந்தது அறியேன். வேங்கை கண்டு வேகமாக ஓடும் மான் கூட்டம் நிறைந்த காட்டுவழியே அவள் செல்லத் துணிந்து விட்டாள் என்பதை இப்பொழுதே கேட்டு அறிகிறேன். அவன் வேட்டது அது; அதற்கு அவள் காட்டியது அது.

## பிரிந்த தலைவியின் கூற்று

''கண்மூன்று உடையவன் சிவன். அவன் பார்வைக்கு எப்படி இந்தக் காமன் தப்பிப் பிழைத்தான்? அவன் எரி பட்டு இருந்தால் என்னை வெறிகொள்ளச் செய்ய மாட்டான். இந்த அரவு இந்த இரவு ஏன் இந்த நிலவை விழுங்காமல் விட்டு வைத்திருக்கிறது; அரவே நீ எனக்குப் பகையாகின்றாய்! இந்தக் காக்கை அதற்கு என்ன கேடு? பொழுது விடிவதற்கு அது வந்து ஏன் கரையாமல் இருக்கிறது? இந்த இரவு நீள்கிறது. அதனை மாளச் செய்வதற்கு ஏன் இன்னும் இந்தக் காக்கை எழவில்லை? என அன்னை எனக்குக் காவல், அவள் அடக்குகிறாள் என் ஆவல். என் தலைவன் வர இயலாமைக்கு அவள் ஒரு தடை; இல்லாவிட்டால் நான் எழுந்து நடப்பேன் நடை; எனக்கு அவள் முடை.'' என்கிறாள் தலைவி.

# உள் தலைப்புகள்

அ. அறத்துப்பால்


| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வம் நிலையாமை | — | 1 |
| 2. | இளமை நிலையாமை | — | 4 |
| 3. | யாக்கை நிலையாமை | — | 8 |
| 4. | அறன் வலியுறுத்தல் | — | 11 |
| 5. | தூயது அன்மை | — | 17 |
| 6. | துறவு | — | 23 |
| 7. | சினம் | — | 27 |
| 8. | பொறையுடைமை | — | 29 |
| 9. | பிறர்மனை நயவாமை | — | 34 |
| 10. | ஈகை | — | 37 |
| 11. | பழவினை | — | 41 |
| 12. | மெய்ம்மை | — | 46 |
| 13. | தீவினையச்சம் | — | 52 |


ஆ. பொருட்பால்


| | | | |
|---|---|---|---|
| 14. | கல்வி | — | 56 |
| 15. | குடிப்பிறப்பு | — | 63 |
| 16. | மேன்மக்கள் | — | 68 |
| 17. | பெரியாரைப் பிழையாமை | — | 73 |
| 18. | நல்லினம் சேர்தல் | — | 77 |
| 19 | பெருமை | — | 81 |
| 20. | தாளாண்மை | — | 86 |

21. சுற்றந்தழால் — 90
22. நட்பாராய்தல் — 94
23. நட்பிற் பிழை பொறுத்தல் — 98
24. கூடா நட்பு — 100
25. அறிவுடைமை — 103
26. அறிவின்மை — 106
27. நன்றியில் செல்வம் — 110
28. ஈயாமை — 113
29. இன்மை — 117
30. மானம் — 120
31. இரவச்சம் — 124
32. அவையறிதல் — 130
33. புல்லறிவாண்மை — 135
34. பேதைமை — 141
35. கீழ்மை — 148
36. கயமை — 152
37. பன்னெறி — 156
38. பொதுமகளிர் — 162
39. கற்புடை மகளிர் — 165

இ. இன்பத்துப்பால்

40. காமத்துப்பால் — 169